ரிஜிஸ்டர் நெ. 2041. தனிப்பிரதி விலை ஒரு அணா.

குடி அரசு

வருட சந்தா முன் பணம்	— ரூ.	3—0
6-மாத சந்தா ,,	— ,,	1--12
வெளி நாட்டிற்கு ,,	— ,,	5—0

ஞாயிறுதோறும் வெளிவரும்.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 ச்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 7 | ஈரோடு, பிரஜோத்பத்தி-வூ சித்திரை-மீ 5 -உ (17—4—1932) | மலர் 51

தாதுபுஷ்டிக்கு

பழநி சி. எம். சாமி

மன்மத குளிகை

யை உபயோகியுங்கள்.

நீங்கள் என்றும் எதிர்பாராத ஆனந்தமும், மன உறுதியும், தேகவலிமையும், இல்லற சுகமும் அடைவீர்கள்.

புட்டி 1க்கு ரூ. 2. தபால் சார்ஜ் வேறு.

பழநி சி. எம். சாமி

குருதாம்பர பஸ்பம்

சகல வியாதிக்கும் கைகண்டது.

தீராத திமிர், குஷ்டம், சூலை, மதமப்பு, தடிப்பு பத்து, கிரந்தி; ஆராத குழிப்புண், குறை நோய், ரணங்கள் முதலிய சகல வியாதிகளும் கண்டிப்பாய் தீரும். 50 வேளை பஸ்டம் விலை ரூ. 25. 25 வேளை 12-8-0. ஏழைகளுக்கு பாதிவிலை.

ஏராளமான சற்சாட்சிகளைக் கேட்லாக்கில் பார்க்கலாம்.

அந்நிய தேசவாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C. மலையப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் ஹால் பழனி. S. I.

டாக்டர் சிங்காரம் அவர்களின்

மிகவும் குணமுள்ள மருந்துகள்.

உலகப்பிரசித்திபெற்ற

மஹா சந்தனாதித் தைலம்.

அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது. கண் பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இந்தத் தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

கை, கால், கண் எரிச்சல், கண் சிகப்பு, கண்ணில் நீர்வடிதல், கண் பூ, பீளை சாருதல், மேக நீர், வெள்ளெழுத்து, நித்திரையின்மை, ஒருத்தலை நோய், பீனிசம், காதிரைச்சல், காதுமந்தம், மண்டைக்குத்து முதலிய சிரசிலுண்டாகும் பல நோய்களைக் குணம்செய்யும். வெட்டைச்சூடு, திரேககாங்கை முதலிய எல்லாவித உஷ்ணத்தையும் போக்கி சரீரத்திற்கு குளிச்சியையும் நல்ல சுகத்தையும் கொடுக்கும். 24 அவுன்ஸ் டின் ரூ. 4 12 அவுன்ஸ் டின் ரூ. 2—2—0

சாலாமிசிரி லேகியம்.

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

கை கால் அசதி, சோம்பல், இடுப்புவலி, நரம்பு தளர்ச்சி, சொப்பன ஸ்கலிதம், சம்போக காலத்தில் ஏற்படும் துரித ஸ்கலிதம், முதலிய கொடிய வியாதிகளை நீக்கி தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி வீரிய விர்த்தியை உண்டாக்கும். மனதுக்கு உற்சாகத்தையும் சுறுசுறுப்பையும் உண்டாக்கும். சம்போக இன்பத்தை முற்றிலும் அநுபவிக்கச் செய்யும். சாப்பிட மதுரமுள்ளது.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0

மகா வில்வாதி லேகியம்.

அஜீரணம், வயிற்றுப்பிசம், பசிமந்தம், நெஞ்சில் கரகரப்பு, குலை எரிவு, வாயில் ஜலம் ஊரல், நெஞ்செரிவு, வாந்தி, தலைசுற்றல் வயிற்றுவலி, அஜீரணத்தால் ஏற்படும் வயிற்றுப்போக்குகள் நாவரே... கம், மயக்கம், கை, கால் குடைச்சல், முதலிய பித்தம், பித்த வா... சம்பந்தமான பலவித வியாதிகளை நிவர்த்தி செய்து நல்ல பசிநீய... தையும், ஜீர்ண சக்தியையும் உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ...

அமிர்த சஞ்சீவி லேகி...

மனிதருக்குண்டாகும் நோய்களுக்குப் ப...
லும் மலசிக்கல் ஓர் முக்கிய காரணமாயிரு...
சிக்கலை உடனே நிவர்த்திக்கவேண்டும். ...
சிக்கலையும் நீக்கி, தாராளமாய் காலை, ...
செய்வதுடன், வாய்வு, தொந்த...

பலவித பழச் சத்துக்களு...
தயார் செ...ப்பட்...
பியர் யா...

எல்லா மருந்துகளுக்கும் பாக்கிங் தபால் செலவு பிரத்தியேகம். மலா...
விலாசம் தெரிவித்தால் முழு விவரமடங்கிய கேட்லாக் இனமாய் அனுப்பப்படும்...

டி. ...

ஆனந்தரின்

இந்திய பற்பசை (டூத்பேஸ்ட்)

பற்களைப்பளிங்கு போலாக்கும். எல்லா ஷாப்புகளிலும் கிடைக்கும்.

தமிழ் வைத்தியசாலை,
221, தங்கசாலை வீதி,
சென்னை.

புதுவை முரசு

ஆசிரியர்:-
அ. பொன்னம்பலனார்,
அவர்கள்.

24 பக்கங்களோடு அழகிய முறையில் திங்கட்கிழமைதோறும் வெளிவரும் சுயமரியாதைச் செந்தமிழ் வாரப் பத்திரிகை. வருட சந்தா ரூ. 3. வெளிநாடு ரூ. 5. மாதிரிப்பிரதி இனம்!

மானேஜர்,
"புதுவை முரசு"
புதுச்சேரி (F. இந்தியா)

"சாமிகளின் அடிமை"

"இந்திய மாதா" என்னும் நூலை இயற்றிய மிஸ். மேயோவால் எழுதப்பட்ட ஆங்கில நூலின் மொழிபெயர்ப்பு. இதில் ஹிந்துக்கள் என்போரின் கடவுள், மதம் என்பவற்றின்பேரால் அநுஷ்டித்துவரும் கொடிய, அநாசாரபழக்கவழக்கங்களைக்கண்டுணரலாம், இனிய தமிழ், எளியநடை, ருசிகர கதைகள்.

அசல் விலை ரூ. 1—8—0.
இப்போதைய விலை ரூ. 0—12—0.

கிடைக்குமிடம்:—
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

...ருஷியின் வரப்பிரசாத ஔஷதம்.
...தீராதகர்மநோயென்றெண்ணி
கஷ்டப்படுவதேன்?
...டாகின்ற எவ்வித குஷ்ட
...த்துவியாதிகளுக்கும சீரான
...ங்களையும் சாத்
...கள்.
...துங்கள்

...acy
...ilon S I.

Read.
The 'Citizen'
and become a
True Citizen.

The only Monthly Magazine in India purely devoted to the civic, Social and economic Interests of the Indians. Annual Subscription Rs. 2—0—0.

For advertisement please apply to:—
The Publisher
The Citizen
86, East Andar Street,
Teppakulam, Trichy.

சத்தியாக்கிரகமா? சண்டித்தனமா?

மேற் கண்ட 6—9—31 ௳ தேதி "குடி அரசு"ல் வெளியான "சத்தியாக்கிரகமா சண்டித்தனமா" என்ற தலையங்கத்தை புத்தக ரூபமாக வெளியிட்டிருக்கிறோம். இதை விநியோகிக்க விருப்பமுள்ள சுயமரியாதை அன்பர்கள் முன்பணமனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம். 100 புஸ்தகம் விலை ரூ. 0—12—0.

1 ரூ. ஸ்டாம்பு அனுப்பினால் 100 புஸ்தகம் புக் போஸ்டில் அனுப்பப்படும்.

மானேஜர்,
குடி அரசு, ஈரோடு.

சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

'தமிழன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருட சந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0

ஆசிரியர்: ஜி. அப்பாதுரையார்,
விலாசம்:—
மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை P. O.
கோலார் தங்கவயல் (S. I.)

முன்னேற்றம்.

வாரப்பதிப்பு.
சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது
உள்நாடு சந்தா $. 5—0—0
இந்தியாவுக்கு ரூ. 8—0—0

ஆசிரியர்:- கோ. சாரங்கபாணி.
விலாசம்:—
மானேஜர்: "முன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்.

"போர் முரசு"

வாரப்பதிப்பு.
ஆசிரியர் ச. ம. சி. பரமசிவம்
தனிப்பிரதி காலணா.
வருட சந்தா ரூ. 1—8—0.
"போர் முரசு"
19, பெரிய செட்டி தெரு,
உறையூர்—திருச்சி.

சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1330 ௵ வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன்கூடியது)
M. S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L.,
அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.

விலை ரூபா 2—0—0. வி பி செலவு ரூ. 0—5—0.

மானேஜர்,
குடி அரசு புத்தகசாலை, ஈரோடு.

தாது புஷ்டிக்கு "கெய்ரோடைன்" சாப்பிடுங்கள்.

இந்தியா கவர்ண்மெண்டில் ரிஜிஸ்தர் செய்தது. நபும்சகர்களுக்கும் அளவு மீறிய தாதுபுஷ்டி தரும். உண்மையான நற்சாட்சிகளடங்கிய பெரிய புத்தகம் இனமாக அனுப்புகிறோம். விலாசம்:

ஆர். எஸ். பதி அன்கோ (ரிஜிஸ்டர்டு) மதுரை.

(The Work before us)
நாம் செய்யவேண்டிய வேலை என்ன?

சமதர்ம விளக்கம்.

[தோழர் M. சிங்காரவேலு B. A., B. L.,]

(XII)

(சென்ற வாரத்தொடர்ச்சி)

மனிதனுக்கு உண்ணவும், உடுக்கவும், வசிக்கவும், ஞானமடையவும் வேண்டியதை சாதாரணமாக அளவிடக்கூடும். இந்த அளவுக்கு மிஞ்சியதெல்லாம் வீணே செலவாகின்றன. அளவுக்கு மிஞ்சிய வருமானத்தை, வாழ்வுக்கு போதுமானவை இல்லாதாருக்கு, வினியோகிப்பதுதான் சமதர்மம். ஆனால், வலியோரின் ஆதிக்கப்பெருக்கால் அவர்கள் இஷ்டப்படி எல்லாம் மட்டுமிதமின்றி, வம்புக்கும், தும்புக்கும், கள்ளுக்கும், சுள்ளுக்கும், பம்பைக்கும் பேய்க்கும், பரத்தையர்க்கும், தங்கள் வாழ்வுக்கு மிஞ்சியுள்ள பொருள்கள் யாவும் செலவிடப்படுகின்றன. தாங்கள் கஷ்டப்படாது வந்த பொருள்கள் யாவும், துர்வினியோகிக்கப்படுகின்றது. இவ்வித துர்வினியோகத்தைக்காப்பதற்குத்தான், சொத்துரிமையைக்காப்பதென்பது பொருளாகும். துர்வினியோகத்தை ரட்சிக்கவே, சொத்துரிமை பாதுகாப்புகளை, அரசியல் திட்டங்களாக ஏற்படுத்துகின்றார்கள். இதனைத்தடுத்து, மிகுதி நின்ற செல்வங்களை பலருக்கு உபயோகப்படும்படி செய்வதே, சமதர்ம வாதிகளின் கடமைகளில் முதன்மையாகும்.

சுருங்கச்சொல்லில், மனித வா வாழ்வுக்கு வேண்டியவரை, உலகப்பொருள்கள் யாவும் உபயோகிக்கவேண்டும். அதற்கு மிஞ்சி நிற்கும் செல்வமனைத்தும், உழைப்போர் பலருக்கு உபயோகமாகும்படிச் செய்தல் வேண்டும். தற்போதுவழங்கும்தனிஉடைமை பாதுகாப்புகளை மாற்றி, பொது உடைமை பாதுகாப்புகளை சட்டங்களில் திட்டமாக்குவதுதான் சமதர்மமாகும். சமதர்மத்திற்கு நேர்விரோதமாய் இருப்பவை நமது இந்திய மதமும் ஜாதியுமே. எந்த காலத்திலும், எந்த தேசத்திலும் தனிஉடைமைக்கு (Individual Ownership) ஆதரவாக நின்று வந்த ஸ்தாபனங்களில், மதஸ்தாபனமொன்று. இந்த மதஸ்தாபனங்களில் அடைபட்டுக் கிடக்கும் செல்வம் எவ்வளவு! மக்களுக்கு உபயோகமற்றுப் போவது எவ்வளவு! வியர்த்தத்தில் செலவாகும் செல்வம் எவ்வளவு! கோர்ட்டுக்கும், கொத்தளத்திற்கும் தாசிக்கும், வேசிக்கும் செலவு செய்வது எவ்வளவு! இவ்வளவு செல்வமும், "கடவுள்" பெயரால் வீணே போகின்றன. உலகிலுள்ள செல்வத்தில், மூன்றிலொரு பங்கு கடவுளுடையனவாகும்!! இவ்வளவு செல்வமும், நியாயமாகவும், ஒழுங்காகவும், பசித்தோருக்கும், நோயுற்றோருக்கும், அறிவு அபிவிருத்திக்கும், ஞான ஆராய்ச்சிக்கும் உபயோகப்படுத்தாமல் தூபதீபத்திலும், மத்தாப்பு தீவர்த்திகளிலும், பாழாக்கும் அபிஷேகங்களிலும், தாசிவேசிகளிலும், குருமார்கள், அர்ச்சகர்கள், பாதிரிகள், மௌலானாக்கள் முதலிய வேஷக்காரர்களுக்குச் செய்யும் செலவுகளிலும், செலவு செய்யும் மடத் தன்மையை என்னவென்று சொல்வது? இவ்வளவுக்கும், அரசியலிலும், அரசியலை நடத்துவோரும், பெரியோர் என்று வழங்குவோரும், கண்மூடிக்கொண்டு இருந்து வருவதோடு, இவ்வித அநியாயச் செலவுகளை காப்பதற்கும் உதவி இருந்தால் உலகம் உய்வது எக்காலம்? மதங்கள் அக்கிரம காரியங்களுக்கு எவ்வளவு உதவியாயிருந்து வருவதைப்பற்றி முன்பே விளக்கியுள்ளோம். துஷ்ட அரசுகள் செய்யும் துர்க்காரியங்களுக்கெல்லாம், மதங்கள் ஆதரவாய் இருந்து வந்திருக்கின்றன. சண்டை சச்சரவுகளுக்கும் வழக்குவில்லங்கங்களுக்கும், ஆசீர்வதிக்காத மதம் எது? கொலை பாதகங்களுக்கு ஆதரவாக இல்லாத மதங்களேது? கொடுங்கோலரசை ரட்சிக்காத சமயங்களேது? இக்கொடுமைகளை ரட்சித்துவரும் மதங்களை, பாதுகாப்பதென்றால், இதனை மதவெறியென்று சொல்வதா? அல்லது வஞ்சனை என்று சொல்வதா? இவ்வளவுக்கும் கண்மூடிக்கொண்டிருப்பதுமல்லாமல், "எங்கள் அரசு மதத்திற்கு அதீதப்பட்டதென்றால்", யார் தான் இதை நம்புவார்கள்? இவ்வளவு படுகொலைகளுக்கும், மகாபாதகங்களுக்கும், வஞ்சனைகளுக்கும், ஆதாரமாயிருந்து வருவது எதுவெனில் பொருளாதார உதவியென்றறிக!

மதஸ்தாபனங்கள் யாவும் கஷ்டப்படாத செல்வத்தைக் கொண்டு மூடபக்தியை வளர்ப்பதோடு, துஷ்ட அரசியலையும் ஆதரித்து வருகின்றன. இவ்விரண்டு துர்ப்பிரயோசன விஷயமாகவே மூட மதங்கள், மூட அரசுகளை வாழ்த்துவதும், மூட அரசுகள் மூட மதங்களைப்பாதுகாப்பதென அறிக. இக்கொடுமையான சம்பந்தம், ஒழியவேண்டுமாயின், மதஸ்தாபனங்களின் பொருளாதார லாபத்தைநிறுத்திவிடவேண்டும். அவ்விதம் மதஸ்தாபனங்களின் செல்வாக்கை ஒழித்து, அச்செல்வாக்குகளை பொது மக்களுக்கு பிரயோசனமாகும்படி தக்க ஏற்பாடுகள் செய்யவேண்டுமாயின், சமதர்ம அரசியலொன்றுதான் அதனை சித்திபெறச் செய்ய முடியும்.

மத செல்வாக்கை ஒழிக்கவேண்டுமானாலுஞ் சரி, தேச தரித்திரத்தைப் போக்கவேண்டுமானாலும் சரி, இவைகளுக்காதாரமாயுள்ள பொருளாதாரத்தை சீர்படச் செய்யவேண்டும். மதங்களின் விஷமச் செல்வாக்கு (Baneful Influence)உலகை விட்டு ஒழிய வேண்டுமாயின், மதங்களின் பொருளாதாரஆதரவை (Economic Advantage) எடுத்து விடவேண்டும். மதங்கள், தங்களை வளர்த்துவரும் பொருளாதார உதவி நீங்கிய மாத்திரத்தில் வேர் அற்ற பனைபோல் வீழ்ந்து விடுவது திண்ணம். மதங்கள் ஒழிந்ததும், பொய் நம்பிக்கைகளும் (False Beliefs) மூட பக்தியும் (Ignorant Faith), உலகை விட்டுப்போம். சமதர்ம வாதிகள் செய்யவேண்டிய வேலைகளில், இது இரண்டாவதாகும்.

தனிவுடைமையை ஆதரித்து வரும் வரை, எந்த அரசியலும் சமதர்மத்தை கையாளுவது கஷ்டமெனக் கண்டோம். உலகையோ, அல்லது தேசத்தையோ, அல்லது நகரத்தையோ, அல்லது கிராமத்தையோ, தரித்திரத்திலிருந்து மீட்கவேண்டுமானால், தனி உடைமையை மாற்றி, முக்கியப் பொருள்களை பொது உடமையாக்கவேண்டிய அவசரத்தைக்கண்டோம். மதங்களின் விஷமச்செல்வாக்கு, மக்களை விட்டு ஒழிய வேண்டுமானால், மதங்களின் பொருளாதார செல்வாக்கை இழந்துவிடச் செய்யவேண்டுவதையும் அறிந்தோம். இனி ஜாதியின் கொடுமை எவ்விதம் ஒழியுமென்பதை கண்டறிவாம்.

உயர்ந்த ஜாதி, தாழ்ந்த ஜாதி என்பதெல்லாம், உடையவன், இல்லாதவன் என்ற வித்தியாசத்தால் உண்டான வித்தியாசங்களென அறிக. "தரித்திரநாராயணன்" என்றுவழங்கும் ஏழை மகன், இல்லாமையால் தாழ்த்தப்பட்டவனே ஒழிய உடையனாய் இருப்பதால் அல்ல. ஆதியிலிருப்பதால் அல்ல. எல்லாம் ஆதியிலிருந்து, யாதுமில்லாதவன், தாழ்ந்த குலத்தவனானான். எல்லாம் இருந்தவன், உயர்ந்த குலத்தவனானான். இந்த வித்தியாசந்தான், நாளைக்கும் ஜாதி வேற்றுமைக்கு அடிப்படையாயுள்ளது. அடிமைக்கால முதல் (Slave period) பலவாயிரம் பேர் சகலமும் இழந்தவர்களாய், அடிமைத்தொழிலைப்புரிந்து, ஆடுமாடுகளைப்போல பாவிக்கப்பட்டு வந்தனர். இவர்களைத் தான், அக்காலங்களில்தாழ்ந்த ஜாதியோர் என்பார். ஒரு காலத்தில், அடிமைக்கு, தனது உயிருக்கும், உடலுக்கும் சொந்தமில்லாதிருந்தது. இந்த நிலைமையை, சில அநாகரீக நாடுகளில் இன்றைக்கும் காணலாம். இன்றைக்கு நமது நாட்டிலும், பண்ணையாள் என்று சொல்லும் பஞ்சமர்கள், அரை அடிமைகளாகவே இருந்து வருகின்றார்கள். பிரஞ்சு தேசத்தில் மூன்று வகுப்பார் என்று வழங்கி வந்தவர்களும், (The Three Estates) பொருளாதார வித்தியாசத்தால் உண்டானவர்களே. ஆங்கில தேசத்தில் அரசன், பிரபு, சாமான்யன் என்ற மூவகை மனிதருள் உண்டான வித்தியாசமும், செல்வம் படைத்த வித்தியாசத்தால் உண்டானவைகளே. அதே மாதிரியாக இந்த வித்தியாசம், நமது இந்திய நாட்டிலும் ஏற்பட்டுள்ளது.

பிராமணன், பறையன் என்ற வித்தியாசம், பொருள்படைத்த வேற்றுமையால் உண்டானதென்பதற்கு சந்தேகமில்லை. பொருள் படைத்த எம். சி. ராஜாவின்

தொடர்ச்சி, 18-ம் பக்கம் பார்க்க.

சாமிகள் இனி அவதாரம் செய்யுமா?

(மயிலை சீனி வேங்கடசாமி)

சாமிகள் இனி அவதாரம் செய்யுமா? அல்லது, சாமிகள் அவதாரம் செய்ததாகச் சொல்வதை ஜனங்கள் இனியும் நம்புவார்களா?

யோக்கியமாகச் சம்பாதித்து வாழமுடியாமல். பொதுஜனங்களின் பொருளைக் கவர்ந்து பிழைக்கும் ஒரு கூட்டத்தாரின் சூழ்ச்சியும் கற்பனையும் ஆகும் அவதாரம் என்பது. இந்துக்களின் புராண இதிகாசங்களின்படி சாமிகள் செய்த அவதாரங்கள் கணக்கிலடங்கா. இந்த அவதாரங்களுக்கென ஏற்பட்ட புராணங்களும், கோயில்களும், திருவிழாக்களும், பணச்செலவுகளும், குருட்டு நம்பிக்கைகளும் கணக்கற்றவை. ஜனங்களை ஏமாற்றிப் பிழைக்கும் சூழ்ச்சிக்காரர்கள் அவ்வப்போது அவதாரங்களை உற்பத்திசெய்து கொண்டேயிருப்பார்கள் அவதாரங்களை இவர்கள் உற்பத்தி செய்வதன் நோக்கம் என்னவென்றால் தங்களுக்குச் செல்வாக்கு உண்டு பண்ணிக் கொள்ளவும் பாமர ஜனங்களின் பணமும் பொருள்களும் இலவசமாகத் தங்களுக்குக் கிடைக்கவுமேயாகும்.

பார்ப்பனருக்குச் செல்வாக்கையும், உயர்வையும்உண்டாக்கி, பார்ப்பனரல்லாத மக்களுக்கு இழிவையும் தாழ்வையும் அடிமைத்தனத்தையும் உண்டாகும்படிச் செய்தவர்களையெல்லாம் அவதாரங்களாகச் செய்துவிட்டார்கள். இந்த அவதாரங்கள் எல்லாம் பார்ப்பனரின் செல்வாக்கிற்கு, அல்லது உயர்வுக்கு, அல்லது வயிற்றுப்பிழைப்புக்குப் பாடுபட்டவை என்னும் உண்மையை அக்கதைகளைப் படித்துப் பார்த்தால் நன்கு விளங்கும்.

விஷ்ணுவின் ஒவ்வொருஅவதாரங்களையும் ஆராய்ந்துபார்த்தால் பார்ப்பனர்களின் உயர்வுக்கும் நன்மைக்கும் வயிற்றுப் பிழைப்புக்கும் பாடுபட்டன என்பதும் அந்த அவதாரங்கள் பல இழிவான செய்கைகளைச் செய்து பார்ப்பன ஆதிக்கத்துக்குப் பாடுபட்டிருக்கின்றன என்பதும் நன்கு விளங்கும். சிவன் பிராமணனாக வந்தார். தண்ணீர் பந்தல் வைத்தார் என்பதுபோன்ற கதைகள் பார்ப்பனர் தங்களுக்கு உயர்வை உண்டாக்கிக்கொள்ள கட்டிவிடப் பட்டகதைகள். பார்ப்பானுடைய மேன்மையை விளக்குவதற்கும், பார்ப்பானுடைய வயிற்றுப் பிழைப்புக்கு உதவி செய்வதற்கும் இந்த அவதாரங்கள் உதவி செய்திருக்கின்றன.

ஆதிகாலம் முதல் இந்த அவதாரப் புரட்டுப் பாமர மக்களை ஏமாற்றிக்கொண்டு வந்தது; வருகிறது. பார்ப்பனர்களின் ஆதிக்கத்தை வளர்க்கவும் பார்ப்பனருக்கு வயிற்றுப் பிழைப்பை உண்டாக்கவும், யார் யாரெல்லாம் பாடுபட்டார்களோ அவர்களை யெல்லாம் பார்ப்பனர்கள் அவதாரமாகச் செய்துவிட்டார்கள்.

புத்தரைக்கூட பார்ப்பனர்கள் விஷ்ணுவின் அவதாரம் என்று எழுதி வைத்துக்கொண்டார்கள். ஆனால், புத்தர் பார்ப்பனரின் ஆதிக்கத்துக்காகவோ அல்லது அவர்களின் வயிற்றுப் பிழைப்புக்காகவோ பாடுபடவில்லை. ஏன் அவரைப் பார்ப்பனர்கள் விஷ்ணுவின் அவதாரம் என்று சொன்னார்களென்றால், தங்களுக்குச் செல்வாக்கைத் தேடிக்கொள்வதற்காகவே. பௌத்த மதம் செல்வாக்குப் பெற்றிருந்த காலத்தில், பார்ப்பன மதம் (இந்துசமயம்) சாகுந்தருவாயிலிருந்தபோது; பார்ப்பனர்கள் புத்தரை விஷ்ணுவின் அவதாரம் என்று சொல்லி பாமர மக்களை ஏமாற்றியிராவிட்டால் இந்துமதம் அக் காலத்திலேயே அழிந்துபோயிருக்கும். பார்ப்பனர்கள் தங்களுக்குச் செல்வாக்கை உண்டாக்கிக்கொள்ள, புத்தரை விஷ்ணுவின் அவதாரம் என்று சொல்லி பாமர மக்களை ஏமாற்றி தங்கள் ஆதிக்கத்தையும், செல்வாக்கையும் காப்பாற்றிக்கொண்டார்கள். இந்தியாவை முகமதியர் அரசாண்ட காலத்தில் பார்ப்பனர்கள் அல்லா உபநிஷத் என்று ஒரு புஸ்தகம் எழுதி இஸ்லாம் மதத்தையும் இந்து மதத்தில் சேர்க்கப்பார்த்தார்கள். ஏன் மகமதியரையும் ஏமாற்றி தங்களுக்குச் செல்வாக்கையும் வயிற்றுப்பிழைப்பையும் உண்டாக்கிக்கொள்வதற்காகத்தான். ஆனால் முகமதியர்கள் ஏமாறவில்லை.

பதினாலாம் நூற்றாண்டில் முகமதியர்கள் ஸ்ரீரங்கம் கோவிலில் புகுந்து கோயிலை இடித்து ரங்கநாதருடைய பித்தளை விக்கிரகத்தை தூக்கிக்கொண்டு போய்விட்டபோது பார்ப்பனர்கள் என்ன கதை கட்டிவிட்டார்கள் தெரியுமா? ரங்கநாதர் துலுக்கப்பெண்ணைக்கலியாணம் செய்துகொண்டார். ஆகையால் துலுக்கன் வீட்டுக்குப்போயிருக்கிறார்என்று சொல்லி துலுக்கநாச்சியார் என்று ஒரு அம்மனை ஏற்படுத்தி நாச்சியார் கோவில் என்னும் ஊரில் வருஷம் தோறும் உற்சவம் கொண்டாடுகிறார்கள். ரங்கநாதர் துலுக்கப்பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டார் என்றால் அவர்முதலில் சுன்னத்து செய்திருக்க வேண்டும், பிறகு துலுக்க நாச்சியார் வீட்டில் மாட்டுக்கறியும் புலால் சோறும் விருந்து சாப்பிட்டிருக்கவேண்டும். ஆனால் பார்ப்பனர்கள் அதைப்பற்றி ஒன்றுமே சொல்லவில்லை. ஆ! பார்ப்பனர்களின் கட்டுக்கதைகளும், பொய்ப்புளுகுகளும் குப்புறவிழுந்தும் மீசையில் மண்படவில்லை என்னும் பேச்சுகளும் விந்தையாகத்தானிருக்கின்றன. ரங்கநாதர் விக்கிரகத்தை முகமதியர்கள் எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள் என்று யோக்கியமாய் ஒப்புக்கொள்வதைவிட்டு அயர் துலுக்கப்பெண்களைக்கலியாணம் செய்துகொண்டார் என்றும் அவர் நாச்சியார் கோவிலுக்குப்போகிறார் என்றும் பொய்புளுகவேண்டுமா? அதற்காக உற்சவம் செய்யவேண்டுமா? வடிகட்டினமுட்டாள்கள் இதை நம்புகிறார்களே!

பார்ப்பனர்களின் அவதாரப் புரட்டுக்கு ஒரு எல்லை இல்லை. இந்த இருபதாம் நூற்றாண்டிலும் அவர்கள் அவதாரங்களை உண்டாக்கிக்கொண்டுதான் இருக்கிறார்கள். சமீபத்தில் பார்ப்பனக்கூட்டத்துக்கு நன்மை செய்து வரும்அன்னிபெசன்ட் அம்மாளை பார்ப்பனக்கூட்டம் சரஸ்வதி அவதாரம் என்று சொல்லி ஊரெங்கும் வதந்தியை கிளப்பிவிட்டது ஒரு பார்ப்பன ஜட்ஜியின் மனைவி உள்பட பல பார்ப்பன ஸ்திரீகள் அன்னி பெஸன்ட் அம்மாளுக்கு கற்பூரதீபாராதனை செய்து காலில் விழுந்து கும்பிட்டார்கள், ஆனால் நல்லகாலமாக இப்போது ஜனங்களுக்குப்பகுத்தறிவு உதயமாய் விட்டபடியால் சரஸ்வதி அவதாரப்புரட்டை இப்போது ஒருவரும் நம்புவதில்லை.

இன்னும் அன்னிபெஸன்ட் அம்மையாரின் ஏசுகிறிஸ்துவின் அவதாரப்புரட்டும் பலிக்காமல் போய்விட்டது. கிருஷ்ண மூர்த்தி என்னும் பார்ப்பனச்சிறுவனைக்காட்டி அச்சிறுவன் ஏசுகிறிஸ்துவின் இரண்டாவது அவதாரம் என்று அந்த அம்மாள் சொன்னார்கள், ஆனால் அந்த அவதாரத்தையும் ஜனங்கள் ஒப்புக்கொள்ளவில்லை. இப்போது அந்த கிருஷ்ணமூர்த்தி உண்மையை வெளியிடுகிறார், அதாவது தான் ஒருமனிதன்தானென்றும், தான் அவதாரம் அல்லவென்றும் சொல்லுகிறாராம் ஒரு "அவதாரம்" தான் அவதாரம் அல்ல என்று சொன்னது இதுதான் முதல் தடவை.

வர்ணாசிரம தர்மத்தை நிலைநாட்டவும் ராமராஜியத்தை ஸ்தாபிக்கவும் கீதை பிரசாரம் செய்யவும் இரவும் பகலும் பாடுபடுகிற காந்தியை "அவதாரமா"க்குவதற்காகப் பார்ப்பனர்கள் செய்து வரும் புரட்டும் சூழ்ச்சியும் கணக்கிலடங்கா. காந்தி சிறைச்சாலையிலிருந்து மாயமாய் மறைந்து போனார், பிறகு மாயமாய் ஒருவரும் அறியாமல் மறுபடியும் வந்து விட்டார் என்பது போன்ற ஆபாச புளுகுகளைப் பத்திரிகைகளில் எழுதுவதும் பாமர மக்களிடம் சென்று, கிருஷ்ண பகவானே காந்தியாக அவதாரம் செய்திருக்கிறார் என்று சொல்லுவதும் வழக்கமாக இருந்து வருகிறது. அவதாரப்புரட்டை ஜனங்கள் நம்பி வந்த காலம் மலையேறிப் போய்விட்டதை "அவதாரப் புரட்டர்கள்" இன்னும் உணரவில்லை போலும்.

இந்த அவதாரங்களினால் ஏற்பட்ட கோயில்கள் எத்தனை? தேர் திருவிழாக்கள் எத்தனை? பணச் செலவுகளும் அயோக்கியத்தனங்களும் எவ்வளவு? முட்டாள் தனமும் மூட நம்பிக்கையும் எவ்வளவு? இவ்வளவும் எதற்காக? ஒரு சிறு சோம்பேறி கூட்டத்தின் செல்வாக்கிற்கும் வயிற்றுப் பிழைப்பிற்காகவும் தானே?

இந்தப் புளுகுகளை எல்லாம் ஜனங்கள் நம்புவதற்கு இருபதாம் நூற்றாண்டு இடந்தரவில்லை. அன்றியும், சுயமரியாதை இயக்கம் தூங்குகிறவர்களையெல்லாம்விழிக்கச் செய்து விட்டபடியால், இனி இந்தியாவில் சாமிகள் அவதாரம் செய்யப்பயப்படும்என்பதுஉறுதி.

எல்லாச் சாமிகளும் இந்தியாவில் தான் அவதாரம் செய்கின்றனவே தவிர மற்ற நாடுகளில்

தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க.

எனது இலங்கைப் பிரயாணம்.

(தோழர் அ. இராகவன்)

(சென்ற வாரத் தொடர்ச்சி)

கொழும்பில் சிலநாள் தங்கிவிட்டுப்பின்னர் எம்நண்பர்கள் சிலருடன் இலங்கையிலுள்ள பலபாகங்களைச் சுற்றிப்பார்க்கப் புறப்பட்டோம். புறப்பட்டு, நீர்கொழும்பு, சிலாவை, புத்தளம், அநுராசபுரம். சுங்கோரியா திருக்கோணமலை, ஹப்புத்தலை கண்டி, ஹட்டன் முதலிய ஊர்களைப் போய்பார்வையிட்டோம். சுமார் 500 மைல்களுக்கு மேல் சுற்றியிருப்போம், மலைகளினூடே செல்லும் சிறியரோடுகளும் தார்பூசிமிகஅழகாக வைக்கப்பட்டிருந்தது. பாதைகளினிருபுறமும் மிகஉயர்ந்த மரங்களும் கான்யாறுகளும் பார்ப்பதற்கு மிகரமணீகரமான காட்சியாயிருந்தது. இடைஇடையே யானைகளும், மான்களும், மயில்களும், புலிகளும், ஏனையபரவைவைகளும் மிருகங்களும்எங்கள்முன் தோன்றி மறையுங்காட்சி பயங்கரமும்,வேடிக்கையும் கலந்த காட்சியாகத் தோன்றிற்று. யாங்கள் போகும் வழியில் புத்தளத்திற்குசமீபத்தில் நம் நாட்டின் எருமைக்கடா வைப்பூட்டி யோட்டும்வண்டிகளைப் போல் இரண்டுயானைகள் கட்டிய வண்டியைப் பார்த்துப் பெரும்வியப்புற்றோம். அநுராசபுரத்திலேயுள்ள அழிந்துபோன பலசிங்கள அரசர்களின் மாளிகைகளையும், தேசவிசாரணைபுரியும் நியாயமன்றங்களையும், அந்தப்புரங்களின் அமைப்பையும் கண்டு ஆச்சரியமுற்றோம். அங்குகல்லினால் செய்யப்பட்டு அழகியசித்திர வேலைகளில் சிறப்புற்றவர்கள் தாமென்று தற்பெருமை கொள்ளும்தமிழர்களைத்தோற்கடிக்கக் கூடியதானபல சிற்பவேலைகள் யிருக்கிறது. அதன் வேலைப்பாடுகளைக்கண்டு பலஐரோப்பியசித்திர விற்பனர்கள் கூட ஆச்சரியப்படுகின்றனர். அங்குள்ளபெரிய புத்தமதஸ் தூபியையும், பெரியபுத்த விக்கிரகத்தையும், அக்கோயிலினுள்ளவைக்கப்பட்ட சிங்கள அரசர்களை வென்ற தமிழ்அரசர்களின் உருவங்களையும், மற்றோரிடத்தில் மலையின் மேலுள்ள புத்தர்உருவங்களையும் கண்டோம். புத்தர்உருவங்கள்கதத்தோலிக்கர் கோவிலினுள் வைத்திருக்கும் அழகியபொம்மைகள் போன்று மிகஅழகாய்ச் செய்யப்பட்டிருக்கிறது. புத்தமதக் கோயிலுள் ளேஎம்மதஸ் தரும் தாராளமாய்அனுமதிக்கப்படுகிறார்கள். அங்குள்ளமக்கள்எங்களிடம் மிகுந்த அன்புடனும், மரியாதையுடனும் நடந்து கொண்டனர். பின்னர்யாங்கள் திருக்கோணமலைக்குப் போனதில்அதுஓர்இயற்கை துறைமுகத்தைபோன்றும் அங்குமிகப்பழயடச்சுகோட்டையும் கப்பற்படையுமிருக்கிறது. முற்காலத்தில்இவ்வூர் ஓர் பிரபல்ய நகரமாயிருந்ததாயினும் தற்சமயம் அவ்வளவு சிறப்பில்லை. இவ்வூருக்கு இப்பால் சுமார் 7, 8 மைல் தூரத்தில் ஓர்பாழுங்கட்டிடமிருக்கிறது. அங்குதான் வெந்நீர் ஊற்றுக்களிருக்கின்றது. வெந்நீர் ஊற்றில் ஸ்நானம் செய்கிறது உடம்பிற்கு மிக நல்லது என்று ஐரோப்பியர் பலரும் ஆங்குபோந்து குளித்துவிட்டுச் செல்லுகிறார்கள். முஸ்லீம்களும் இந்துக்களும் தங்கள் புராணக்கதைகளுடன் இதைச்சேர்த்துக்கதைகளுண்டாக்கிக்கொண்டு இதில் குளித்தால் மோட்சம் உண்டென்று சிலர் எண்ணிக்கொள்கின்றனர். இங்குள்ள ஒரு ஊற்றில் தண்ணீர் அதிக உஷ்ணமுடையது, மற்றைய ஊற்றுக்களெல்லாம் கொஞ்சம் கொஞ்சம் குறைந்த உஷ்ணத்தையுடையதான 5, 6 ஊற்றுக்களிருக்கின்றன. யான் ஆங்கு போய் ஸ்நானஞ்செய்துவிட்டு கண்டிவந்து சேர்ந்தேன். கண்டி ஓர் அழகிய நகரம் இங்கு சிறந்த கல்லூரிகளும், உலகத்திலுள்ள பற்பல விநோதச் செடிகள் பல அடங்கியதுமான ஓர் விநோதமான பூங்காவுமிருக்கிறது. இங்கு புத்தர்பல் ஒன்றை வைத்திருக்கும் ஓர் புத்தர்கோயிலும், புத்தமதப்புத்தகங்கள் பல நிறைந்த ஓர் விசேஷித்த நூல் நிலயம் ஒன்றுமிருக்கிறது. அவைகளையெல்லாம் பார்த்துவிட்டு கடல் மட்டத்திற்கு 7000 அடி உயரமுள்ள இலங்கையிலேயே அதிக குளிர்ச்சியுள்ளதுமான நூரெலுயா என்னுமிடத்தையும், சிவனடிபாதம் அல்லது ஆதம்மலையென்று கூறுமிடத்தையும் பார்த்துவிட்டு வரவேண்டுமென்று ஹட்டன் என்ற ஊரையடைந்தோம். அன்று மாலை எனது உடம்பிற்கு சுரம் அடித்ததால் மறுநாள் போகலாமென்றிருந்தோம். மறுநாள் யான் அங்கிருப்பதை எவ்வாறோ அறிந்து நம் சுயமரியாதைத்தோழர்கள் பலரும் வந்து தமதில்லத்திற்கழைத்துச்சென்று எனக்குத்தக்க ஔடதம் கொடுத்து வேண்டிய உபசாரமும் செய்தனர். அவர்கள் விருப்பப்படி அங்கு சொற்பொழிவாற்ற என் உடல் நிலை இடங்கொடாததால் பின்னர் ஒரு முறை வருவதாய்க்கூறிவிட்டு நேராக இலங் கவைந்துவிட்டேன்.

புத்தமதம்.

புத்தமதம் அசோகர் என்னும் சீரிய அரசர்காலத்தில் உலகமெங்கும் புத்தமதக்கொள்கைகளைப்பரப்ப வேண்டும் என்று புத்தர் மஹாசபையில் தீர்மானிக்கப்பெற்று அசோகரின் பேருதவியின்மேல் ஜப்பான், சீனு, ஆப்கானிஸ்தானம், பெலுசிஸ்தானம், இலங்கை முதலியபல நாடுகளுக்கும் புத்தமதப்பிரசாரர்கள் அனுப்புவிக்கப்பட்டது. அவ்வாறே இலங்கை அரசர்புதல்வராகிய மகேந்திரன் என்பாரும் புதல்வியாகிய சங்கமித்திரை என்னும் பெண்மணியும் சென்று புத்தமதப் பிரசாரம்செய்தனர். அப்பொழுது அரியாசனமேறிய இலங்கை அரசன் தேவனும்பியதிஷ்யனென்னும் இலங்கையரசனும், அவன்குடும்பத்தாரும்புத்த மதத்தை தழுவ நாளடைவில் பிரஜைகளும் புத்த மதத்தை ஒப்புக்கொண்டனர் என்று பல சரித்திராசிரியர் கூறி வருகின்றனர். ஆனால் எல். சி. பிளேசி பி. ஏ. என்னும் அறிஞர் ஆங்கிலத்தில் எழுதிய இலங்கை வரலாறு என்னும் நூலில் புத்தர் தம் ஜீவிய காலத்தில் மும்முறை இலங்கைக்கு வந்திருப்பதாயும், அப்பொழுது அவர் அநுராஜபுரத்திற்கும் ஆதம் மலைக்கும் போனார் என்றும் எழுதியிருக்கிறார். ஜீவகாருண்யத்தையும், புரோகிதர் ஆட்சியையும், பெண் அடிமைத் தனத்தையும், கடவுளுணர்ச்சியால் மக்களடையும் அல்லலையும் ஒழித்து யாண்டும் இலங்கையில் வீரத்தையும், சுதந்தரத்தையும், சகோதரத்வத்தையும் பகுத்தறிவையும் ஜொலிக்கப் புத்த மதம் வெகு சீக்கிரத்தில் செய்து விட்டது. பார்ப்பனீய சூட்சி அங்கு செல்ல இந்தியாவிற்கும், இலங்கைக்குமிடையிற் கடலிருந்ததால் பிராமணீயம் கடல்கடப்பதைத் தடுத்துக்கொண்டிருப்பதால் அங்கு சென்று புத்த மதத்தை இந்தியாவிற் செய்தது போல் ஒழித்து விட முடியாமல் போய் விட்டது. என்றாலும் இலங்கை மக்களின் துரதிர்ஷ்ட வசமாய் மூடநம்பிக்கை நாளடைவில் மல்கி புத்த மதத்தின் உன்னதக் கொள்கைகள் மறைந்து விட்டது. புத்த மதத்தைப் பற்றி யான் கொண்ட உயர்ந்த எண்ணங்களெல்லாம் இலங்கையிலுள்ள புத்த சமயிகளின் நடவடிக்கைகளைப் பார்த்ததிலிருந்து என் உள்ளத்தினின்று பறந்தோடி விட்டது. கடவுளுணர்ச்சி, கடவுள் நம்பிக்கை முதலியவற்றினால் மக்களுலகிற்கு பெரிய கேடுகள் விளைகின்றனஎன்றும் கடவுள் நம்பிக்கையினாலேபுரோகிதக் குழாங்கள் பெருகிமக்களின் செல்வத்தையும் அறிவையும் கொள்ளை கொண்டு போவதையுமுன்னி இவ்விரண்டையும் கண்டிப்பாய் விலக்கியும் பிற்கால புத்தசமயிகள் புத்தரைக் கடவுளாக் எண்ண ஆரம்பித்து விட்டனர். புத்த மதப் பிரசங்கம் புரிந்து வந்த துறவிகள் புரோகிதராய் மாறி விட்டார்கள். இன்று மஞ்சக்காயாசம் பூண்ட இத்துறவிகள் புத்த மதக் கோவில்களிலும் ஏனைய இடங்களிலும் புரிந்துவரும் திருவிளையாடல்களைச் சொல்லி முடியா. நாடோறும் இலங்கையில் இப்பொல்லாத் துறவிகளின் திருவிளையாடல்களைப் பற்றிப் பத்திரிகைகளிலும் கோர்ட்டுகளிலும் விசேஷமாகப் பார்க்கலாம். ஜீவகாருண்யத்தைஅடிப்படையாகக்கொண்ட புத்தமதஸ்தர்கள் இந்தியாவிலுள்ள சைவர்கள் போன்று கொடிய பாம்பையும் தேளையும் கூட எவரும் கொல்லச் சம்மதியார். இத்தகைய அன்புறுவம் கொண்ட மக்கள் தான் அற்ப விஷயத்திற்கும் தம் போன்ற மனிதர்களை திடீரெனக் கத்தியால் குத்திக் கொன்று விடுவர். பௌத்த மதஸ்தனின் கடமைகளில் மிக முக்கிய எட்டு கடமைகளில் திருட்டு, பொய், குடி, விபசாரம் முதலிய என்று கூறப்பட்டிருந்தும், இன்று அவைகள் புத்த மதஸ்தர்களிடம் பெருகி இருக்கக்காணலாம். சுருக்கமாகச்சொன்னால் புத்த மதக் கொள்கைகளை அறிந்தவர்கள் ஆயிரத்திலொருவர் காண்பதும் அரிது. புத்த மதக் கோயில்களுக்கு விசேஷமாய் பெண்மக்களே போய்வருகின்றனர். கண்டிபுத்த கோயிலில் யாம் கண்ட காட்சி வியக்கத்தக்கன. கண்டியில்தான் புத்தருடைய பல் ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பல் மனிதர்களுக்கிருக்கும் இயற்கையான பல்லைவிட மிகப் பெரியதாயிருக்கிறது. ஐரோப்பியத் துரைமகள் ஒருவள் இது யானைத் தந்தத்தினால் செய்யப்பட்டதென்று தம் நூலொன்றில் எழுதியிருக்கிறாள். யான் இப்பல்லிருக்கும் இடத்திற்குப் போனதும் அங்குள்ள புரோகிதர் காணிக்கை போடும்படி கூறினார். யாங்கள் காணிக்கை போட மறுத்துவிட்டோம். அங்கு பல பெண்மணிகளும் சில ஆண்களும் அப் பல்லின் மேல் போட புஷ்பங்களும் காணிக்கையும் கொண்டுவந்து கொடுத்துவிட்டுப் பின்னர் அப் பூவில் சிறிது பாகமும் பெற்றுக்கொண்டு சிறிது நேரம் முழங்கால் படியிட்டு பூஜிக்கின்றனர். இப் பல்லை மட்டுந்தான் பூஜிக்கின்றாரோ? இல்லை! இல்லை! அக் கோயிலில் பூஜை செய்து இறந்து புதைக்கப்பட்ட ஒரு புரோகிதரின் சமாதியையும், புத்த மதக்கிரந்தங்கள் வைக்கப்பட்டிருக்கும் புத்தக நிலயத்தையும், மிகப் பக்தியுடன் வணங்கி வருகின்றனர். ஆங்காங்கே புரோகிதர்கள் நின்றுகொண்டு காணிக்கையாகப் பணம் பறித்துக்கொள்கின்றனர். அப் புத்த மதக் கோவிலில் அருமையான சித்திர வேலைப்பாடுகள் நிறைந்திருக்கின்றன. இன்னும் இலங்கையின் பலவேறிடங்களிலுமுள்ள புத்த மதக் கோயில்களைக்கண்டேன், அங்கே சுமார் 1 அடிக்கு மேற்பட்ட புத்தர் உருவமும் இன்னும் எண்ணிறந்த சிறிய விக்கிரகங்களும் வரிசை வரிசையாக வைக்கப்பட்டிருக்கின்றன. இலங்கையில்

தொடர்ச்சி 16-ம் பக்கம் பார்க்க.

Our Problem.

நமது பிரச்சினை.

(நாகை கே. முருகேசன்)

(முன் தொடர்ச்சி)

ஐரோப்பிய அரசியல் சமூக சமுதாய வாழ்க்கையை அதன் நிரந்தர அமைப்பைக் கொண்டு ஒரு வஸ்திரத்திற்கு ஒப்பிடலாம். இதில் கிழிசல் ஏற்படும் போதெல்லாம் அரசியல் சக்கரம் சுழன்று அந்தக் கிழிசலைத் தைத்து விடும். இதுதான் ஐரோப்பிய சரித்திரத்தில் புரட்சி என்று அழைக்கப்பட்டது. ஆகவே அவர்களுக்கு அடிக்கடி தேவையாய் இருந்து வந்தது தையல்மிஷின் அல்லது அரசியல் புரட்சி.

ஆனால் நமது நாட்டின் நிலைமையோ வேறு, நமது நாட்டு அரசியல் சமூக வாழ்க்கை வஸ்திரத்திற்கே ஒப்பிடமுடியாது. யாவும் நூல் இழையாகவே இருக்கின்றன. இன்னும் ஒன்று சேர்த்து நெய்யப்படவில்லை. இழைகளும் அனேக சிக்கலாகக் கிடக்கின்றன. ஒரு புறம் நைந்துபோன இழை; மற்றொரு புறம் பல முடிச்சுகள்; பிறிதொரு புறம் முறுக்கேறிய தடிப்பு நூல், வேறொருபுறம் முறுக்குக் குறைவு, இந்த லட்சணத்தில் ஐரோப்பியர் கையாண்ட அரசியல் கிளர்ச்சி என்னும் ஆயுதத்தை எடுத்துக்கொண்டு அதற்கு இந்தியப் பூச்சுப் பூசி வெறும் ஆர்பாட்டம் செய்வதால் என்ன பிரயோஜனம். நூல் இழைகள் ஒன்று சேர்த்து துணியாக நெய்வதற்குத் தக்க விதத்தில் சிக்கறுத்து சீர்படுத்த வேண்டாமா? அது முறுக்கேறிய நூலோ, அல்லது தரிக்கே நிற்க யோக்கியதை இல்லாத சமூக நூல்களைக்கொண்டு இந்திய சமுதாயமென்னும் அழகியதோர் வஸ்திரத்தை எங்ஙனம் நெய்யமுடியும். நமக்குத் தேவையாய் இருப்பது நெய்வதற்குத் தகுதியான சில தரியே ஒழிய தையல் மிஷன் அல்ல. ஆகவே சமூக சீர்திருத்தம் செய்ய வேண்டுவதுதான் இப்பொழுது அவசியமான முதல் வேலை என்று சுயமரியாதை இயக்கம் வற்புறுத்திக் கூறுவதில் என்ன குற்ற மிருக்கமுடியும்?

ஒரு கதை சொல்வதுண்டு; ஒரு பார்ப்பானுக்கு மூன்று மனைவியர். முதல் தாரம் சமைப்பதும், இரண்டாந்தாரம் சமைத்து வைத்திருப்பதை வெகு சொகுசாக சாப்பிட்டு விட்டு தூங்குவதும், மூன்றாந்தாரமாக வந்தவள் வயிற்றிற்கு ஒன்றும் அகப்படாது கண்டு பிறந்தவிடத்திற்கு போவதும் வழக்கமென்றும், இதைக் கண்ட பார்ப்பனக் குடும்பி மிகுதியும் ஆயாசங்கொண்டு மூவருக்குள்ளும் சமரசம் ஏற்படுத்துவதற்கான வழி தெரியாமல் அவதிப்படுவதுண்டென்றும் கதை ஆரம்பிக்கும். அதுபோலவே நமது நாட்டிலும் ஒரு பகுதியார் நெற்றி வேர்வை நிலத்தில் விழும்வரையிலும் பாடுபட்டுழைத்தும் அரைப்பட்டினி கிடப்பதும், அந்த உழைப்பின் பயனை இன்னொரு குப்பார் சும்மாஇருந்து தின்று கொழுப்பதும், அரை வயிற்றிற்குக்கூட அகப்படாத ஏனையோர்கள் புகலிடமில்லாது புந்திநோவதும், தீபகற்பம் நோக்கிச் செல்வதும் வழக்கமாக இருந்துவருகிறது. ஒரே ஆங்கில ஆட்சியின்கீழ் இருக்கும் மக்களுக்குள் இத்யாதி வேற்றுமைப்பட்ட நிலைமைகள் ஏற்படுவதென்றால் இதற்கு உண்மைக் காரணம் என்னவென்று கண்டறிந்து அதைக் களைவதற்கு ஒருப்படாமல் வீணில் அவதிப்படுவதும், ஆர்பாட்டம் செய்தும் எங்ஙனம் பிரயோஜனப்படும். குடலைப்பற்றிய வியாதிக்குத் தலைவலித்தைலம்தடவி தடுமாறுவதாகவன்றோ விருக்கிறது.

அன்னியர் ஆட்சி நமக்கொரு சாபத்தீடாக இருக்கிறதென்று ஓயாதுசொல்வதில் திருப்தி கொள்கிறோம். அது ஒழிந்து சுய ஆட்சி வந்தால் நமது துன்பங்களெல்லாம் தொலைந்துவிடுமென்கின்றோம். தொலைவதானால் நன்மையே. ஆனால் சுயமரியாதை இயக்கத்திற்கு எந்தக் குட்டிச்சுவராகப்போன ஆட்சி இடத்தும் பெயரளவில் ஆசையில்லை. அதுகோருவது எல்லா மக்களுக்கும் சமஉரிமையும், சந்தர்ப்பமும் நன்மையும் ஏற்படவேண்டுமென்பதுதான். அம்மாதிரியான சந்தர்ப்பம் ஏற்படுவதற்கான நம்பிக்கைகூட இப்பொழுது இல்லாதிருப்பது நீங்க வேண்டுமென்றுதான் அதுகேட்கிறது. இதற்கு 'அன்னியனை'ப்போட்டு ஆழம் பார்ப்பதாகச் சொன்னால் அதைக்கண்டு ஏமாறுங்காலம் மலையேறிவிட்டது என்பதை அறிந்து கொள்ளவேண்டாமா? சமதர்மம் ஓங்குவதற்கு சாதியும், மதமும் சாஸ்திரக்குப்பைகளுந்தான் தடங்கலாக இருக்கின்றனவேஒழிய அன்னிய ஆட்சி அல்ல. இதை மறுப்பார் எவர்? நூறுவருடங்களாக இருந்து வரும் அன்னிய ஆட்சி நிலைத்தாலும் ஆயிரமாயிரவருடங்களாக இருந்துவரும் இந்த ஜாதிச்சமய குப்பைகள் ஒழிவதெப்படி என்று கேட்டால் அதற்கொன்றும் பதிலில்லை! இவைகள் ஒழியாத வரையில் மனிதன்மானத்தோடு வாழமுடியுமா? சுயமரியாதைக்காரர்கள் மக்கள் வயிற்றிற்கு வாடி அலைவதைப்பார்க்கிலும் மானமிழந்து வாழ்வது அதனிலும் கொடிது என்று எண்ணுமிக்காலையில்சுய ஆட்சி என்னும் சொக்குப்பொடியில் மயங்கி விடுவார்களா? சுய ஆட்சி என்னும் அதர்ம ராஜ்யத்தில் வயிறார சோறுகிடைக்குமென்று ஆசைகாட்டுவதால் என்ன பிரயோஜனம் மானமிழந்து மதிகெட்டு சூத்திரனாகவும், பறையனாகவும் இருந்து தானே சோறு தின்னவேண்டும். இதைவிட இழிவுவேறு என்னவேண்டும். ராமராஜியத்திற்கு அடிகோலுவதாகக் கூறும் காந்தியாரின் கராச்சிகாங்கிரஸ் தீர்மானமும் இதைத்தானே உறுதிப்படுத்துகிறது. ஆயிர மாயிரம் வருடங்களுக்கு முன் மக்கள் இழந்தமானத்தை ஆங்கில ஆட்சியால் திரும்ப அடைவதற்கு சந்தர்ப்பம் வாய்த்திருக்கும் பொழுது அதைநாம் இழக்கப்பார்ப்பது மதியீனமல்லவா? அப்படி ஒன்றும் பயப்படாதே, "என்றுசொல்லி ஏமாற்றப் பார்ப்பதைவிட்டு பயப்படுவதற்கான காரணத்தை நீக்கிவருங்காலத்தில் நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டுவதல்லவா நியாயம் அதை விடுத்து "சுய ஆட்சியில் நியாயம் பிறக்கும் பயப்படாதே" என்று வாயளவில் சொல்விமகுப்பப்பார்ப்பது தூக்குமேடையில் தொங்கிக் கொண்டிருப்பவனைப் பார்த்து அவனிடத்தில் வக்காலத்து வாங்கிய வக்கீல் "அப்பா! பயப்படாதே, சும்மா சிவனே என்றுதூங்கு, பிறகு அப்பீலில் ஒருகை பார்த்துக் கொள்ளலா" மென்று சொல்லும் சமாதானத்தைப் போலன்றோ இருக்குறது. மக்களுடைய மானத்தைசுருக்கில் தொங்கவிட்டு ஆயிரக்கணக்கான வருடங்களாய் வேடிக்கைபார்க்கும் அக்கிரமம் நிறைந்த இந்நாட்டில், மாட்டி இருக்கும் சுருக்கை அறுத்து எறிவதல்லவா சரியானசமாதானமாகும். அதை விடுத்து வேறு காந்தீயம் தேசியம்என்னும் மட்டசசரக்குகளை எல்லாம்விலை கோருவது பித்தலாட்டதைத் தவிர்த்து வேறென்ன? சமசந்தர்ப்பத்திற்கான வசதியை ஏற்படுத்துவதற்குக் கூடவா ஆங்கில ஆட்சிகையைப்பிடித்துக்கொள்ளுகிறது. சாதித்திமிரும் தற்பெருமையும் சுயநல சூதாட்டமுமன்றோ ஒற்றுமையை உருப்படாமல்செய்து வந்தது. வருணாச்சிரமப் பேயை ஒருபுறம் வளர்க்கப்பார்ப்பது, மற்றொருபுறம் ஒற்றுமையாய்க்கூடி வாழலா மென்றுஊத்தைவாயை அங்காத்தலும் என்ன நாணயம். உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுவதால் உருப்படமுடியுமா? அடிப்படையான குற்றங்களையும் குறைகளையும் வைத்துக்கொண்டு வெளிப்பூச்சுப் பூசுவதால் என்னபிரயோஜனம். அதனால் ஏற்படும் ஒற்றுமைதான் எவ்வளவு நாளைக்கு நிற்கப் போகிறது. அடிப்படையிலன்றோகை வைக்க வேண்டு மொன்று சுயமரியாதை இயக்கம் கூறுகின்றது. இதைச் சொன்னமாத்திரத்திலே 'தேசியம்" "பொறுமை இழந்து" போம், போம். மூன்றாவது பேர்வழி நமது விரோதி அன்னியன் அவனல்லவா நமக்கிடையேபல விதத்திலும் வம்புவளர்த்து விட்டு ஒற்றுமையைக் குலைக்கிறான்; அவன்செய்யும் கிண்டலல்லவா அது; முன்னெல்லாம் பாரம் பரியமாக ஒருதாய் வயிற்றுப்பிள்ளைகளைப்போல ஒற்றுமையாக வாழவில்லையா" என்று அதட்டிக்கேட்கிறது.

ஆம். நம் வாழ்வின் லக்ஷணத்தை உலகம் அறியும். மனுஸ்மிருதி ரெக்கார்டே போதுமானது. உதைத்த வன்காலை முத்தமிட்டு "மானத்தோடு" ஒற்றுமையாக நாயைப்போல "பணிந்து" வாயைத் திறக்காமல் வாழ்ந்து வந்தது உண்மைதான். அந்த ஒற்றுமையின் உயர்வை சுயமரியாதை இயக்கமும் அறிந்து கொண்டது. அதற்காகவே மிஸ்மேயோவை "குப்பைக்காரி" என்று கூறிய அப்பிரதிவ்வியங்களை வாழ்த்த வேண்டியதுதான். என்றாலும் குப்பையை சேர்த்து விட்டு அதில்குடி இருப்பது எவ்வளவு புத்திசாலித்தனமென்பதும் உலகமறியும். அது ஒருபுறமிருக்க அன்னிய ஆட்சி நம்மிடையே கிண்டல் பண்ணுவதாகவே இருக்கட்டும்; ஒற்றுமையைக் கெடுத்துவருவதாகவே இருக்கட்டும். அதற்கு சந்தர்ப்பங் கொடுத்தது யார். வர்ணாச்சிரமக்குரங்கை வயிற்றில் கட்டிக்கொண்டு தேசீயம் பேசும் தேவுடுகளா? அல்லது சுயமரியாதைக் காரர்களா? என்பதை உணர்ந்து பாருங்கள். உங்களிடையே ஒரு காலத்திற்கொரு நீதி உபதேசம் செய்யும் வர்ணாச்சிரம அதர்மமும் சாதி சமய சாத்திரச்சங்கடங்களும் நாட்டின் இருதயத்தைப் பற்றி தின்று கொண்டிருக்கும்பொழுது "அன்னியன், அன்னியன்" என்னும் வீண் பேச்சினால் ஆவதென்ன? மனிதன் ஒரு குற்றத்தைச்செய்யக் கூடிய சந்தர்ப்பத்திற்காக காத்திருந்து அந்த நிமிஷத்திலேயே "சனியன் ஒருவனை பிடித்துக் கொள்ளுகிற தென்று" சோதிடாக்காரன் சொல்லுகிறான். சனியனைப் பற்றி நமக்குக் கவலை இல்லை; என்றாலும் சந்தர்ப்பம் பார்க்கும் புத்திஅந்த சனியனுக்குக் கூட இருக்கும் பொழுது அதே புத்தி அன்னியனுக்குமில்லாமலா போய் விடும். புதிய நெருப்புக்கூடவா வைக்க வேண்டும். உங்கள் முன்னோர்கள் வைத்தநெருப்புஅடியிலேயே கனிந்து கொண்டிருப்பதை அன்னியன் தூண்டி விட்டால் அதற்கு யார் என்ன செய்வது. நெருப்பு வைத்தது யார்? அதை அணைக்க வேண்டாமா? மனுஸ்மிருதிகளும் மகரிஷிகளும் மதமும் மதப்பெரியோர் களும் மண்ணிற்கிரையாக வேண்டாமா? வேண்டாமென்று நீங்கள் சொல்லு வதானாலும் சுயமரியாதை இயக்கம் அவைகளை எல்லாம் மண்ணை அள்ளிப் போடுவதற்கு வெளித் தோன்றி விட்டதென்பதில் இனியும் சந்தேகமா? என்றாலும் இந்த சந்தர்ப்பத்தில் காந்தியின் கராச்சித்தீர்மானம் எரிகின்ற நெருப்பில் மத நடுநிலைமை என்னும் மண்ணெண்ணையை ஊற்றி வேடிக்கைப் பார்க்கிறது. இதை விட அன்னியன் கிண்டல் எம்மாத்திரம். பாவம் ஒருபுறம், பழி ஒருபுறமா?

மதமும் முன்னேற்றமும்.

III

மதத்திற்கு இரு விதமான எதிர்ப்புகளுண்டு. ஒன்று அறிவு சம்மந்தப்பட்டது மற்றயது அறன் வழிபட்டது.

அறிவினல் துருவி ஆராயுங்கால் எம்மதத்தையும் உண்மையாகக் கொள்வதற்குக் காரணம் கிடைக்கவில்லே. ஒருசிலர் தற்காலத்தில் மதம் உண்மையானதோ பொய்யானதோ என்று கவனியாமல் உபயோகமானதா வென்று மட்டும் பார்க்க வேண்டுமென்கிருர்கள். ஆனல் ஒன்றை விட்டு ஒன்றைத் தீர்மானிக்க முடியாது, கிறிஸ்துவ மதத்தை நம்பினல் நல்லது எது என்பதைப் பற்றிய நமது எண்ணங்கள் என்னவாயிருக்குமோ அதனின்றும் வேருனதாக விருக்கும். எனவே கிறிஸ்தவர்களுக்கு நல்லதானவை அதை நம்பாதவர்ஙளுக்கு கெட்டதாகத் தோற்றலாம். இன்னும் சாட்சியம் இருக்கிறதோ இல்லேயோ சில விஷயங்களே நம்ப வேண்டுமென்று நம்பால் எழும்மன நிலேயானது நம்மை சாட்சியத்திற்கு விரோதிகளாக்கி, நமது இச்சைகளுக்கு மாருனவற்றை நம்மைக் கவனிக்க முடியாதபடி செய்து விடுகிறது. சிலவற்றை எவ்வாற்ருலும் நம்பியே தீரவேண்டுமென்பவனிடத்து எதனேயும் பரிசீலனே செய்து துணிந்துதேர வேண்டுமென்னும் நல்ல புத்திக்கு இடமில்லே, தான் பிடித்த முயலுக்கு மூன்றேகால் என்றே சாதிப்பான், எனவே மதத்தின் உண்மையை பரிசீலனே செய்துதோமல் அது நன்மையை தருகிறதா வென்று தீர்மானிக்க முடியாது. கிருஸ்தவர்களுக்கும்,முகமதியர்களுக்கும் தம் மதத்தின் உண்மையில் அடிப்படையான கொள்கை யென்னவென்ருல் கடவுள் இருக்கிருர் என்பதே. மதமெனும் இருண்டஅரக்கன் தாண்டவமாடி வெற்றிமாலே சூடிய காலங்களில் கடவுளென்பதற்கு ஒரு குறிப்பிட்ட பொருளிருந்தது. ஆனல் அறிவெனும் இரவியின் கதிர்கள் விரைந்துசென்றுபோராடி வெற்றிமாலேயைச் சூரையிடவே இவ்வார்த்தையின் பொருளும் சிறிது சிறிதாக மங்கிச் சிதைந்து, உருக்குலேந்து, இப்பொழுது மக்கள் தாம் நம்பும் கடவுள் என்பதற்கு என்ன பொருள் கொள்கிருர்கள் என்பதைக் கூட தெரியக் கூட வில்லே.

மத நம்பிக்கையுடைய பலருடைய வாதமொன்றுண்டு. "மக்கள் அதிசயிக்கத் தக்க அறிவும், அறனும் ஒருங்கே படைத்தவர்களாக விருக்கிருர்கள். இத்தகைய பெருஞ்செயல் அசம்பாவிதமாக ஏற்பட்டதாகச் சொல்ல முடியாது. எனவே இவ்விதமான அறிவும்,அறனும் படைத்த ஒருவரே நம்மைத் தோற்றுவிக்குமாறு இத்தகைய உலக இயந்திரத்தை படைத்து உருட்டி இருக்க வேண்டும்'', இவ்வழக்கு பொருந்தா வழக்காகும். இந்த உலகத்தை விட பல மடங்கு பெரியதான அனேககிரகங்களேயும், உலகங்களேயும் படைத்தது இப்பிரபஞ்சமென்பது சாத்திர வல்லார் கண்டறிந்ததுணிவு. இப்பிரபஞ்சத்திலுள்ள கேவலம் ஜடப் பொருள்களே ஒருபுறமும், அறிவிஞெளி திகழும் பொருள்களே ஒருபுறமும் ஒப்பிட்டுப் பார்த்தால், அம்மம்ம ! பின்னேயது எம்மட்டுச் சிறிதானது. எனவே இத்தகைய மாபெரும் பிரபஞ்சத்தில் அறிவிஞெளி திகழும் சில சிறிய சூட்சம சரீரங்களேக் காணுவதில் யாதொரு விந்தையு மில்லேயே. இன்னும் இத்தகைய பெரும் வேலேக்கு மேலாக நரமொரு விந்தையாகத் தோன்ற வில்லேயே. உலகத்திலுள்ள அபூர்வ அறிவுடைய விபூதி ருத்திராட்ச பூனேகளே யெல்லாம் கூட்டி எண்ணிஞலும் கூட சர்வ காலத்திலும் உழைக்கும் சர்வ வல்லமையுள்ள கடவுள் இதனினும் அறிதான, நல்லதான தொன்றைச் செய்திருக்கலாமென்றே தோன்றும். எனவே பொருளற்ற, குணமற்ற, சொரூபமற்ற எவ்விதமான ஒரு கடவுளேயும் நம்பி ஆக வேண்டியதில்லே.

அடுத்தபடியாக மதத்திற்கு அறத்துறைப்பட்ட எதிர்ப்பு உண்டு.

மதக்கோட்பாடுகள் மனிதன் இப்பொழுதிருப்பதைவிட கொடுமையாகவும், நாகரீகமில்லாமலுமிருந்த காலத்தில் ஏற்பட்டவை யாகும். எனவே, அவைகள் இப்பொழுதுள்ள ஒழுக்கச் சிந்தனே ஒப்பாத அநீதிகளே இன்றும் நிலேநாட்டக் கூடியனவாயிருக்கின்றன.

பல மதங்களும் அதிலும் விசேஷமாகக கிறிஸ்தவ மதமும் மனிதனுடைய தனிப்பட்ட ஆத்மாவை விசேஷமாக அழுத்திக் கூறுகின்றன. இதனல் சமூகங்களுடைய ஒழுக்க நியாயங்கள் பாதிக்கப்படுகின்றன. நல்ல குணமுடைய ஊக்கமான மனிதனின் இயற்கையான சுபாவம் நல்ல காரியங்களேச் செய்ய முயற்சிக்கும். ஆனல் அவனுடைய சக்திகளே யெல்லாம் பிடுங்கி உலக நடவடிக்கைகளில் அவனுக்கு யாதொரு இடமுமில்லாதபடிசெய்து விட்டால் அவன் தனது இயற்கையான வழியினின்றும் விலகி, மனதில் நல்லவனக இருப்பது தான் முக்கியமானது என்று தீர்மானிப்பான். மதங்கள் நம்மை இந்நிலேக்கே கொண்டு சேர்த்தன. செயல் வன்மையற்றவராலும் அடையத் தக்கதொன்ருக, பரிசுத்ததன்மை இருக்க வேண்டியதாக மதம் போதனேசெய்ததால், நாளடைவில் ஒரு மனிதனுடைய பரிசுத்த தன்மைக்கும், நல்ல செயல்களுக்கும் யாதொரு சம்பந்தமும் அற்றதாகக் கருதப் பட்டு விட்டது. எனவே சமூக ஒழுக்கம் மதத்தினின்றும் ஒதுக்கப் பட்டது. இன்று கூட சோரம் செய்யும் ஒருவன் லஞ்சம் வாங்குகிற ஒகு அரசாங்க உத்தியோகஸ்தனே விட அதிகக் கொடியவனகக் கருதப்படுகிருன். எனினும் பின்னவன் ஆயிரமடங்கு அதிகமான தீமைகளேயும், இன்னல்களேயும் விளை விக்கிருன். வழவழப்பான, சக்தியற்ற,சித்தத்திற்கு தோன்றிய ஒழுக்கமே மதம் பேணும்ஒழுக்கமாகும். உலகத்தை முற்றுந்துறந்த ஒருவன் முதிர்ந்த அறணுக்கம் கண்டவனும். தங்களுடைய வாளுள்களே பிறமதத்தவருடன் போராடிக் களிப்பதில் வீணுக்கிய சிலரே தம் கர்மங்களின் மூலமாக பரிசுத்தத்தை எய்தியவர்களாகக் கருதப்பட்டனர். சமணரை வென்றும் கழுவேற்றியும் முக்தி நிலேயடைந்ததாக குறிப்பிடும் சைவப்பெரியார்கள் புராணங்களே அறியாத தமிழரும் உண்டோ.

ஒரு தேசத்தின் சட்டங்களேயோ, நீதி முறைமையையோ அன்றிச் செல்வநிலேயையோ சீர்திருத்திய ஒருவனே மகாத்மாவாக்கிய மதக் கதைகளேக் காணேம். இவைகள் மதத்திற்கு முக்கியமாகத் தோன்றவில்லே. கடைத்தேங்காயைக் களவாடி வழிப்பிள்ளேயாருக் குடைத்து மகாத்துமாவான பெரியார் புராணங்கள் பலவுள. இவ்வாறு சமூகத்தையும் ஒழுக்கத்தையும் பிரித்தது போலவே மதம் ஆத்மாவையும் உடலேயும் நாளாவிர்த்தியில் பிரித்து தனித்தனியாகப் பாராட்டியது. ஒருவனுடைய உடலானது சமூகத்திற்காகவும், அவனுடைய ஆத்துமா அவனது பிரத்தியேகமான பாகத்திற்காகவும் நிற்பதாகக் கருதப் பட்டது. பல நூற்றுண்டுகளாக மதம் விளேவித்த பயனக மனிதர்கள்இயற்கைக்கு விரோதமாகத் தம்மைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பவர்களாகி விட்டார்கள். மனிதனேத் தன்னே சுற்றியிருக்கும் கோட்டையினின்றும் வெளியிலெடுத்துச் செல்லக் கூடிய சுபாவங்களான காதல்,குடும்ப ஆசை, தேசபக்தி என்பவற்றில் மதங்களால் முன்னிரண்டும் கண்டிக்கப்பட்டன; மூன்ருவதற்கு ஏகாதிபத்தியங்களுக்கு அடிமைப்பட்ட தேசங்களில் இடமில்லே. இவ்வாருக ஒரு மனிதன் தனக்குள்ளேயே தனது ஆத்மாவிற்கு தனிப்பட்ட விசேஷமும், சிறப்பும் தந்து கொள்ள வேண்டியதாயிற்று. இது ஒவ்வொருவனுடைய ஆத்மாவும் என்றும் இறவாத நிலேமையை உடையதென்ற [illegible] கையில் முடிந்தது. இ[illegible] சமய சந்தர்ப்பங்களுக்[illegible] முடிவற்ற இன்பமும், [illegible] அனுபவிக்க வேண்டியது. உதாரணமாக கிறிஸ்தவக் கொள்கைகளின் பிரகாரம் ஒரு குரு சில மந்திரங்களே முணுமுணுத்து தண்ணீர் தெளித்த பின்னர் ஒருவன் உயிர் விடுவானுயின் அவனது ஆத்மா என்றுமழியா இன்பத்தில் இருக்கும், ஆனல் ஒரு பரிசுத்தமான நல்லதர்ம வாழ்க்கையின் பின்,கல்தட்டி இடறியதால் கல்லேயோ,மண்ணேயோ கோபித்துக்கொண்டிருக்கும்பொழுது திடீரென்று இடிவிழுந்தோ வேறு காரணத்தாலோ அகஸ்மாத்தாய் இறந்துவிட்டால் அவனது ஆத்மாவிற்கு அழியாத்துயரம்தான். அதே மாதிரியாக ஹிந்துமதத்திலும் ஆண் சந்ததி ஏற்பட்டு வருடாவருடம் ஒருவனுக்குப்பிண்டம் போட்டாலொழிய அவனது ஆத்மாவிற்கு அவன் எவ்வளவு யோக்கியனக இருந்து இறந்திருந்தாலுங்கூட சாந்தி ஏற்

தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க.

"குடி அரசு"

எட்டாவது ஆண்டு.

அடுத்த வாரத்தோடு "குடி அரசு" பத்திரிகைக்கு 7-ம் ஆண்டு முடிகிறது. 8-ம் ஆண்டு முதல் இதழ் 1—5—32 தேதி முதல் ஆரம்பிக்கிறது. அன்று அதிக பக்கங்களோடும், நமது இயக்கப் பிரமுகர்களது தனி, விசேஷ கட்டுரைகளுடனும், படங்களுடனும் வெளிவரும்.

பெண்மக்கள் சமத்துவம்

[டி. கே. எம். சாமி]

நமது நாட்டில் பெண் மக்களுக்கு மதத்தின் பேரால், சாஸ்திரங்களின், சட்டத்தின் பேரால் ஏற்பட்டிருக்கும் ஆபத்துக்கள் எண்ணில. இவ்வளவு ஆபத்துகளுக்கும் தப்பிய பெண்கள் வெகுசிலரேயாவர்.

பெண்மக்களுக்குக் கல்வி புகட்டக்கூடாது, அவர்கள் கல்வி கற்றால் ஒழுங்கீனமான வழிகளில் நடந்து விடுவார்கள் என்ற ஓர் சமாதானம் நம் நாட்டு வைதீகர்களால் பெண்ணுலகுக்குக் கேடு சூழும் கொடும் பாவிகளால் சொல்லப்படுகிறது. இதில் எத்தகைய உண்மையிருக்கிறதென்று ஆராயப்புகின் அது விழலுக்கிரைத்த நீராகும். அன்னோர்களின் கூற்றையாராய்ந்தால் அதில் ஒரே ஒரு உண்மை எளிதில் கண்டு பிடித்து விடலாம். அது யாதெனில் அவர்களின் மனதில் பெண் என்பது ஒரு உயிருள்ள யந்திரமென்றும் அது ஆடவர்களின் மனதில் தோன்றும் ஒருவித காம இச்சையைத் தணிப்பதற்கும், மேன்மேலும் பிள்ளைகளைப் பெறுவதற்கும் தோன்றியிருப்பதாக அவர்களின்எண்ணமாகும். அவர்கள் எண்ணுவதே சரியாயின் பெண் மக்களுக்கு கண் காது மூக்கு முதலிய புறத் தோற்றங்களும் இல்லாமலிருந்தால் அவர்கள் கொண்ட கருத்தே உண்மையாகும்.

தமிழ் நாட்டில் மாபெருந்தலைவர்களில் ஒருவரும், சிறந்த ஆராய்ச்சியாளருமான ஒரு பெரியார் பெண் மக்களை பெண் தெய்வங்களென்று போற்றும்படி அறைகூவுகிறார். மேற்காட்டிய வைதீகர்களென்ற சீர்திருத்தக் கா[illegible] அப்பெரியாரின் நன்மொழிகளை கவனிக்குமாறு வேண்டுகிறேன். பால்யமணக் கொடுமையைப்பற்றி அதிகம் கூறவேண்டுவதில்லை. பால்மணம் மாறாத ஐந்து வயதுள்ள குழந்தையைமடியிலுட்கார வைத்து கல்யாணம் என்ற அர்த்தமற்ற சடங்கு நடத்தப்பட்டு விட்டதாலேயே அப்பெண்மணியின் வாழ்வு அவள் கழுத்தில் தாலியிட்டவனின்குணகுணத்தைப் பொருத்திருக்கிறது, அவன் அவளது குணத்துக்கு மாறுபட்ட குணமுடையவனாக இருந்து விட்டால் அவர்கள் வாழும் வாழ்வுக்கு இன்ப வாழ்வு என்ற பெயரை மாற்றி துன்ப வாழ்வு என்று பெயரிடல் பொருந்தும்.

பொதுவாக சதிபதிகள் ஒருவருக்கொருவர் மாறா அன்புள்ளவர்களாய் இன்பவாழ்வு நடத்த வேண்டுமாயின் அவர்கள் வாழ்வு காதல் வாழ்வாகத் திகழல் வேண்டும். தக்க பருவத்தில் ஒவ்வொரு ஆணும் ஒவ்வொரு பெண்ணுடனும், ஒவ்வொரு பெண்ணும் ஒவ்வொரு ஆணுடனும் ஒன்றுபட்டு வாழ்வு நடத்த விரும்புவது உலக இயல்பு ஆயினும் ஆண்களிலும் பெண்களிலும் பலவேறு குணகுணங்களை உடையவர்களிருக்கிறார்கள், பல வித தேக வேறுபாடுள்ளவர்களுமிருக்கிறார்கள், பல வித உருவமுடையவர்களுமிருக்கிறார்கள். ஆகையால் இளம் தம்பதிகளை ஒன்று சேர்த்து வைக்கும் பெரியோர்கள் ஒத்த குணமும் ஒத்த உடல் நலனும் உள்ளவர்களை ஒருவர்க்கொருவர் வாழ்க்கைத் துணையாக சேர்த்து வைக்க முயலுவார்களாக;

அவ்வாறு ஒன்றுபட்ட உள்ளமுடைய தம்பதிகளால் உண்டாக்கப்படும் எதிர்கால உலகமக்கள் திடகாத்திரர்களாயும் அன்பு இரக்கம் கருணை முதலிய குணசாலிகளாயும் வீர சிங்கங்களாயும் திகழ்வார்கள் என்பதில் ஐயமில்லை.

தனக்கிஷ்டமில்லாத தன்னால் காதலிக்கப்படாத ஒருவனை மணந்து அவனுக்குத் தன் வாழ்நாளைத் தத்தம் செய்து அதினின்றும் ஒழுக்கமான வழியில் தப்ப முடியாதவளாய் நின்று தவிக்கும் பெண்மணிகள் எத்தனைபேர். தன் மனதிற்கு விரோதமாக ஒருவனை மணந்து தன் வாழ்வில் அதிருப்தியடைந்து தன் காதலனைத் தேடியலைந்து நிற்கும் மனதை யடக்காது கூடா வொழுக்கம் என்ற பேயால் தாக்கப்பட்டு மானமழிந்து பேதையாய் நிற்கும் பெண்மணிகள் எத்தனை பேர். பக்குவமடைந்த வயதில் ஒத்த குணமும் ஒத்த நலனும் அழகுமுடைய வாலிபனை மணந்து இன்புறும் நாளில் வழுக்கைத் தலையும் பொக்கை வாயும் விநாய விக்கிரகத்தைப் போன்ற வயிறுமுள்ள கிழவனுடன் அவள் எப்படி உண்மை அன்புடன் குலாவமுடியும், அவனுடைய பொக்கைவாயிலிருந்து குழறிக் குழறி வரும் இன்பமற்ற வார்த்தைகளால் அவள் சமாதானமடைதல் எங்ஙனம் சுருங்கித் தொங்கும் அவனது தேகத்தைப்ஸ்பரிசிப்பதனால் அவள் எங்ஙனம் உண்மை இன்பமடைதல் கூடும்.

அவனுடைய கட்டுப்பாட்டுக்கிணங்கி நடப்பதுதான் பதிவிரதா தர்மமென்று உணர்த்தப்பட்ட அவனது கண்ணீரை அளந்து கூறல் எவ்வாறு முடியும்.

தன் காதலனும், தன்னால்வரிக்கப்பட்டவனுமான வாலிபன் தெருவில் போகும்போதெல்லாம் எவ்வாறு அவனைப் பாராமலிருக்க முடியும். அவனுடன் ஒன்றுபட்டுப் பேச அவாக்கொண்டு துடிக்கும் மனதை எத்தனை நாள் அடக்கிக்கொண்டிருக்க முடியும். எத்தனை நாள் அவனது பரிதாபமான பார்வைக்கு உபசாரங் கூறாமலிருக்க முடியும். அவனது அன்பில் வயப்பட்டு காதலென்ற பெரும் பேய்க்கு அடிமையாகி முடிவில் அவன் வயப்பட்டால் அவள், நமது மத சாஸ்திரப் புராண சட்டங்களின்படி விபசாரி என்ற கொடும் பட்டத்துக்கு ஆளாகிறாள். பிறரால் வெறுக்கப்படுகிறாள். கற்பிழந்தவர்களுக்கென்று ஓர் தனி நரகம் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறதென்ற கொடு மொழிகளைக் கேட்டு நெஞ்சங் குமுறுகிறாள்.

இத்தகைய நிலைமையில் அவளைக்கொண்டுவந்துவிட்ட நமது மதச் சட்டம் அவர்களை அதினின்றும் மீட்க ஓர் சட்டம் வகுக்கவில்லை, அவள் ஜீவியம் அவ்வாறு துக்கம் குடிகொண்டதாகவே வேண்டுமென்று வற்புறுத்தும். ஓர் மதத்தையோ, புராணத்தையோ பசிபிக் மகாசமுத்திரத்தில் போட்டு மூச்சு விடமுடியாமல் அழுத்திக் கொல்லவேண்டுமென்பதில் தப்பென்னமிருக்கிறது.

இவ்வாறு அடிமைக் குழியில் கிடந்து கடைத்தேறும் மார்க்கமின்றி கண்ணீருங் கம்பலையுமாய்க் கிடக்கும் சகோதர சகோதரிகளின் துன்பத்தைக் களையவேண்டுமானால் அவர்களை அடிமைக் குழியில் தள்ளிவைத்த ஆண்களுக்கு அடிமைத் தொழில் செய்யும்பொருட்டே படைக்கப் பட்டதாகவும், அதில் தவறுவாளேல் அவள் ஒழுக்க முறையைக் கைவிட்டவளாவாள் என்று பயமுறுத்திக் கூறும் ஓர் மதத்தை, சாஸ்திரத்தை, புராணத்தை நெருப்பிலிட்டுக் கொளுத்துங்களென்று அறைகூவுவோர் மீது காய்ந்து வீழ்ந்து, நாஸ்திகர்கள், தேசத் துரோகிகள், கோடாரிக் காம்புகள் என்ற இழிபெயர்களைச் சூட்டி அழைப்போரின் மட மதியைப் பாருங்கள்.

ஒரு தேசத்தின் தன்மை அதன் மக்களின் தன்மையைப் பொருத்திருக்கிறது. மக்களோ ஆண்மையைப் பொருத்திருக்கிறது, மக்களோ ஆண் பெண் என்ற இருபிரிவினர், இவர்களுள்ளும் ஒரு சமூகத்தார் பெரும் இன்ப வாழ்வுக்கு மற்றொரு சமூகத்தார் தங்கள் வாழ்வை நாசமாக்கிக்கொள்ளவேண்டுமென்ற சட்டம் இருக்கும், அந்த நாடு எவ்வாறு சுதந்திரமடையும். எவ்வாறு சுதந்திரத்திற்குப் போராடத்தான் தகுதியாகும்.

ஒரு தேச மக்கள் கண்விழித்து சுதந்திர உணர்ச்சிபெற்று சுயமரியாதையுடன் வாழவேண்டுமானால் அவர்களில் இரண்டிலொரு பாகமாக இரண்டறக் கலந்து நிற்கும் ஓர் சமூகத்தின் அடிமையைத் தகர்த்தெரிவதை விட முதல் வேலை வேறொன்று இருக்க முடியுமா? என்று தேசிய வர்திகள் கவனிக்க வேண்டுகிறோம். அவர்களின் அடிமையைத் தகர்த்தெரிய குறுக்கே நிற்கும்மதமோ, கடவுளோ, [illegible]ருக்களோ, இராஜாங்கமோ [illegible]வாயிருந்தாலும் அவைகளுடன் போராடி வெற்றி பெற வேண்டுமென்பதை எவரே மறுப்பர்.

சுதந்திரத்திற்காகப் போராடுபவன் தன்னிடம் அடிமைப்பட்டுக்கிடக்கும் மற்றவருடன் சுதந்திரத்துடனும் சமாதானத்துடனும் வாழ மறுத்தானாகில் எவ்வாறு அவன் உண்மைச் சுதந்திரம் பெற பாத்திரனாவான்.

சகோதரர்களே நாம் பிறந்த, நாம் வளர்க்கப்பட்ட, வருங்கால உலகைச் சீர்படுத்துகிற நம் தாயின் சமூக விடுதலைக்காகப் போராடும் சமயம் அதற்கு ஊறு செய்யாமலிருப்பீர்களாக.

அஸ்தி வாரக்கல் நாட்டு வைபவம்.

15-4-32 தேதி மாலை 5 30 மணிக் குவிருதுநகர்புதியமுனிசிப்பல் சத்திர கட்டிட அஸ்தி வாரக்கல் நாட்டு வைபவம், சென்னை அரசாங்க பொது இலாக்கா அமைச்சர் கனம் பி. டி. ராஜன் அவர்களால் நடை பெற்றது. அது சமயம் கனம் மந்திரி அவர்களுக்கு வரவேற்புப்பத்திர மொன்று நகர சபையாரால் வாசித்துக்கொடுக்கப்பட்டது.

Self-Respect University.

சுயமரியாதைப்பரீக்ஷை.

பொருளாதாரம் (Economics) 1.

—:0:—

மார்க் 100] [நேரம் 3-மணி

குறிப்பு:—கேள்விகளுக்கு எழுதப்படும்பதில்கள் விபரமாகவும், விரிவாகவும் எழுதப்படவேண்டும். பதில்கள் கூடியவரையில் பொருளாதார சாஸ்திரத்தை ஒட்டியே எழுதப்படவேண்டும்.

(S. G. பரீட்சகர்.)

(ஏதேனும் 5 கேள்விகளுக்கு விடை எழுதவும்)

I இந்தியாவிலுள்ள கோவில்களில் சுமார் எவ்வளவு செல்வம் இருக்கும் என்பதைப்புள்ளி விபரங்களோடு எழுதி அவைகள் எப்படி தொழில்வளர்ச்சிக்குப்பிரயோஜனப்படாமல் போகின்றன என்பதை விளக்கவும்.

II "இந்தியாவிலுள்ள தங்கத்தில் பெரும்பாலானவை கோவில்களுள்ளும் மனிதர்கள் மேலும் இருந்து தேய்வதால் இந்தியா தங்க நாணயத்திற்கு (Gold Currency) லாயக்கில்லை" இதை ஆராய்ச்சி செய்யவும்.

III மேல்ஜாதிக்காரராகிய பார்ப்பனரே மேலும் மேலும் பணக்காரர்களாய்ப் போய்க்கொண்டிருப்பதற்கும், மற்றவர்கள் வர வர ஏழைகளாகவே போய்க்கொண்டிருப்பதற்கும் பொருளாதாரத் துறை சம்மந்தமாக உள்ள காரணங்களை எழுதி, அவைகளை நிருத்துவதற்கு வேண்டிய விமோசனங்களையும் விவரித்து எழுதவும்.

IV "தக்ளியிலும்" ராட்டினத்திலும் நூல் நூற்றுப்பொருளாதார முன்னேற்றமடையலாம் என்பது பொருளாதாரம் தெரியாத சூன்யர்களுடைய மனோராஜ்யமேயாகும்." இதைக்காரணகாரியங்களோடும் இதர நாடுகளின் பொருளாதார மேற்கோள்களோடும் விளக்கி நிரூபிக்கவும்.

V கீழ்க்கண்டவைகளைப்பற்றி சிறு குறிப்புகள் எழுதவும்:—

(a) கடன்வாங்கி கல்யாணம் செய்தல்.
(b) தேர் உற்சவம்
(c) சிரார்த்தச் செலவு
(d) மகாமகமும் ரயில்வேக்காரரும்
(e) லட்சப்பிராமண போஜனம்
(f) ரங்கநாதர் லாட்டரி
(g) சங்கராச்சாரியின் பகற்கொள்ளை

VI திருச்சி தாயுமானவர்கோவிலை மருத்துவ ஆஸ்பத்திரியாக்குவதிலும், திருப்பதி வெங்கடாசலபதி கோவிலை இலவச ஆஸ்பத்திரியாக்குவதிலும், சென்னை பார்த்தசாரதி கோவிலை இலவச பள்ளிக்கூடமாக்குவதிலும் ஜனசமூகத்திற்குள்ள லாபம் என்னவென்பதைப்பொருளாதார முறையில் விளக்கி எழுதுக.

VII சங்கராச்சாரி, மடாதிபதி, ஜீயர், போப், பாதிரி, முல்லா, முதலியவர்களிடமிருக்கும் சொத்துக்களை சர்க்கார் பறிமுதல் செய்து அவைகளைக்கொண்டு தொழிற்சாலைகள் வைத்தால் நாடு க்ஷேமமுறும் என்பதை தகுந்த உதாரணங்களோடு விளக்கி ஒரு வியாசம் வரையவும்.

VIII விபசாரத்தடைச்சட்டமானது ராஜதானி முழுதும் அமுலுக்கு வந்து, விபசாரம் அடியோடு நின்றுவிட்டால் (அல்லது ரொம்பவும் குறைந்துவிட்டால்) டாக்டர்களுக்கும், அதிகவட்டிக்குக் கடன் கொடுப்பவர்களுக்கும், வக்கீல்களுக்கும், போலீசுக்கும், மருந்துக்கடைக்காரர்களுக்கும், பொதுவாக பார்ப்பனர்களுக்கும் பெரிய பொருள் நஷ்டம் ஏற்படும் என்பதைப்பொருளாதார முறையில் விளக்கி எழுதவும்.

IX "பார்ப்பனரல்லாதார் பிரசுதார்களின் பணமே இன்று பார்ப்பனன் சாப்பிடும் ஆகாரத்தின் ஒவ்வொரு அணுவிலும் போய்ச்சேர்ந்திருக்கிறது" இக்கருத்தை விளக்கவும்

X "பார்ப்பனன் என்ற ஒரு ஜாதி இருக்கிறவரையில் சோம்பேரித்தனம் என்பது இந்தியாவைவிட்டுப் போகவே போகாது" இதை விளக்கி ஒரு வியாசம் எழுதவும்.

XI லட்சுமியானவள் (செல்வம் Wealth) இந்தியாவை விட்டுப்போவதற்கு நமது கடவுள்களும் மதங்களுமே காரணம் என்பதை சரியான உதாரணங்களோடு விளக்கி எழுதவும்.

XII பணக்காரன் ஏழை என்ற வித்தியாசம் அடியோடு ஒழியும்வரையில் சுயராஜ்யமோ, ராமராஜ்யமோ வேறு எந்த ராஜ்யம் வந்தாலும் இந்தியமக்களின் பெரும்பாலானவர்களின் கஷ்டமும் வறுமையும் ஒழியப்போவதேகிடையாது என்பதைத் தக்க காரணங்களோடு நிரூபித்து எழுதவும்.

XIII "தனி ஒரு மனிதனுக்குணவில்லையெனில் ஜகத்தினை யழித்திடுவோம்" இதில் பொதிந்துள்ள கருத்தை விளக்கி ஒரு வியாசம் வரைவதோடு, காங்கிரஸ் கேட்கும் சுயராஜ்யத்திற்கும் மேற்சொன்ன கருத்திற்கும் எப்படி முரண்பாடு இருக்கிறதென்பதையும் விளக்கிக்காட்டவும்.

ஜெர்மனியில் கடவுள் எதிர்ப்புப் பிரசாரம்.

கடவுள் எதிர்ப்புப் பிரசாரத்தில் ஜெர்மனி இப்போது பிரதம ஸ்தானம் வகிக்கிறது. சாதாரண பாமர மக்களிடையே பிரசாரம் செய்து ஊழியர் நல்ல பலனை அடைந்து வருகிறார்கள்.

1929-௵ சுமார் 42855 கத்தோலிக்கர்கள் மாதாகோவிலைப் புறக்கணித்தார்கள். அவர்களில் சுமார் 38009-பேர் தாங்கள் எம் மதத்திலும் சேர்ந்தவர்களல்லவென்று பிரசித்தம் செய்திருக்கிறார்கள். 1931-௵ மார்ச்சு-௴ 18-௳ கூடிய அகில தேச பகுத்தறிவாளர் சங்க விருப்பப்படி இந்த இயக்கத்திற்கு பெர்லின் நகரம் முக்கிய ஸ்தானமாயிருந்து வருகிறது. மாஸ்கோவிற்கும், பெர்லினுக்கும் இதுவிஷயத்தில் நெருங்கிய சம்மந்தமிருந்துவருகிறது.

ஏராளமான புஸ்தகங்களும், துண்டுப் பிரசுரங்களும் நாடெங்கும் பரப்பட்டுவருகிறது. ஒரு துண்டுப் பிரசுரத்தில் "சென்ற 25-வருடங்களாக வேலைசெய்துவருகிறோம். இப்போது 600,000 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். 2-லட்சம் கிறிஸ்தவர்கள் கோவிலுக்குப் போவதை விட்டிருக்கிறார்கள்- இது எங்கள் வேலைக்கு ஊக்கமளிப்பதா யிருக்கின்றது." என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

பெர்லின் நகரத்தின் சுற்றுப்புறங்களில் பிரசாரம் செய்ததின் பலனாய் 1930-௵ அக்டோபர்-மாதமிருந்து 1931-௵ மார்ச்சு-மாதத்திற்குள் கடவுள் இல்லையென்று சொல்லக் கூடியவர்களின் தொகை 88200-லிருந்து 119,400-ஆக உயர்ந்தது. இவ்வியக்கத்தின் பத்திரிக்கை 1265000 பிரதிகள் அச்சடிக்கப்பட்டு வெளியாகிறது. இவ்வியக்கப் பிரசாரத்தை இன்னுமதிகமாக ஊக்கப்படுத்தவும், உணர்ச்சி உண்டாக்கவும் சொற்பொழிவுகள் மூலமும், கிராமபோன்கள் மூலமும், ரேடியோ மூலமும், நாடக மூலமும், பாட்டுகள் மூலமும் பிரச்சாரம் வலுப்படுத்தப்படுகிறது. பாடகர்கள் கூட்டங் கூட்டமாகச் சேர்ந்து சாதாரண மக்கள் வசிக்கும் சேரிகளுக்குச்சென்று முக்கியமான இடங்களில் பிரசாரம் செய்வதன்றி கூட்டத்திலேயே அப்போதைக்கப்போது ஏராளமான அங்கத்தினர்களைச் சேர்த்து விடுகின்றனர்.

அன்னபூரணி-ரத்தினசபாபதி திருமணம்.

கோலார் தங்கவயலில் முன் குறித்தபடி சரியாக 10—4—32ந் தேதி மாலை 6-மணிக்கு மணப்பந்தலில் உயர்திரு தருமதீரபிக்கு அவர்கள் தலைமை வகித்தார். மணாளி அவரிடம் பஞ்சசீல தருமோப தேசம் பெற்றுக்கொண்டபின் மணாளிருவரும் மணவறை அமர்ந்தனர். தலைவர் உத்திரவுப்படி மணாளன் தனது உடன்படிக்கையைச் சபையில் பகிரங்கப்படுத்திக் கையெழுத்திட்டார். பிறகு மணாளி உடன்படிக்கையைப் பிரங்கப்படுத்திக் கையெழுத்திட்டார். பிறகு மணாளர் இருவரும் ஒருவருக்கொருவர் மோதிரம்மாற்றிக்கொண்டு மாலையும் மாற்றிக் கொண்டனர். பிறகு மணாளிருவரும் திருமண சம்மந்தமான மூன்று உறுதி வாக்கியங்களை வெளியிட்டமார்ந்தனர். பிறகு மணாளர்க்குப் பலவிதமான பரிசுகள் வழங்கப்பட்டது. பற்பல சங்கங்களினின்றும் பிரதிநிதிகள் விஜயம் செய்திருந்தமையும், வாழ்த்தல் தந்திகள் வாழ்த்தல் கடிதங்கள் முதலியவற்றைச் சபையோருக்கு வாசித்துக் காட்டப்பட்டது. தங்க வயலிலுள்ள பல சங்கத்தவர்களால் பல உபசாரப் பத்திரங்களும் வாழ்த்துப் பாக்களும் வாசித்தளிக்கப்பட்டதென ஒரு நிருபர் எழுதுகிறார்.

குடி அரசு.

ஈரோடு 1932 எப்ரல்மீ 17-உ

கவியும், பண்டிதரும்.

—:0:—

காங்கிரஸ் கமிட்டியின் தீர்மானத்தின் பேரில், காங்கிரஸ்காரர்கள் சட்ட மறுப்பு இயக்கத்தை நடத்திக் கொண்டு இருக்கும் காலத்திலேயே பூரியில் அகில இந்திய காங்கிரஸ் மகாநாட்டையும் கூட்ட ஏற்பாடு செய்திருந்தார்கள். ஆனால் அரசாங்கத்தார் சட்ட மறுப்பு இயக்கத்தைக் காங்கிரஸ் காரர்கள் நடத்திக் கொண்டிருக்கும் போது காங்கிரஸ் மகாநாடு கூடினால், சட்ட மறுப்பு இயக்கத்தை இன்னும் பலப்படுத்துவதற்குக்காரணமாகும் என்று கூறி பூரி காங்கிரசைத் தடுத்து விட்டார்கள்.

இதன் பின் காங்கிரஸ் கமிட்டியினர் மகாநாடு கூட்டும் விஷயத்தில் கவலை கொள்ளுவதை விட்டுச் சட்டமறுப்பு இயக்கத்தையே நடத்தினர். இதன் பலனைக் காங்கிரஸ் நிர்வாகக்கமிட்டி அங்கத்தினர் பெரும்பாலும் சிறை சென்று விட்டனர். இப்பொழுது வெளியிலிருப்பவர்கள் இரண்டொருவரே யாவார்கள்.

இந்த நிலையில் இப்பொழுது காங்கிரசின் ஆக்டிங் தலைவராக இருக்கும் திருமதிசரோஜினிதேவியார் காங்கிரசின் 47 வது மகாநாட்டை டில்லியில் கூட்டத் தீர்மானித்து, அதற்குத் திரு. மாளவியா பண்டிதரைத் தலைமை வகிக்கும்படி கேட்டு, அவரும் ஒப்புக்கொண்டு, மற்றும் மகாநாட்டு உத்தியோகஸ்தர்களும் நியமிக்கப்பட்டுப் பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்டன.

இதற்கிடையில் அரசாங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஒருஅறிக்கையில், "காங்கிரசை நடத்த முன் வருவோர், சட்ட மறுப்பு இயக்கத்திற்கு ஆதரவான தீர்மானங்கள் ஒன்றும் காங்கிரஸ் கூட்டத்தில் கொண்டு வரப்பட மாட்டாதென்று உறுதி கூறினால், காங்கிரஸ் கூட்டத்திற்கு அரசாங்கத்தார் ஒரு தடையும் செய்ய மாட்டார்கள்" என்ற விஷயம் காணப்பட்டது. இதை திருமதி சரோஜினி தேவியாரும், திரு. மாளவியா பண்டிதரும் கவனித்துத் தானிருக்க வேண்டும்.

இந்த நிலையில், டில்லி மகாநாட்டுக்குக் காரியதரிசியாக நியமிக்கப்பட்டிருந்தவர் மகாநாடு கூடுவதற்கு வழக்கம் போல இடவசதியளிக்கவேண்டுமென டில்லி கமிஷனருக்கு எழுதியிருந்தார். கமிஷனர், கலெக்டர் மூலமாக, காங்கிரஸ் சட்டமறுப்பு இயக்கத்தை நடத்தி வருவதால் இடவசதியளிக்க முடியாது எனக்கூறி விட்டார்.

இவ்விஷயம் வெளியானவுடன் நமது நாட்டுப் பத்திரிகைகள் எல்லாம், அரசாங்கத்தாரின் செய்கையைக் கண்டிக்க ஆரம்பித்து விட்டன. ஜனங்களிடையில் கொஞ்சங் கொஞ்சமாக மறந்து போய்க் கொண்டிருந்த காங்கிரஸ் பெயரை மறுபடியும் ஞாபகப் படுத்தப் பட்டது.

டில்லியில் கூடுவதாக ஏற்பாடு செய்த காங்கிரசைப் பற்றிப் பலர் பலவாறாக அபிப்பிராயங்கூறினர். திரு. மாளவியா பண்டிதர், மிதவாத நோக்கமுடையவராகையாலும், திரு. சரோஜினி தேவியாரும், தென்னாப்பிரிக்காவிலிருந்து வந்த பின் சட்ட மறுப்புக்கான காரியத்தில் இறங்கிச் சிறை செல்லாமலிருப்பதனாலும், இருவரும், அரசாங்கத்திற்கும், காங்கிரசிற்கும் சமரசம் உண்டாகும்படியான மார்க்கத்திற்காக ஏற்பாடு செய்வார்களென்று சிலர் கூறினார்கள். சிலர் அமிதவாதிகளிடமுள்ள காங்கிரசை மிதவாதிகளும், புத்திசாலிகளான இளைஞர்களும் கைப்பற்றிக் கொள்ளப் போகிறார்களென்று கூறினர்கள், இவ்வாறு பலர் அபிப்பிராயம் கொண்டது வெறும் யூகமே ஒழிய வேறு இதற்குத் தக்க காரணம் ஒன்றும் கிடைக்க வில்லை.

ஆனால் எதற்காக, திருமதி, சரோஜினி தேவியாரும், திரு. மாளவியா பண்டிதரும் மகாநாடு கூட்ட முன் வந்தார்களென்றால், இருக்கின்ற கிளர்ச்சிகள் போதாவென்று இன்னுஞ் சில கிளர்ச்சிகளை உண்டாக்கித் தேசத்தில் குழப்பத்தை உண்டு பண்ணும் பொருட்டாகவே என்று தான் நாம் கூறுவோம்.

உண்மையில் திருமதி, சரோஜினி தேவியாரும், திரு. மாளவியா பண்டிதரும் சட்டமறுப்பு இயக்கத்தை நிறுத்த முயற்சி செய்யும் நோக்கமுடையவராயிருந்தால், அல்லது அரசாங்கத்தாருக்கும், காங்கிரசுக்கும் சமாதானம் செய்து வைப்பவர்களாயிருந்தால் சட்டமறுப்பு இயக்கத்தை நிறுத்தும்படி காங்கிரஸ்காரர்களை வேண்டிக்கொண்டு மகாநாடு கூட்டும் விஷயத்தில் பிரவேசித்திருக்கலாம். இவர்கள் இவ்வாறு ஒன்றும் செய்ய முன்வரவில்லை. அல்லது அவர்களாவது தனித்த முறையிலாவது சட்ட மறுப்பு இயக்கத்தைக் கண்டிக்கின்றவர்களாகவுமில்லை. இந்த நிலையில் இவர்களால் நடைபெறக்கூடிய ஒரு மகாநாடு சட்ட மறுப்பு இயக்கத்திற்கு ஆதரவளிக்கும் நோக்கத்தோடு கூடுகிறது என்று தான் யாரும் கருதக் கூடுமே யொழிய வேறு வகையாக ஒரு நாளும் கருதவே முடியாது.

அன்றியும், இவ்விருவருடைய தனித்தனி நடவடிக்கைகளை யெடுத்துக் கொண்டு பார்த்தால், ஒருவரையாவது நம்பி ஒரு காரியத்தையும் செய்ய முடியாது.

முதலில் திருமதி, சரோஜினி தேவியாரை எடுத்துக் கொள்வோம். அவர் ஒரு கவி என்பது நாடறிந்த விஷயம். எப்பொழுதுமே, கவிகளும் மகாத்மாக்களும், பைத்தியக்காரர்களும், பாலர்களும், பக்தர்களும், பேதையர்களும் ஒரு தன்மையானவர்கள். இவர்கள் எப்பொழுதும் உறுதியாக இருக்க மாட்டார்கள். இவர்களுக்குப்பொறுப்பு என்பதும் இருக்காது. இவர்களை நம்பி ஒரு காரியமும் செய்ய முடியாது; என்பது உலகறிந்த விஷயமாகும். ஆகவே கவியரசியாகிய திருமதி சரோஜினியாரைத் தேசத்தின் அமைதியைப் பாதுகாப்பவர் என்று எப்படி நம்பமுடியும்.

இரண்டாவது திரு. மாளவியா பண்டிதரை எடுத்துக் கொள்ளுவோம். இவர் மிதவாதி என்பது உண்மையே. ஆனால் வருணாச்சிரம வாதி என்பதை யாரும் மறுக்க முடியாது. சென்ற வட்ட மேஜை மகாநாட்டில், வகுப்புப் பிரச்சினை சம்பந்தமாக திரு. காந்தியார் பிடிவாதமாக இருந்து குழப்பம் விளைத்ததற்கு உறுதியான பக்க பலமாக இருந்தவர் திரு மாளவியா பண்டிதரே என்பதை யாரும் அறிவார்கள். இத்தகைய பண்டிதரைத் தலைமையாகக் கொள்ளும் காங்கிரஸ், முழு வருணாச்சிரம தரும ஸ்தாபனமாகவும், இந்து முஸ்லீம் கலகத்தை அதிகப்படுத்துகின்ற ஸ்தாபனமாகவும், தாழ்த்தப்பட்டார் உயர்த்திக் கொண்டிருப்பவர் சண்டையைப் பெருக்குகின்ற ஸ்தாபனமாகவும் மாறக் கூடுமே யொழிய வேறு எந்த வகையிலும் சீர்திருத்த மடைய முடியா தென்பது நிச்சயம்.

ஆகவே, இவ்விருவரும், திடீரென காங்கிரஸ்கூட்ட முற்பட்டபோது, "சட்ட மறுப்பு இயக்கம் நடைமுறையில் இருக்கும்போது, காங்கிரஸ் மகாநாட்டை நடத்த அரசாங்கத்தார் இடங் கொடுக்கமாட்டார்கள்" என்னும் விஷயம் அவர்கள் புத்தியில் படாமல் இருந்திருக்கமுடியாது. அவர்கள் சொந்த புத்தியில் படாமலிருந்தாலும், அரசாங்கத்தார் வெளியிட்ட அறிக்கையையாவது நிச்சயமாகப் பார்த்திருக்கலாம். இருந்தும் சட்ட மறுப்புச் சம்பந்தமாக ஒன்றும் பேசாமல் மகாநாடு கூட்டுவதாகத் தடபுடல் செய்தது வீண் கிளர்ச்சிக்கேயாகும். இதன்மூலம் அரசாங்கத்தை ஆதரிக்கின்றவர்கள் மனத்திலும் அரசாங்கத்தைப்பற்றிய வெறுப்பை உண்டாக்கிச் சட்டமறுப்பைப் பலப்படுத்துவதற்குச் செய்த தந்திரமேயாகும்.

அன்றியும், காங்கிரசையும், சட்டமறுப்பையும் ஞாயமானதென்றும், அரசாங்கத்தாரின் செய்கைகள் அநியாயமானவைகளென்றும் சொல்லிக்கொண்டும், தம்மையும் காங்கிரஸ்காரர்கள் என்று கூறிக்கொண்டும், ஆனால் இன்னும் சட்டமறுப்புச்செய்து சிறைக்குமாத்திரம் போகாமலிருக்கின்ற திருமதி சரோஜினிதேவியாரும், திரு மாளவியா பண்டிதரும் காங்கிரசுக்காக மிகவும் பாடுபடுகின்றார்கள் என்று புகழ் பெறுவதற்காகவே டில்லியில் மகாநாடு கூட்ட முயற்சித்தார்களென்றும் கூறலாம்.

உண்மையில் இவர்கள் சட்ட மறுப்பை ஆதரிக்கின்றவர்களாயிருந்தால் இப்பொழுது சிறைக்குள் வாசஞ்செய்து கொண்டிருக்கவேண்டும். அல்லது காங்கிரசுக்கும், அரசாங்கத்திற்கும் சமரசம் பண்ணி நாட்டில் அமைதியை உண்டாக்கும் நோக்கமுடையவர்களாயிருந்தால் சட்டமறுப்பு இயக்கத்தை நிறுத்துவதற்கு வழிதேடியிருக்கவேண்டும். இரண்டுமில்லாமல், அரசாங்கத்தின் எண்ணந் தெரிந்தும் மகாநாடு கூட்ட முற்பட்டது எதற்காக என்றுதான் கேட்கின்றோம்.

ஆகவே அரசாங்கத்தார் தேசமிருக்கும் தற்போதைய குழப்பமான நிலையில், நிபந்தனை கூறாமல் காங்கிரஸ் மகாநாடு கூடத் தொடங்கியதைத் தடுத்த விஷயத்தை நியாய புத்தி உடையவர்கள் எவரும் அக்கிரமமானதென்று கூற முடியாது, தும்பை விட்டுவிட்டு

வாலைப்பிடிக்க முயற்சிப்பதுபோல் ஒரு நிபந்தனையும் இல்லாமல் காங்கிரசை நடத்தும்படி விட்டுவிட்டுப் பிறகு அவர்கள் சட்ட மறுப்புக்கு ஆதரவான தீர்மானங்களை நிறைவேற்றியபின் இன்னும் பலமான அடக்குமுறைகளைக் கையாளுவதன் மூலம், தேசத்தில் அதிகமான குழப்பம் உண்டாவதை இப்பொழுதே தடுக்க முன்வந்ததைப் புத்திசாலித்தனமான காரியமென்றே நாம் அபிப்பிராயப்படுகிறோம்,

இது நிற்க, இனி டில்லி காங்கிரசைப்பற்றி இன்னும் சில விஷயங்களைக் கவனிப்போம். டில்லி காங்கிரசுக்கு அரசாங்கத்தார் ஆதரவளிக்க மறுத்தபின்னர் திருமதி சரோஜினியார் வெளியிட்ட அபிப்பிராயத்தில் "சர்க்கார் காங்கிரஸ் கூட்டத்திற்குத் தடை செய்தது அதைப் பாராட்டியது போலவேயாகும். ஆகையால் எப்படியும் காங்கிரசை நடத்தியே தீருவேன்" என்று கூறியிருக்கிறார். திரு. மாளவியா பண்டிதரும் "காங்கிரசைப் பொருத்தமட்டில் வருடாந்தரக் கூட்டத்தைக் கூட்ட ஏற்பாடு நடந்து கொண்டுதானிருக்கிறது. குறிப்பிட்ட தேதியில் டில்லியில் கூட்டம் நடக்கலாம்" என்று ஒருவகையாகச் சந்தேகமான அபிப்பிராயத்தை வெளியிட்டார்.

இதன்பின் டில்லி காங்கிரஸ் காரியதரிசியாகிய திரு. சாஹ்னி வெளியிட்டிருக்கும் அறிக்கையில் "அரசாங்கத்தார் டில்லி காங்கிரசுக்கு ஆதரவளிக்க மறுத்தாலும், வருஷாந்தரக் கூட்டத்தைக் கூட்ட வரவேற்புக் கழகத்தினர் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டுதானிருக்கின்றனர். இம்மகாநாட்டிற்குவரும் பிரதிநிதிகள் இதனால் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களை ஏற்கத் தயாராயிருக்கவேண்டும்" என்று கூறியிருக்கிறார்,

ஆனால் அரசாங்கத்தாரின் அபிப்பிராயம், மாறிவிட்டதாகத் தெரியவில்லை. காங்கிரஸ் கூட்டத்தை நடக்கவொட்டாமல் செய்யவேண்டும் என்னும் நோக்கம், அரசாங்கத்தாரிடம் உறுதியாக இருப்பதாகத் தெரிகின்றது. இந்த நிலையில் கூட்டப்படும் காங்கிரசினால் குழப்பமும், கலகமும் ஏற்படப் போவதைத் தவிர வேறு என்ன நன்மை ஏற்படப்போகிறது?

அன்றியும், டில்லி காங்கிரஸ் விஷயத்தில், தற்சமயம் காங்கிரசில் உள்ள அதிதீவிர வாதிகளுக்கு நம்பிக்கை இல்லை என்றும், அதைக் கூட்டுவதில் விருப்பமில்லையென்றும் சொல்லப்படுகிறது. பாஞ்சாலத்திலுள்ள தீவிர காங்கிரஸ் வாதிகள் டில்லி மகாநாட்டை ஆதரிக்கவில்லையென்றும் தெரிகிறது.

ஆகவே, காங்கிரஸ்காரர்களின் ஆதரவில்லாத நிலையிலும், அரசாங்கத்தாரின் எதிர்ப்புக்கிடையிலும், கூட்டப்படுவதாக இருக்கும் இக் கூட்டம் காங்கிரஸ் கூட்டமாகாது.

காங்கிரஸ்காரர்களைத் தவிர மற்றவர்களிடம், திருமதி சரோஜினியாருக்கும், திரு. மாளவியா பண்டிதருக்கும் செல்வாக்கில்லாமையால், இது தேச மக்களின் கூட்டமும் ஆகாது. வீணாகக்கிளர்ச்சியையும், கலகத்தையும், குழப்பத்தையும் உண்டாக்குகின்ற ஒரு போலிக் கூட்டமே யாகுமென்றுதான் நாம் கூறுகின்றோம்.

ஆகையால் இக் கூட்டத்தையோ, இக் கூட்டம் சம்பந்தமான கிளர்ச்சியையோ கண்டு யாரும் ஏமாந்துபோக வேண்டாமென எச்சரிக்கை செய்கின்றோம்.

மீண்டும் குழந்தை மணம்.

பால்ய விவாகத் தடைச் சட்டமாகிய சாரதா சட்டம் தோன்றிய நாள்முதல், அதற்கு உண்டான ஆபத்துக்கள் அளவற்றவை. வைதீகர்கள் அதை ஒழிப்பதற்குச் சூழ்ச்சிகள் பல செய்து கொண்டு வந்தார்கள். காங்கிரஸ்காரர்களின் சட்ட மறுப்பு ஒருபுறம், அச்சட்டத்தை அமல் நடத்தாமல் தடை செய்து கொண்டு வந்தது. அரசாங்கத்தாரின் அலட்சிய புத்தி ஒருபுறம் பெருந்தடையாக இருந்துவந்தது, ஆனால் இப்பொழுது அச்சட்டமே செல்லத் தக்கது அல்ல என்பதற்குத் தகுந்த ஆதாரம் அகப்பட்டு விட்டது.

திரு. வசந்த குமாரதாஸ் என்பவர், 14 வயதுக்கு உட்பட்ட தனது மகளை மணஞ் செய்து கொடுக்க ஏற்பாடு செய்திருந்ததைத் தடை செய்திருந்தும், தடையுத்தரவை மீறி விவாகம் நடத்தப்பட்டது. அதன் பின் ஜில்லாக் கோர்ட்டில் வழக்குத் தொடரப்பட்டு, பேக்கர் கஞ்ச் ஜில்லா நீதிபதி, திரு, வசந்த குமாரதாசை சிவில் ஜெயிலுக்கு அனுப்ப உத்தரவு பிறப்பித்தார். இவ்வுத்தரவை ரத்து செய்ய வேண்டுமென கல்கத்தா ஹைக் கோர்ட்டுக்கு விண்ணப்பித்து "1780, 1797 ஆகிய வருஷங்களில் பார்லிமெண்டில் நிறைவேறிய கிழக்கிந்திய கம்பெனிச் சட்டங்கள் இன்னும் ரத்தாகாமலிருக்கும் போது ஒரு இந்து தனது மகளை விவாகம் பண்ணிக் கொடுப்பதற்கு உள்ள உரிமையையும், அதிகாரத்தையும் மறுக்க முடியாது" என்று விவாதிக்கப்பட்டது. ஹைக்கோர்ட்டு நீதிபதிகளும் இதை ஒப்புக் கொண்டு ஜில்லா நீதிபதியின் உத்தரவை ரத்து செய்தனர்.

இவ்வழக்கினால் சாரதா சட்டம் பயனற்றதெனத் தெரிந்து விட்டது.

இவ்வழக்கில் எடுத்துக் காட்டப்பட்ட 1780 ஆம் வருஷத்திய கிழக்கிந்திய கம்பெனிச் சட்டத்தில் 18 வது விதியில் "சுதேசிகளுடைய பழக்க வழக்கங்களுக்குச் சாதகமளிக்கும் பொருட்டு இந்து, முகம்மதிய சட்டங்களின் படியும், அக்குடும்பங்களின் வழக்கப்படியும், குடும்பத்தின் தந்தைக்கும், முதலாளிக்கும் உள்ள உரிமையில் தலையிடுவதில்லையென்று பார்லிமெண்ட் தீர்மானிக்கிறது. இவர்கள் தங்கள் குடும்பங்களுக்குள் செய்து கொள்ளும் காரியங்கள் இங்கிலாந்து சட்டங்களுக்கு விரோதமாக இருந்தாலும் அவை குற்றமாகா" என்றும்,

1797வது கிழக்கிந்திய கம்பெனிச் சட்டத்தில் 12 வது பிரிவில் "சுதேசிகளின் சமூகப்பழக்க வழக்கங்களுக்குப் பாதகம் ஏற்படாதிருக்கும் பொருட்டு குடும்ப சம்பந்தமாக இந்து, முஸ்லீம் தந்தைகளுக்கும், முதலாளிகளுக்கும் உள்ள உரிமையில் எத்தகைய கோர்ட்டு நடவடிக்கையும் தலையிடக்கூடாது என இச்சட்டம் கட்டளையிடுகிறது" என்றும் இருக்கின்றன.

இந்தப் பழைய துருப்பிடித்த சட்டங்கள் தான் இப்பொழுது சாரதா சட்டத்திற்கு ஆபத்தை விளைவித்ததாகும்.

இனி சாரதா சட்டம் பயன்படவேண்டுமானால், பார்லிமெண்டின் இந்தப் பழைய சட்டங்கள் ரத்தாக வேண்டும். அல்லது சாரதா சட்டத்தில், பழைய சட்டங்களில் உள்ள இவ்விதிகள் செல்லத் தக்கவைகள் அல்லவெனக் குறிப்பிடப்பட வேண்டும். சாரதா சட்டத்தை நிறைவேற்றிய ஆரம்பகாலத்திலேயே இதைக் கவனித்திருந்தால் இப்பொழுது இத்தகைய சங்கடம் ஏற்பட இடமிருந்திருக்காது.

இவ்விரண்டு காரியங்களைச் செய்யும் விஷயத்திலும் பல சங்கடங்கள் ஏற்படக் கூடும். நமது நாட்டு வைதீகர்களும்; அவர்களுக்குச் சாதகமாக இருக்கும் அரசியல் கிளர்ச்சிக்காரர்களும் சும்மா இருக்க மாட்டார்கள்.

ஒரு சமயம், இந்திய அரசாங்கத்தாரின் முயற்சியினால், பார்லிமெண்டில் பழைய சட்டங்கள் முழுவதையுமோ, அல்லது அவற்றில் உள்ள மேற்காட்டிய பிரிவுகளையோ ரத்துச் செய்வதற்கு ஏற்பாடாகுமானால், நமது வைதீகர்கள், அரசாங்கம், பழைய வாக்குறுதிகளை மீறுகிறதென்றும், மதத்தில் தலையிடுகிறதென்றும், கூறி அரசாங்கத்தின்மேல் பழி தூற்ற ஆரம்பித்துவிடுவார்கள். இதை வருணாச்சிரமதரும அரசியல் கிளர்ச்சிக்காரர்களும், அரசாங்கத்தைத் தூற்றுவதற்கு ஒரு ஆதாரமாக வைத்துக்கொள்ளுவார்கள். ஆகையால், இச் சமயத்தில், அரசாங்கத்தார், மேற்கண்ட பழைய சட்டங்களையோ அல்லது அவற்றில் உள்ள மேற்காட்டிய விதிகளையோ ரத்துச்செய்ய முன்வரமாட்டார்களென்றே நினைக்கின்றோம்.

இனி சாரதா சட்டத்தில் ஷ விதிகள் செல்லத் தக்கவையல்லவென்று விதி ஏற்படுத்தவும் தற்சமயமுள்ள சட்டசபையில் இயலாதென்பது நிச்சயம். சென்ற கூட்டங்களில், விதவைகளுக்குச் சொத்துரிமையளிக்கும் மசோதாவும், விவாக விடுதலை மசோதாவும் அடைந்த கதியைப் பார்த்தால் விளங்கும்.

இனிச் சட்ட நிபுணர்களின் அபிப்பிராயத்தைப் பார்த்தாலோ அவர்களும் வேறு வேறு அபிப்பிராயப்படுகிறார்கள்- இந்தியா சட்ட சபைக்கு இத்தகைய சட்டஞ் செய்ய உரிமை உண்டு என்று கூறுவோர் சிலர். இத்தகைய சட்டஞ்செய்ய உரிமை இல்லையென்று சொல்லுவோர் சிலர். ஆகவே இந்தவகையிலும் முரண்பட்ட அபிப்பிராயமே இருந்துவருகிறது.

ஆனால் எந்தச் சங்கடத்தையும் அரசாங்கம் கண்வைத்தால் நீக்கி விடலாம். இனி அரசாங்கம் இவ்விஷயத்தில் என்ன செய்யப்போகிறதுஎன்பதுதான் நமது கேள்வி.

உண்மையிலேயே நமது இந்திய அரசாங்கம், இந்தியர்களின் முன்னேற்றத்தில் நோக்கமுள்ளதாயிருந்தால் சாரதா சட்டத்தைப் பயனுடையதாகச் செய்ய வேண்டும். அல்லது மேற்கண்ட பழைய பார்லிமெண்ட் சட்டமாகிய மனுஸ்மிருதிகளை ரத்துச்செய்ய முயலவேண்டும். இரண்டுமல்லாமல் ஏனோதானோவென்று

இருக்குமானால், சீர்திருத்தக்காரர்கள் வெள்ளைக்கார அரசாங்கத்தின் மேல் வைத்திருக்கும் சிறிது நம்பிக்கையும் ஒழிந்துபோகும்.

திரு. ஹரிவிலாச சாரதா அவர்களும், சளைக்காமல், இதற்கான முயற்சியைச் செய்வாரென்றே எதிர்பார்க்கிறோம். நாமும், நாடெங்கும் கூட்டங்கள் கூட்டிப் பழைய சட்டங்களை ரத்துச் செய்ய முயலும்படியும், சாரதா | சட்டத்தைத் திருத்தும்படியும், அரசாங்கத்தாரை வற்புறுத்துவதாகத் தீர்மானங்கள் நிறைவேற்ற வேண்டும்.

இளங் குழந்தைகளை மணம் புரிந்துகொடுப்பது குற்றம் என்று அறிவதற்குப் புத்தியில்லாத வைதிகர்களுக்குச் சட்டத்தினால் அறிவுபுகட்டவேண்டிய நிலையில் நமது நாடு இருக்கின்றது. இந்தப் புத்திசாலிகள் பூரண சுயேச்சை கேட்கின்றார்கள் என்று நம்மைப் பிறர் ஏளனம் பண்ணுவதில் என்ன தவறு இருக்கின்றது என்றே நாமும் கேட்கிறோம்.

பாராட்டுகிறோம்.

கோலார் "தமிழன்" ஆசிரியரும் நமது நண்பருமான ஜி. அப்பாதுரையார் அவர்கள் குமாரத்தி திருமதி அன்னபூரணிக்கும், நெல்லை, ஆசிரியர் திரு. ரத்னசபாபதி அவர்களுக்கும் சென்ற ஞாயிற்றுக்கோலாரில் நடந்த கலப்பு சீர்திருத்த திருமணத்தைப் பற்றிய செய்தி பிறிதோரிடம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. சீர்திருத்த நெறி பற்றி; சுயமரியாதை இயக்க ஆதரவில் நடைபெற்ற, பெறும் பல கலப்பு, காதல் மணங்களிலெல்லாம் இது ஒரு தனி மாண்பு கொண்டதை மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறோம் அதாவது மணமகள் பௌத்த சமய தாழ்த்தப் பட்டோர் என்று சொல்லப்படும் வகுப்பைச் சேர்ந்தவர். மணமகன் சைவ வேளாள குலத்தைச் சேர்ந்தவர் ஜாதித் திமிரும், சமயஆணவமும், உயர்வு தாழ்வுக் கொடுமையுமாகிய சமூக புல்லுருவிகள் நம்மை பிடித்து, பண்டைய மூட பழக்க வழக்கங்களால் அடிமையாக்கித் தவித்து அல்லலுறும் சமுதாய வாழ்க்கை அறிவற்று, ஆண்மையற்று, ஒளியிழந்து தேய்ந்து போகாது தடுக்க இத்தகைய கலப்பு மணங்கள் பேருதவியாயிருக்குமென்றே எண்ணுகிறோம். எவ்வித அரசியல் சுதந்திரத்திற்கும் சமூக விடுதலையும் சுதந்திரமும் இன்றியமையாதன. அத்தகைய சமூக சுதந்திரத்திற்கு ஜாதியும் மதமும் நமது நாட்டில் பெரிய முட்டுக் கட்டையாய் தடைக்கல்லாயிருப்பது வருந்தத்தக்கதே. அத்தகைய கொடிய சமூக விலங்கை உடைத் தெறிந்து வெளிப்போந்த மண மக்களைப் பெரிதும் போற்றுகிறோம். திரு. ரத்னசபாபதி அவர்களை சுயமரியாதை உலகம் நன்கறியும். திருமதி அன்னபூரணி போதிய கல்வி அறிவும், சீர்திருத்த அவாவும் கொண்டவர். ஏற்கனவே மணம் செய்து துணைவனை இழந்தவர்.

இன்னார் இருவரது மணமும் சுயமரியாதை அன்பர்களுக்குச் சிறந்த படிப்பினையாவதோடு இத்தகைய மணங்கள் நாட்டில் ஏராளமாக நடைபெற வேண்டுமென விரும்புகிறோம்.

திரு. ரத்னசபாபதி அவர்களின் சீர்திருத்த அவாவையும் வீரத்தையும் மெச்சுவதோடு மணமக்கள் சுயமரியாதைக் கொள்கைகளை எங்கும் பரப்பி மக்களை அறிவுள்ளாராக்கத் தொண்டாற்றி வருவார்களென்றே நம்புகிறோம்.

வங்காள முதல் பெண் வக்கீல்.

பஸ்ஸீன் கௌரவ மாஜிஸ்திரேட் டாக்டர் ஆர். என். சின்னுவின் குமாரத்தி குமரி சூரவாய் சின்னு பி. ஏ., பி. எல்., ரங்கூன் சர்வகலாசங்கப் பட்டப்பரீக்ஷையில் தேர்ந்து பட்டம் பெற்ற முதல் வங்கப்பெண்ணுவார். பஸ்ஸீன் நகரில் இவர் வக்கீல் தொழிலை ஆரம்பிக்கப்போவதாகத் தெரிகிறது.

கோவை சுயமரியாதை வாலிபர் சங்கம்.

ஷசங்கத்தின் விசேஷப் பொதுக் கூட்டமென்று 10-4-32 நாள் ஞாயிறன்று மாலை 7 மணிக்கு பனகால் நிலையத்தில் கோவை நகராக்ஷிக்கழகத்துணைத் தலைவரும், ஷசங்கத்தின் ஆதரிப் பாளருமான தோழர் வி. அருணாசலம் அவர்கள் தலைமையில் கூடியது. அது காலை அடியிற்கண்ட தீர்மானம் தோழர் எ. ஆர். சிவானந்தம் அவர்களால் பிரே ரேபிக்கப்பட்டு தோழர். ஆர். கிஸன் அவர்களால் ஆமோதிக்கப் பட்டு, தோழர் வி. செகப்பணண் அவர்களால் ஆதரிக்கப் பட்டு ஏகமனதாய் நிறைவேறியது

"நமது கோவை சுயமரியாதைவாலிபர் சங்க ஆண்டு விழாவை ஜூலை மாத கடைசி வாரத்திலேயே நடத்துவதொன்றும், கோவை ஜில்லா சுயமரியாதை மகாநாட்டை செப்டம்பர் மாத இறுதியில் நடத்துவதென்றும் தீர்மானிக்கப் பட்டது.

பின்னர் வாராந்திரக் கூட்டம் தோழர் எ. ஆர். சிவானந்தம் அவர்கள் தலைமையில் கூடியது. தோழர் ஆர். இரங்கசாமி. எ. பென்னுசாமி, எச். எஸ். முனுசாமி, ஆர். கிஸன் வி. செகப்பண்ணன் ஆகியவர்கள் பகுத்தறிவு என்னும் பொருள் பற்றிப் பேசினார்கள். பின்னர் தலைவர் முடிவுரைக்குப்பின் வந்த னோபசாரத்துடன் கூட்டம் இனிது முடிந்தது. என காரிய தரிசி எழுதுகிறார்.

சேலம் ஜில்லா

சுயமரியாதைமகாநாடு

மே-மீ முதல் வாரத்தில் நடைபெறும்.

தலைவர்.

தோழர். M. சிங்காரவேலு B. A., B. L.,

திறப்பாளர்.

தோழர். A. V. முத்தையா B. A., B. L.,

பிரஞ்சிந்திய அமைச்சர்.

பெண்கள் மகாநாடு.

தலைவர்.

தோழர். S. நீலாவதி.

திறப்பாளர்.

தோழர். R. அன்னபூரணி.

செனட் அங்கத்தினர்.

சிவகங்கை. தோழர். S. ராமச்சந்திரன் B. A., B. L., சுயமரியாதைத் தலைவர். E. V. ராமசாமியின் படத்தை திறந்துவைப்பார்.

இம்மாகாணத்திலுள்ள பிரபல சமூக ஊழியர்கள் பலரும் மகாநாட்டுக்கு வருகிறார்கள்.

பதினுபிறக்கக்ணகான பிரதிநிதிகள் விஜயம் செய்ய கோறுகிறோம்.

வரவேற்புக்கழகத்தார்.

திருநெல்வேலியில் விதவா விவாகம்.

திருநெல்வெலிஜில்லா சுயமரியாதைப்பிரசுர சபைக்காரியதரிசி திரு. எ. இராம நாதரும், தீவிர வாதியான திரு. இராமலிங்கம் பிள்ளையின் புதல்வி, திருமதி. காந்திமதியம்மையாரும் 8-4-32, வெள்ளியன்று சீர் திருத்தத் தோழர்கள் பலர் முன்னிலையில் விவாகம் செய்து கொண்டார்கள். என ஒருநிருபர் எழுதுகிறார்

சைவ வேளாளர்களுக்குள் மறுமணம்.

தமிழ் ஆண்டு பிறப்பன்று திருநெல்வேலி பரம்பரை சைவ வேளாளர் குடும்பத்தைச் சேர்ந்த இருவருக்குள் மறுமணம் நடந்தது. மணமகன் ஸ்ரீவைகுண்டம் வேளுர் திருவாளர் வானமாமலைப்பிள்ளை. மணமகள் குலசேகரன்பட்டணம் திருவாளர் ஆபத்துக்காத்த பிள்ளை அவர்கள் மகள் ஆறுமுகம் அம்மாள். இருவரும் முன் ல்லறம் நடத்தி தங்கள் தங்கள் துணைவர்களை இழந்தவர்கள். மணமகளுக்கு ஒரு மகளும், மணமகனுக்கு மக்களும் உள்ளர் மணமகன் இராணுவ கணக்கு இலாக்காவில் உயர்ந்த உத்தியோகத்தில் தற்காலம் புனவில் உளர். இம்மணம் சென்னை தியாகராய நகரில் கூட்டுறவுச்சங்க டிப்டி ரிஜிஸ்தரார் திருவாளர் செ. தெ. நாயகம் அவர்கள் இல்லத்தில், மணமகளின் தந்தையும், மணமக்களின்பிறசிலஉறவினர் நண்பர்கள் முன்னிலையில் 1872 ஆண்டு 3-வது சட்டப்படி பதிவு செய்யப்பட்டது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

கொண்ணூர் மேலையம்பதி சமதர்ம சங்க ஆரம்ப கூட்டம்.

சென்னை கொண்ணூர் மேலையம்பதி, வில்லிவாக்கம் ரயில்வே ஸ்டேஷனை அடுத்த மைதானத்தில் நிகழும் (17-4-32) ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு சமதர்ம சங்க ஆரம்பக்கூட்டம் நடைபெறும்.

ஆனரபில்.திவான்பகதூர்,
கோபதி, நாராயணசாமி C. I. E.
அவர்கள் தலைமை வகிப்பார்கள்.

புரோபசர் பி. லக்ஷிமிநரசு பி. ஏ., தோழர்கள் எம். சிங்காரவேலு பி. ஏ., பி. எல்., பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம், ஏ. பொன்னம்பலனூர், டி. வி. சுப்பிரமணியம் 'திராவிடன்' ஆசிரியர், எஸ். குருசாமி பி. ஏ., திருமதி எஸ். ஜி. குஞ்சிதம் பி. ஏ., பண்டிதர் திருஞானசம்பந்தர், கோலார் வி. வி. டேவிட் பெருமாள், என். சிவராஜ், பி. ஏ., பி. எல்., திருமதி எஸ். மீனும்பாள், வி. பி. எஸ். மணியர் முதலியோர் சொற்பொழிவாற்றுர்களெனஷசங்கத்தார் அறிவிக்கிறார்

ரோஜா முத்தையா

கர்ப்பத்தடை— சமூகத்தேவை.

நெருப்பு கண்டுபிடிக்கப்பட்டபின் இந்த கர்ப்பத்தடை முறையும் ஓர் சிறந்த ஆராய்ச்சி முறையென்று நான் எண்ணுவதோடு இதை ஜனங்கள் அநுஷ்டித்தும்பலனடையப்பார்க்கப்பிரியப்படுகிறேன். பெண் மக்களது அடிமைத்தனத்தை அழிப்பதற்கு இது ஓர் சிறந்த முறையாகும். பெற்றோர்களுக்கும், குழந்தைகளுக்கும் உள்ள உயரிய சம்மந்தத்தைக்காப்பதற்கும் இது ஓர் அரிய சாதனமாகும். ஆண்களுக்கும், பெண்களுக்கும் உள்ள நேசத்தை உறுதிப்படுத்த நிச்சயமான மார்க்கமாகும். பரம்பரை சமூக சீர்கேட்டை அகற்ற கற்பத்தடை முறை சிறந்த ஆயுதமாகும். ரோமன் கத்தோலிக்கர்களோ அன்றி ஏனையோரே இம்முறைகள் குற்றமுள்ளவை என்று சொல்வார்களேயானால் யாரும் அவர்களை அநுஷ்டிக்கும்படி வற்புறுத்துவது கிடையாது. ஆனால் அவர்கள் தங்கள்சொந்த அபிப்பிராயங்களை ஓர் சமூக பழக்கத்தை ஒழிப்பதில் புகுத்தலாகாது.

என்னால் முடியுமானால் எல்லா கல்வி இலாக்காவையும் "சந்தேகம்" "சோதனை" என்ற இரண்டு கொள்கைகளையே பரப்பும்படி வற்புறுத்துவேன். பழக்க வழக்கங்களாயிருந்தாலும், அல்லது சமூக ஸ்தாபனங்களாயிருந்தாலும் நமது முன்னேற்றத்திற்கு தடையாயிருப்பின் ஒழிக்க வேண்டுவதவசியமே.

ஹேரால்ட் ஜே லஸ்கி.

பார்ப்பனக்கோட்டையில் சுயமரியாதை,

மைலாப்பூர் நாட்டு சுப்பராய முதலி தெருவிலிருக்கும் திரு. விநாயக (முதலியார்) அவர்கள் தன் தகப்பனாரின் முதல் வருஷாந்திரத் திதியை எப்ரல் 8-தேதி யன்று பார்ப்பனரை அடியோடு நீக்கி, சுற்றத்தார்களுக்கும், ஏழைகளுக்கும் அன்னமிட்டு நடத்தினார். சொந்தக்காரர்களில் பலர் எதிர்த்தும் அஞ்சாது, புரோகிதத்திற்கு வந்த பார்ப்பனனையும் ஏமாந்து. போகும்படி விரட்டிவிட்டு, சுயமரியாதை முறையில் நடத்தியது மிகவும் பாராட்டத்தக்கதாகும். படித்த உத்தியோகஸ்தர்களும் அரசியல் வாதிகளும், மந்திரிமார்களும் கூட பார்ப்பான் காலில் விழுந்து பசு மூத்திரம் குடிக்கும் அடிமை புத்தி மிகுந்த சென்னை நகரில் இவ்வளவு தைரியமாக பார்ப்பானையும், புரோகிதத்தையும் நீக்கி சுயமரியாதையைக் கைக்கொண்டது பெரிதும் மெச்சத்தகுந்தது என்பதில் சந்தேகமில்லை.

இதற்கு முக்கிய காரணஸ்தர்களாக இருந்தவர்கள், முத்தையால் பேட்டை பாடசாலை உபாத்தியாயர்களான திரு. முருகேச முதலியார் அவர்களும், பாலசுந்தரம் அவர்களுமாவார்கள்.

நமது நிருபர்.

திருநீற்றின் உண்மை என்ன?

(ஜே. எம். கிருஷ்ணமாச்சாரி, மதுரை.)

மாட்டுச்சாணத்தைத்தட்டி அடையாக்கி, வெயிலிற் காயவைத்து, அது காய்ந்த பிறகு எரியிலிட்டுப் பொசுக்கியதன் பின்னர் வெண்ணிறமுற்ற அதனைப் பொடியாக்கி, அரிப்பிலிட்டுச் சலித்துப் பெறும் பொருளே சாம்பலாகுமென்பர் அறிவர். ஆயின், அந்தச் சாம்பலைச் சைவர்கள் நீறு என்பர் சாம்பல், எனப்படும் பொருளும் நீறு எனும் பொருளதே அது பொய்யன்று; மெய்யே! ஆனால் சாம்பல் என்று அந்த நீற்றை அவர்கள் சொல்லாம விருப்பதோடுங்கூட நீறு என்ற பெயர் சொல்லோடு திரு என்ற தொரு அடை மொழியுங் கொடுத்து, மஹிமை பொருந்திய நீறு என்னும் பொருளிலங்கத் திருநீறு என்றே வழங்குவர். அதன் மகிமையைப் பற்றிச் சைவர்கள் பல எடுத்து ஓதுவார்களெனினும் அதனை வைணவர்கள் மறுத்து, நீறு கோதுடைத்தென்பர். இவ்வாறுசைவத்துக்குப் புறம்பினதாய சமயத்தவர்கள் திருநீற்றை மதிக்காமல் பலபட இகழ்ந்து பேசுவர், புறசமயத்தினர் அந்த நீற்றின் "செந்" தன்மையை இகழ்ந்துரைப்பதே போன்று எல்லாவிதச் சமயச் சின்னங்களையுந் தவிர்த்த சுயமரியாதைக்காரர்களும் அதனைத் தாக்கிப் பொருவர், தாக்கல் அன்று; உண்மை உரைப்பர். அவ்வுண்மையாவது.

"நீற்றைப் பூசின் அது பூசினோரைக் காட்டு மிராண்டிகளாகத் தோற்றுவிப்பதுடன் மேன் மேலுஞ் சமயச் சண்டைகளை வளர்ப்பதற்கோர் ஏதுவாகவிருக்கின்றது. இந்தியராகவல்ல வேனும், கட்டுப்பாடுடன் ஒற்றுமையுடன் ஒரு ஹிந்து சமூகமாக வேனும் இருப்பதற்கு அது (சுயமரியாதைக் காரரைத் தவிர்த்து) இடையூறு செய்கின்றது ஆகலின் எந்த உடற்கூறு இலக்கண விதிகளையும் பொருட்படுத்தாது அதை அணியாமல் சுயமரியாதைச் சிங்க மென நீ வெளியில் வா" என்பதே யாகும்.

மற்றவர். மற்றும் பல பகர்வர். அவை ஈண்டு வேண்டுவதின்று.

இத்தகை நீற்றைப் பற்றித் திரு. விலக்ஷ்ணானந்த சுவாமிகள் செய்யுட்டொகை யொன்றைச் செய்து வெளியிட்டுள்ளார். அந்நூலிற் றான் கூறப்போந்த நீற்றுப் "பெருமை" மாத்திரம் புகன்றமையாது அது பூசாதோரையும் பலவாறு பெரியார் என்ற என்ற தன்மையை மறந்து திட்டியிருத்தலால் அப்படித் திட்டப்பட்டுள்ள செய்யுட்கள் சிலவற்றைஇங்கு வரைந்து அவற்றிற் கெதிராக நாமுஞ் சில செய்யுட்களை செக்மெலாஞ் சுற்ற விடுக்குதும்.

விலக்ஷ்ணானந்தர் பாடியவை: முதற் செய்யுள்.

திருநீறணியாத்திருடர்களே! தினமுந்தினமுமதையணிந்து, அருவாயுருவாய ருவுருவாய், அகமாய்ப்புறமாய் அகம்புறமாய், பரிமாதவனுங்காணாத பகவனொருவன் சிவமாகும், கருவாலுதித்த காரணத்தைக்கண்டஞ்செய்யவல்லீரே!

இரண்டாஞ் செய்யுள்.

ஓங்காரத்தாலறியாத உளவுகாணத்திருநீற்றை, வாங்காமந்த மானுடர்காள் வந்தாலுதைப்பேன் காலாலே, தாங்காச்சடையான்றிருநீற்றைத் தாணுயணிந்ததற்பரர்களேங்காரேங்காரேங்கார்களேங்காரென்றே ஏங்குவனே!

மூன்றாஞ்செய்யுள்.

வாயால்மணத்தாலறியாத வானுளைகுந்திருநீற்றைப் பேயே என்னமனம் பதைத்துப்பிதற்றுகின்றபேதையரே! நாயேயாக நரியாக நண்டாயாக நாடாக, வீயாதிருக்குந்திருநீற்றை விதமாயணியவேண்டுவனே!

திருநீற்றுச் சூறாவளி,

1. நீறணியா மாந்தர் தம்மை நிந்தனைசெய் நீசர்காள்! கூறியபின் குனியுமுன்னும் கோத்திரத்தைக் காண்பீரேல், சோரனுவான் சுப்பனோடு சோமனுமோர் கள்ளனுவான் மாறுகின்ற அவரைக்கோரும் மாக்களென்றேதிருடர்கள்!

2. நீறு பூசாதும் முன்னூற்றால் நீவிர்தாமோ உதைப்பவர்? ஊறு செய்துலுக்கிவிட்ட உங்கள் நீறுஞ் செய்யுமோ, கூறு கூறு ஆக்குகின்ற கொடுமை நீறி கழினே,மாறுபட்டுவாழும் நம்மைமாய்த்துத் தாரளறிவமே!

2. பேய்களான்ன எம்மை நித்தம் பேசுகின்ற பேய்களே! வாய்களுமுமக்கு முண்டோவம் பளக்கவெம்முடன், தூய்மையர்களொன்று கூடித் தொண்டராமெம் மக்களைச், சேய்மையிலே வைத்து வாழுஞ் சென்மமன்றோ பாவிகள்.

சாதுவின் காமவெறி.

கை துண்டிக்கப்பட்டது.

டெக்காவைச் சேர்ந்த ரமணு, என்னுமிடத்திலுள்ள "பூராசிவா" என்னும் கோயிலில்கொஞ்ச நாளாக பல சந்நியாசிகளும் சந்யாசினிகளும் இருந்து வந்தார்கள். அச்சாதுக்களில் ஒருவன் ஒரு சந்நியாசினியின் மீது காதல் கொண்டு பல முறை அப்பெண்ணை வற்புறுத்தியும் அப்பெண் மறுத்து விட்டாளாம். இந்த சாதுவின் துராக்கிருத செயலைக்கண்டு தற்காப்பு நிமித்தமாய் ஒரு கத்தி யொன்று தயாரித்து வைத்திருந்தாள். சில தினங்களுக்கு முன் ஓர் இரவு அம்மாது படுத்து நித்திரை செய்யும்போது அந்தச் சாது உள்ளே பலாத்காரமாய் நுழைந்தான். அது கண்ட அப்பெண் உடனே எழுந்து கத்தியை எடுத்து அவனது கையில் அடிக்கவே வலது கை துண்டிகப்பட்டு விழுந்து விட்டதாம்.

கும்பகோணம் காங்கேயன் பார்க்கில் சுயமரியாதைப் பொதுக்கூட்டம்.

1932 வருஷம் எப்ரல் மாதம் 10 தேதி மாலை 5-30 மணிக்கு சுயமரியாதை வாலிபர் சங்கத்தின் ஆதரவில் கும்பகோணம் காங்கேயன் சாந்தி பார்க்கில் திருவிசநல்லூர் தோழர் டி. பி. நாராயணசாமி அவர்களின் தலைமையின் கீழ் ஒரு. பொதுக்கூட்டம் நடைபெற்றது. சுமார் 3000 பெயர்கள் வரையில் கூடியிருந்தார்கள். தலைவர்கள் முகவுரையாகச் சிறிது நேரம் பேசிய பிறகு "புதுவை முரசு" ஆசிரியர் தோழர் அ. பொன்னம்பலனார் அவர்கள் காங்கிரஸ் புரட்டுகளையும், மடாதிபதிகளின் அயோக்கியத்தனங்களைப் பற்றியும், தீண்டாமை யொழிக்கவேண்டிய அவசியத்தைப்பற்றியும் 2 மணி நேரத்திற்கு மேலாகவே ஒரு நீண்டதோர் சொற்பொழிவைநிகழ்த்தினார். அதன் பிறகு தோழர் கி. ஆ. பெ. விஸ்வநாதம் அவர்கள் "இந்தியாவின் பிணி" என்பதுபற்றி ஒரு மணி நேரம் வெகு அருமையாகப்பேசி முடித்தார். பிறகு தலைவரவர்கள் முடிவுரை கூறிய பின்பு இரவு 9 மணிக்கு கூட்டம் இனிது கலைந்ததென ஒரு நிருபர் எழுதுகிறார்.

விளம்பரம்.

திருப்பூர்

டி. மு. கோர்ட்டு.

1932 ௵ O. P. No. 8.

பல்லடம் தாலுக்கா கோடங்கிபாளையம் கிராமம் கஸ்பாவிலிருக்கும் சின்னய்ய கவுண்டன் பெண்ஜாதி தங்கம்மாள்—மனுதாரி.

டையூரிலிருக்கும் நஞ்சப்ப கவுண்டன் மகன் மாரப்ப கவுண்டன் 1. டையூர் மாரப்ப கவுண்டன் மக்கள் ராமசாமிக் கவுண்டன் 2. பழனிக் கவுண்டன் 3.—எதிர் மனுதார்கள்.

டை நெம்பரில் மனுதாரியானவள் தன்னுடைய இறந்துபோன புருஷன் சின்னய்ய கவுண்டன் சொத்துக்களைக் குறித்தும், வர வேண்டிய நிலுவைகளைக் குறித்தும் பாத்திய சர்டிபிகேட்டு தனக்குக் கிடைக்கவேணுமாய் மனுக்கொடுத்து அது வாய்தா 18—4—32-உ போட்டிருக்கிறது. அதுவிஷயமாய் ஏதாவது ஆக்ஷேபணை இருந்தால் டை தேதியில் தெரிவித்துக்கொள்ளவேண்டியது. தவறினால் ஒரு கக்ஷியாய் தீர்மானம் ஆகிவிடும் என்கிற விவரம் இதனால் அறியவும்.

(Sd) G, ஏசுரத்தினம், B.A.B.L.
திருப்பூர், மனுதாரி வக்கீல்,
2—4—32.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

படாதாம், ஆயினும் இத்தகைய மூட நம்பிக்கைகள் மறைந்து வருகின்றன. இன்னும் கிறிஸ்துவமதம் தோன்றிய பின்னர் ஏற்பட்ட மதக்கொடுமைகளும் இன்னல்களும் அளவிறந்தன. கிறிஸ்துவ மதஸ்தாபனத்திற்குபின்பு கிறிஸ்துவர்கள் பிறமதஸ்தர்களுக்கும் தங்களுக்குள் ஏற்பட்ட பிரிவுகளை சேர்ந்தவர்களுக்கும் செய்த மதக்கொடுமைகளைச்சொன்னுலே கேட்டதரிதயம் புழுங்குவர். சைவப்பெரியார்கள் சமணருக்கு செய்தபாதகங்களுக்கு மேற்பட்டதாகவே சொல்லலாம். அன்பே கிறிஸ்து, அன்பே சிவமென்று ஆர்பரிக்கும் கூட்டத்தார்களின் அன்பிருந்தவாறென்னே! இப்பொழுது கிறிஸ்துவ சைவ மதங்கள் பிறகொள்கைகளுக்கு விரோதமாகப் போராடுவதில்லையானுல் அது அம்மதங்களினுடைய பெருமையன்று. பல அறிவாளிகள் தம் உயிரையும் ஈந்து இம்மதங்கொண்ட மதத்தோடு போராடித் தோறறுவித்த நன்மையேயாகும். இன்னும் இயற்கை விதிகளைப்பற்றிய கிறிஸ்துவமதக்கொள்கை நிச்சயமற்றதாயும் அங்குமிங்கும் ஊசலாடுவதாயுமிருந்திருக்கிறது. சுதந்திரதீர்மானக் கொள்கையில் (Doctrine of free will) பெரும் பாலோர் நம்பினர். இதினின்று மனிதச்செயல்கள் இயற்கை விதிகளுக்கு அடிமைப்பட்டதாக இருக்க முடியாதெனத்தெரிகிறது. ஆனுல் பின்னுல் கடவுளைச்சட்டம் விதிப்பவரென்றும் இயற்கை விதிகளிருப்பது அத்தகைய கடவுளிருப்பதைக்காட்டுகிறதென்றும் ஒரு நம்பிக்கையேற்பட்டது. இப்பொழுது இதை சுதந்திர தீர்மானக்கொள்கைக்கு விரோதமாக விருப்பதால் ஆக்ஷேபிக்கவேண்டிய அவசியமேற்பட்டிருக்கிறது. இதனுல் இவர்கள் சிறந்த சடப்பொருள்கள் என்று கருதுவனகூட இயற்கை விதிகளால் கட்டுப்பட்டனவல்ல என்று கூறமுன்வருகிருர்கள். இவர்கள் சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட அணுக்களினும் சிறியபகுதிகளான எலக்டரான்ஸ் (Eleetrons) என்னப்படுவன தாம் நினைத்தபடி நடக்கும் முறையை இதற்கு ஆதாரமாகக்காட்டுகிருர்கள். ஆனுல் இவற்றினுடைய நடத்தைகளைப்பற்றி பின்னுல் விதிகள் கண்டுபிடிக்கப்படலாம். இன்னும் இத்தகைய நுணுக்கமான விஷயங்களைப்பற்றிய தற்காலக்கொள்கைகளுக்கும் நடைமுறையிலிருக்கிற முக்கியமான விஷயங்களுக்கு அதிகப்பொருததமொன்றுமில்லை. நாம்பார்க்கின்ற பல செயல்களும் முன்னமே கண்டுபிடிக்கப்பட்ட விதிகள் வழி ஒழுகும் பெரிய அணுக்களாலேயே (Atoms) நடை பெறுகின்றன. எனவே சுதந்திரத்தீர்மானக்கொள்கைமுன்னிருந்தபடியே தானிருக்கிறது. அதை இப்பொழுது நடைமுறையில் நம்புவாரைக்காணேம். ஒவ்வொருவனும் குழந்தைகளுடைய நடத்தையை ஒழுங்காகப்பழக்கலாமென நம்புகிருன். கள்ளும், கஞ்சாவும் நடத்தையில் ஒருவித மாறுதலை ஏற்படுத்தியே தீரும். சுதந்திரத்தீர்மானக்கொள்கைக்காரன் ஒருவன் குடியா விரதம் கொள்ளலாமென்ருலும்கூட குடித்தபின்னர் முன்போல அழுத்தம் திருத்தமாகப்பேச முடியுமென்று சொல்லமுடியாது. தீவிரமான இடைவிடா உபதேசங்களைக்காட்டிலும் சரியான ஆகாரமளித்து வளர்த்தல் குழந்தைகளை நல்ல குணமுடையவர்களாக்குகிறது. சுதந்திரத்தீர்மானக்கொள்கை செய்யும் அனர்த்தமென்னவென்ருல் இத்தகைய சுலபமான வழிகளைகைக் கொள்ளுநிலைத்தடுத்தலேயாகும். ஒருவன் மற்ருெருவனை முட்டாள்தனமாக நடத்துவதைப்போல ஒரு மோட்டார்வண்டியை நடத்துவதில்லை. அது வழியில் நின்றுவிட்டால் அதைக்கண்டித்து பெட்ரோல் எண்ணை விடமாட்டேன் என்று பயமுறுத்துவதில்லை. அதில் ஏற்பட்ட குற்றத்தைக்கண்டுபிடித்து நிவர்த்திக்க முயலுகிருன். இதைப்போன்ற ஒரு முறையில் மனிதர்களை நடத்துவது மதத்திற்கு விரோதமானதாகக் கருதப்படுகிறது. சிறுகுழந்தைகளை நடத்துவதில்கூட இதே கொள்கையை அனுஷ்டிக்கிருர்கள். தானுகமாறிமறைந்து போகக்கூடிய குழந்தைகளின் சில கெட்ட நடத்தைகள் தண்டனையின் மூலம் அப்படியே இருந்துவிடுகின்றன. சில குழந்தைகள் பைத்தியம் பிடிக்கும்வரைக்கும் தண்டிக்கப்படுகின்றன. பைத்தியம் பிடித்தவர்களை தமது நடத்தைகளுக்கு பாத்திரமானவர்களாகக்கருதாதபடியினுல் இவர்களைத்தண்டியாமல் வேறு முறையில் நடத்திக்கவனிக்கப்பட்டதின் மூலம் அனேக உண்மைகள் தெரிந்து கல்வி முறையில் பல சீர்திருத்தங்கள் ஏற்பட ஏதுவாயிற்று. இப்பொழுதும் சிலவிடங்களில் பாடம் தெரியாத பையனை அடிப்பதுதான் தகுந்த முறையாகக் கருதப்படுகிறது. ஆனுல் இந்த அபிப்பிராயம் இப்பொழுது அநேகமாய் மறைந்துவிட்டது.

மேற்கூறிய விஷயங்களை எல்லாம் எடுத்து நோக்குங்கால் மதமானது ஒரு பெருத்த சமூக மோசடியென்றும் அது எவ்வளவு பலமாக மக்களது மனதில் பதிந்துகிடக்கிறதென்றும் புலப்படுகிறது. குழந்தைகளைப் பயமின்றியும் பொருமை, விரோதம் இன்னேரன்ன உணர்ச்சிகளின்றியும் வளர்க்கலாம். குழந்தைகளுடைய இயற்கைக்குணங்களையும் இன்னும் எந்த விஷயத்தையும் தெரிந்துகொள்ள எழும் ஆவலையும் (Curiosity) அடக்காமல் வளரவிட வேண்டும், வாழ்க்கையில் புகும் காலத்தில் எதிர்படுகின்ற அநீதிகள், கொடூரங்கள், துன்பங்கள் முதலியனபெரும்பாலும், நமக்குநம்மூதாதையர் பிதுரார்ஜிதமாகக்கொடுத்ததும் பொருளாதாரப்போட்டியினுல் ஏற்பட்டதுமானதால் அவைகளை நாம் விவசாயப்பொருளபிவிர்த்தி முதலிய துறைகளில் உண்டான அதிசயக்கத்தக்க அறிவு வளர்ச்சியானும் இன்னும்மற்ற வசதிகளானும் நிவர்த்திக் கொள்ளலாம். இவ்வாறு மக்கள் யாவரிடத்தும் துன்பத்தை நீக்கி இன்பத்தை நிலை நாட்டச்செய்ய இடமிருக்கிறது. இவற்றிற்கெல்லாம் முக்கிய இடையூறு மதம். மதம் குழந்தைகளுக்கிதமானதும், அறிவிற்குப்பொருத்தமானதுமான கல்வியைக்கொடுப்பதைத்தடுக்கிறது, இன்னும் மதம் உலகத்தில் நிகழும் பெருஞ் சண்டைகளுக்கு அடிப்படையான காரணங்களை நீக்குவதற்குத் தடை செய்கிறது. பழமையானதும் பயங்கரமானதுமான கொள்கைகளான 'பாவங்கள், தண்டனைகள் இவைகளுக்குப்பதிலாக அறிவிற்கியந்த 'கூட்டுறவு' ஒழுக்கத்தை மக்களிடையே பரப்புவதைத்தடுக்கிறது. மனிதவர்க்கம் புனிதமானதொரு இனியவாழ்வைஅடைவதற்கானசொர்க்கவாசலின் அருகில்இப்பொழுது நிற்கலாம். ஆனுல் உள்நுழைவதற்கு அக்கதவைக்காத்து நிற்கின்ற கொடிய பூதத்தைக்கொல்லல்வேண்டும். அந்தப்பூதமே மதம். வீழ்க! மதம்! வீழ்க! வாழ்க! மனிதர்! வாழ்க.!

கும்பகோணத்தில் பிரபல சீர்திருத்தத்திருமணம்.

கூத்தூர் குருக்கத்தி திருவாளர் டி. எஸ். குமரசாமிபிள்ளை அவர்களின் திருச்செல்வன் கே. தங்கவேலுக்கும் ஷை குருக்கத்தி திருவாளர் எம். கே. ரெத்தினம் பிள்ளையவர்களின் திருச்செல்வி ஆர். குஞ்சம்மாளுக்கும்; கும்பகோணம் அழகப்ப முதலியார் தெரு திருவாளர் டி. எஸ். கோவிந்தசாமி அவர்களின் இல்லத்தில் 10—4—32 தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு புரோகிதத்தை யொழித்து தம்பதிகளிருவரும் மாலை மாற்றிக்கொண்டு திருமணம் இனிது நடைபெற்றது. இத்திருமணத்தை திருச்சி தோழர் கி. ஆ. பெ. விஸ்வநாதம் அவர்கள் நடத்தி வைத்ததன்னியில் சுயமரியாதைத் திருமணத்தின் அவசியத்தைப்பற்றியும், சில மூடப்பழக்க வழக்கங்களைப்பற்றியும் மிகத்தெளிவாகவும் சுருக்கமாகவும் பேசி முடித்த பிறகு, "புதுவை முரசு" ஆசிரியர் தோழர் அ. பொன்னம்பலனுர் அவர்களால் நீண்டதோர் சொற்பொழிவாற்றப்பட்டது. பிறகு கும்பகோணம் சுயமரியாதை வாலிபர் சங்கத்தலைவர் திரு. கே. கே. நீலமேகம் அவர்கள் சிறிது நேரம் பேசி முடித்த பிறகு கும்பகோணம் சுயமரியாதை வாலிபர் சங்கத்தாரால் ரூ. 25 பொருமானமுள்ள கேக் (Cake) ஒன்று மணமக்களுக்கு வெகுமதியாக அளிக்கப்பட்டது. தோழர் கி. ஆ. பெ. விஸ்வநாதம் அவர்கள் முடிவுரை கூறிய பின்பு திருமணத்திற்காக விஜயம் செய்திருந்த பிரமுகர்களுள்பட மணமக்களையும் சேர்த்து சுமார் 1000 பேர்கள் வரையில் கொண்ட போட்டோ ஒன்று எடுக்கப்பட்டது. பகல் 12 மணிக்கு பெரிய சமபந்தி போஜனம் ஒன்றும் நடைபெற்றது. இத்திருமணத்திற்கு வெளியூர்களிலிருந்தும் உள்ளூரிலிருந்தும் பல பிரபலஸ்தர்களும், உத்தியோகஸ்தர்களும், வியாபாரிகளும் விஜயம் செய்திருந்தார்கள். ஆண் பெண் உள்பட சுமார் 1500 பேர்களுக்கு மேலாகவே கூடியிருந்தார்கள். இவ்வளவுக்கும் காரணமாயிருக்கும் இவ்வூர் சுயமரியாதை வாலிபர் சங்கத்தாரின் முயற்சி பெரிதும் பாராட்டத்தக்கதென ஒரு நிருபர் எழுதுகிருர்.

தமிழ் நாட்டு பெற்ருேர்களே!

முந்துங்கள்! முந்துங்கள்!!

மெட்ரிக்குலேஷன்

அறிவை

தங்கள் பிள்ளைகள் நேரில் படித்துப் பெற சந்தர்ப்பமில்லாவிடில் தொழில் செய்து கொண்டே தபால் மூலம் ஸ்பெஷல் மெட்ரிக்கோர்ஸ்களை வாசித்து முடிக்கலாம். இஷ்டப்படின் சர்க்கார் கே. சீனியர் பரீக்ஷை பாஸாகி காலேஜில் சேரலாம். லோயர், ஹையர் கிரேட் உபாத்திமார்களுக்கு அதிக பிரயோஜனமானது. விபரத்திற்கு ஸ்டாம்ப னுப்பவும்.

டைரக்டர்,

அன்பைபன்ஸ் கேம்பிரிட்ஜ் இன்ஸ்டிடியூட்,

(தலைமை ஆபீஸ்) ஆறுமுகநேரி S. I. R.

"அன்றும், இன்றும், என்றும் தொல்லை, தொல்லை, தொல்லையே !!!"

(சாக்கோட்டை. எஸ். ஆர். சாமி)

என் உயிருள்ள அளவும் அதுவும் என் வயிறுள்ள அளவும் எனக்குத் தொல்லைதான் என்றார் ஒரு மகான். அவரை ஒரு வேதாந்தி என்றும் பேரின்பத்தில் அவா வுடையவர் என்றும் மக்கள் கருதி விட்டனர். அதற்கப்பால் தன்னரசு வரும் வரை எல்லோருக்கும் எப்பொழுதும் தொல்லை என்று சொன்ன ஒரு மத பாதுகாப்பாளரை, ஏழைக் குரும்பன் வேஷம் போடும் ஒருவரை தியாகி என்றும், வள்ளல் என்றும், கடவுளின் அவதாரமென்றும், உலகத்தில் உத்தமர் என்றும் அவரால் தொல்லை நீங்கும் என்றும் மக்கள் கருதினர். ஏன், கருதுகிறார்கள். ஒரு நாட்டிற்குத் தொல்லை, கஷ்டம், பஞ்சம், சாவு ஏற்படுவது பல காரணங்களை உடைத்தாயிருக்கும். சமூகத்தின், அந் நாட்டின்கண் வாழும் மக்களின் அறியாமையால் அந் நாட்டிலுள்ளவர்களுக்கே தொல்லை ஏற்படலாம். அல்லது அந் நாட்டை ஆளும் நீதியற்ற அரசனால் அந் நாட்டிற்குப் பல தொல்லைகள் ஏற்படலாம். அல்லது அந் நாட்டில் தொழில் வசதிகள், இயற்கை சாதனங்கள் இல்லாமல், அந் நாட்டிற்குத்தொல்லை ஏற்படலாம். அதுபோல நம் நாட்டை எடுத்துக்கொண்டால் தொழில் வசதிகளும் அதாவது பல தொழிற்சாலைகளுக்கு வேண்டிய சாதனங்களும், மக்களின் சுய அறிவும் சில இயற்கைச் சாதனங்களுமில்லாமையே நம் நாட்டிற்குப் பணத்தொல்லை, அடிமைத் தொல்லை, பஞ்சத் தொல்லை, பசித் தொல்லை, வயது அதாவது வாழ்நாள் அதிகமில்லாத் தொல்லை, சுறுசுறுப்பில்லாத்தொல்லை இன்னும் எண்ணற்ற தொல்லைகள் ஏற்பட்டன, ஏன் ஏற்பட்டிருக்கின்றன என்றே சொல்லலாம். உதாரணமாக உன்னதப் பதவியிலிருக்கிற பிரிட்டிஷ் தீவுகளை எடுத்துக்கொண்டால் அங்குள்ளவர்களில் அறியாதார்கள், மூடப் பழக்க வழக்கங்களுள்ளவர்கள், மூட நம்பிக்கை, குருட்டு எண்ணம், பூச்சாண்டி மனப்பான்மையை உடையவர்கள் இல்லையென்றே சொல்லலாம். அந் நாட்டிலுள்ள துறைமுகங்களும் ஆழமான ஆறுகளும் கரையோரமுள்ள இயற்கைத் துறைமுகங்களும் அந்நாட்டின் வியாபாரசாதகமில்லையென்ற தொல்லையை ஒழிக்கின்றன. அந் நாட்டில் உஷ்ணமோ மிகக் குறைவு. அதனால் அங்குள்ளவர்கள் களைப்பு என்பது இல்லாமல் சுறுசுறுப்புள்ளவர்களாய் விளங்குகிறார்கள். மேலும் அந் நாடு உலகத்திற்கு மையத்தில் மத்திய ஸ்தானத்தைப் பெற்றிருக்கிறது. கைத்தொழிலுக்கும், தொழில்சாலைகளுக்கு வேண்டிய இரும்பு, நிலக்கரி ஒரேயிடத்தில் கிடைக்கப்பெறுகின்றன. இதனால் தொழிற்சாலைகள் விருத்தியாகவும், தொழில் தொல்லை ஒழியவும் ஒரு பெரும் சாதகமாயிற்று. சாதகமாயுமிருக்கிறது. ஆனால்

நம் நாட்டிலோ மேற்சொன்ன ஒருவகை சாதனங்களும் இல்லை இயற்கைத் துறைமுகங்களில்லை. நதிகள் ஆழமற்றவைகளாயும், கப்பல்கள் செல்வதற்குத் தடங்கல்களாயுமுள்ளன. அடுத்தபடி களைப்பைத்தரக்கூடிய உஷ்ணமோ அதிகம். நிலக்கரி கிடைக்குமிடத்தில் இரும்பு கிடைப்பதில்லை. இரும்பு அகப்படுமிடத்தில் நிலக்கரி கிடைப்பதில்லை.

இதுகள் இரண்டுமே கிடைக்கப்பெறாத இடங்கள் அநேகம். ஆகையால் பற்பல தொழிற்சாலைகள் ஏற்படாமல் கூலித் தொல்லை அதிகமுண்டாகிறது. மேலும் சொந்த புத்தியை உபயோகப்படுத்துபவர்கள் சிலரே ஏன் மிகச் சிலரே. கம்பர் பிறந்த நாடென்றும், காளமேகம் பிறந்த நாடென்றும், பரமசிவன் பார்வதியோடுபோனானென்றும், திரௌபதி ஐந்துபேரோடு போனாளென்றும் அதுவும், ஐந்துபேர் போதாமல் ஆறாவது பேர்வழியிடமும் ஆசைப்பட்டாளென்றும். சீதையை ராமன் பெண்டாட்டி (பத்தினி) என்றும் அவளை ராவணன் கொண்டுபோனான் என்றும், எங்கள் சாமி கெட்டிக்கார சாமி என்றும், உங்கள் சாமி காமங்கொண்ட சாமி என்றும், எங்கள் சாமி சாம்பல் (விபூதி) பூசச் சொன்னானென்றும், எங்கள் சாமி தெருமண் அதாவது திருசூரணம் இழுத்துக்கொள்ளச் சொன்னானென்றும், எங்கள் சாமி பெண்சாதி பத்தினி என்றும், உங்கள்சாமி பெண்சாதி அவுசாரி, விபசாரி, காமி, என்னும் வாய்வேதாந்தமும், திண்ணைக்கதைகளும், மதச் சண்டைகளும், அக்கதைகளை வைத்துக் கொண்டு தனது சொந்தபுத்தியை இழந்துமான மற்ற, பகுத்தறிவற்ற தன்மையில் பிதற்றத்தான், பெருமை பேசத்தான், நம் நாட்டு முக்கால் வாசி மக்களுக்குத் தெரிந்ததே ஒழிய முற்போக்குள்ள வழியைப்பற்றிப் பேசவோ, எழுதவோ கண்டு பிடிக்கவோ தெரிந்ததாக நாம் இது வரைக் கண்டிலோம்.

நம் நாடோ இயற்கைச்சாதனங்கள் இல்லா நாடென்று முன்குறித்தேன். அதன்படி உள்ளதைவைத்துக்கொண்டு உரக்குழியை நக்கிக் கொண்டிருக்கும் நாம், சொற்பவருவாயுள்ள நாம், தோட்டங்களிலும், கொல்லைக்காடுகளிலும், வயல்களிலும், ஏதோ சொற்ப வருவாயுள்ள உத்தியோகத்திலுள்ள நாம், தினம், தினம், கஷ்டப்பட்டு அன்றய ஜீவனத்திற்கு கஷ்டப்பட்டு சம்பாதிக்கும் நாம், நம்நாட்டுமக்கள், கோவிலுக்காக, சாமிகளுக்காக செலவிடும் பொருள் எவ்வளவு?

மோக்ஷத்திற்கு என்று செலவிடும் தொகை எவ்வளவு? தன்னுடைய மோக்ஷத்திற்கு கூட அல்லாமல், தன் தகப்பன் தாய் மோக்ஷமடைவார்கள் என்று பார்ப்பானிடம் பகுத்தறிவற்றுகொடுக்கும் காசு, பொருள் எவ்வளவு? பழனியில், திருவண்ணாமலையில், திருப்பதியில், காசியில், ராமேசவரத்தில் உற்சவமென்று, பாழும் பார்ப்பனர்களுக்கும், அவர்களின் உண்டியல்களுக்கும், ரயிலுக்கும், காருக்கும், கொட்டியழுகும் பணம் எவ்வளவு? நேரக் கேடு, நாள்விரயம் எத்தனை? தன் பெண்டு, பிள்ளைகளுடன், தங்கை, தமக்கைமாருடன் மானங்கெட்டுத் திரிவது எத்தனைபேர்? அதனால் வரும்பயன் யாது? என்பனபோன்ற பல்வேறான குருட்டுநடத்தைகளையும், மானமிழந்தமுயற்சியையும், அறியாமையால் அவதிப்படுவதையும், யோசித்தோமில்லை. யோசிக்கிற வர்களுமில்லை. அப்படி யோசிப்பவர்களும் நாஸ்திகர்கள்.

ஆகவே, இந்நாட்டு மக்களுக்கு; எந்தத்தன்னரசு வந்தபோதிலும், எத்தனை ராட்டினம், தக்ளி, உலகில்சுற்றினபோதிலும், எத்தனை அவதாரங்கள் உதித்தபோதிலும்; எத்தனைசண்டித்தனம் செய்தபோதிலும், எத்தனைப்பெண்மணிகள் சிறை சென்றபோதிலும். எத்தனைபக்தர்கள் தோன்றிய போதிலும், அவரவர் களுக்குபகுத்தறிவு ஏற்படும்வரை; பல் வேறுசாமிகளும், கோவில்களும், அதற்காக ஏற்பட்டிருக்கும் தரகர்கள், வேஷதாரிகள் ஒழியும்வரை; உண்டியல்கள்உலகில்இல்லா தொழியும் வரை; பரம வைதீகர்கள் ஜாதியை நிலைநாட்டுபவர்கள் பூண்டத்துப்போகும் வரை; பாமரமக்களை ஏமாற்றி மோக்ஷஆசை காண்பித்து, பணம்பறிக்கும் பைத்தியங்கள் ஒழியும் வரை; எல்லோரும் சகோதரர்கள் என்று மக்கள்எண்ணும் வரை; கொஞ்சம்சம்பாத்தியமானாலும் அது எல்கலாருக்கும்சமம் என்றுமக்கள் எண்ணி, பொருளாதாரத்தில் உயர்வு, தாழ்வு ஒழியும்வரை; நாட்டையாளும் அரசாங்கம் அரசு யாருடையகையிலிருப்பினும் அந்நாட்டிற்கும், சிறப்பாக நம் நாட்டிற்கு அன்றும், இன்றும், என்றும் தொல்லை, தொல்லை, தொல்லையே!!!

தேசீயப்பார்ப்பனரில் பூணூலை அறுத்தவர் எத்தனை பேர்?

"செவிடு"

மற்றெல்லாவித காது நோய்களையும் குணப்படுத்துவது "காமத் எண்ணெயே" ஒரு பாட்டில் வாங்கி உபயோகித்துப் பாருங்கள். பலனுக்கு உத்திரவாதம்.

1 பாட்டல் எண்ணெய் விலை ரூபாய் 1—4—0.

1 பாட்டில் டிராப்பர் உள்பட விலை ரூபாய் 1—8—0.

3 பாட்டல் வாங்குபவர்களுக்கு தபால் செலவு இனாம். இங்கிலீஷில் விண்ணப்பிக்கவும்.

Ballabha & Sons,
Pilibhit R. K. Ry., U. P.

பெற்றோர்களே! கவனியுங்கள்.

உங்கள் குழந்தைகளுக்குகுலைக்கட்டி வயிற்றுக்கட்டி என்ற அபாயத்தினின்று நிச்சயமாய் குணப்படுத்தும் கைகண்ட மருந்து தெரியுமா? பிரசித்தி பெற்ற விஜய நகரம் டாக்டர் ஜம்மி வியாசராவ் அவர்களிடமும்

(விஜயநகரம் B. N. Ry.)

M. கல்யாணசுந்திரம்,
74 பட்டமங்கல தெரு மாயவரம்.

ஏஜண்டு & ஆர்கனைசர் என்ற இடத்திலும் கிடைக்கும்.

தமிழ் நாடெங்கும் ஏஜண்டு தேவை. ஆர்கனைசருக்கு உடனே எழுதவும்.

சுயமரியாதை இயக்கப்பிரமுகர்கள்.

திருவாளர்கள், 1. ஈ. வெ ராமசாமி, 2. W. P. A. சௌந்திரபாண்டியம், 3. ஆர். கே. ஷண்முகம், 4. எஸ். ராமநாதன் 5. கைவல்யசாமியார், 6. ஈ. வெ. ரா. நாகம்மாள், 7. இந்திராணி பாலசுப்பிரமணியம். 8. சிவகாமி, சிதம்பரனார், 9. குருசாமி குஞ்சிதம், 10. நீலாவதிராம சுப்பிரமணியம் 11. சுலோசனா பொன்னம்பலனார், 12. சிவானந்தம், 13. அருணகிரிசுந்தரி, ஆகியவர்களின் போட்டோ படங்கள் 6½ X 4¾ சைஸ்படம் 1-க்கு 0—8—0. ஈ. வெ. ரா. 8½ X 6½ 1-க்கு 1—0—0. மொத்தமாய் வாங்குகிற வர்களுக்கு 100க்கு 6—4—0 வீதம்கமிஷன் கழித்துக்கொடுக்கப்படும்.

தனிகாப்பி வேண்டியவர்கள் விலைக்குமேல் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். விலாசம்:—

பாலு & Co.,
No. 3 ஒப்பணக்காரத்தெரு,
ஈரோடு.

கிரகணப்பலன்கள்.

(ஆனந்தம்)

சென்ற மார்ச்சு மாதம் இருபத்திரண்டாம் தேதியன்று சந்திரக்கிரகணம் உண்டானது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கும். அன்று நம் இந்துக்கள் எல்லோரும் கிரகண மோட்சத்தை அடைந்ததும் நினைவிருக்கும் ஆகையால் இக்கிரகணத்தின் வரலாற்றையும் அதனால் உண்டாகும் பலனையும் பற்றி முதலாவது சிறிது ஆராய்வோம்.

கிரகணங்களிலே இரண்டு வகையுண்டு. ஒன்று சந்திரக்கிரகணம் என்றும், மற்றொன்று சூரியக்கிரகணம் என்றும் சொல்லப் படுகிறது. சந்திரகிரகணமானது பௌர்ணமி தினத்தன்றும், சூரியகிரகணம் அமாவாசை தினத்தன்றும் ஏற்படுகிறதென்று எல்லாருக்கும் தெரிந்த விஷயம். கிரகணங்கள் எப்படிஉண்டாகிறது என்று கவனித்தால் ஒவ்வொரு நாட்டாரும் வெவ்வேறு முகாந்திரங்கள் கூறுகிறார்கள் நாம் சயன்சில் படித்தறிந்ததுஎவ்வாறென்றால், 'சந்திரனுக்கு சுயமான பிரகாசம் இல்லை என்றும், சூரியனிடத்திலிருந்து பிரகாசத்தைக் கிரகித்து நமக்குக் கொடுக்கிறதென்றும், சில சமயங்களில் சூரிய வெளிச்சமானது சந்திரனுக்கு வராது பூமியால் தடுக்கப்படுவதால். அப்பொழுது நிழல் விழும் இடங்களுக்குக் கிரகணம் ஏற்படுகிறது. இதே மாதிரியாகத்தான் சந்திரனானது சூரிய வெளிச்சத்தை பூமிக்கு விடாது சில சமயங்களில் தடுப்பதால் சூரிய கிரகணம் ஏற்படுகிறது. சந்திரக் கிரகணம் உண்டாகும் போது சூரியன், பூமி, சந்திரன், இம்மூன்றும் ஒரே நேர் கோட்டில் இருக்கும். இதே மாதிரியாக சூரியன், சந்திரன், பூமி, மூன்றும் ஒரே நேர் கோட்டில் இருக்கும் போது சூரிய கிரகணம் ஏற்படும் இது தான் நாம் சயன்சில் படித்தறிந்த விஷயம்.

சயன்ஸ்படிப்பிற்கும், நம் இந்திய சாஸ்திரப் படிப்பிற்கும் உள்ள சம்பந்தத்தை உற்று நோக்குங்கால் பாம்புக்கும், கீரிக்கும் எவ்வளவு சம்பந்தம் உண்டோ அவ்வளவு சம்பந்தம் உண்டு. சந்திர கிரகணம் என்றால் நவக்கிரககங்களில் ஒன்றாகிய ராகு என்னும் பாம்பானது பிடிக்கிறதாம். அதாவது சந்திரனை சனியன் பிடிக்கிறதென்றும் சொல்லுகிறார்கள். கிரகணம் பிடிக்க ஆரம்பிக்கும்போது கவனித்தால் பாம்பானது சீறிசந்திரனையோ அல்லது சூரியனையோதொடுகிறதாம். ஒரு தடிக்கு இரையாகக் கூடிய பாம்பானது நமக்கு கணக்கிடமுடியாத தூரத்தில் இருக்கும் ஒரு பொருளை எப்படி தொட முடியும்? மரங்களின் மீதேறி செல்வதிலேயே பாம்புகள் படும்பாடு சொல்ல இயலாது. அப்படி இருக்க பிடிப்பிற்கு யாதுமில்லாது காற்றினிடையே எவ்வாறு செல்லக்கூடும்? நமக்கும் சூரியனுக்கும் அல்லது சந்திரனுக்கும் தூரம்தான் எவ்வளவு? எப்பேர்ப்பட்ட சக்தியை உடையவர்களாலும் செய்யக்கூடாத காரியத்தை இந்த அற்ப பாம்பானது செய்து விடுமா? அல்லது வெகுதூரம் பறந்து செல்வதற்குத்தான் பாம்புக்கு சக்தியிருக்கிறதா. மிகுதியாக பறந்து செல்லக்கூடிய பறவைகளும் வெகு தூரம் பறந்து சென்று விட்டால் உயிரை இழக்கும்படியும்நேரிடுகிறது. அப்படியிருக்க இந்த ராகு என்னும் பாம்பானது இப்பேர்ப்பட்ட அரிதான காரியத்தை எவ்வாறு செய்யக் கூடும் என்பதை யோசித்துப் பாருங்கள். எதற்காக இந்த ராகு என்னும் பாம்பானது சந்திரனையோ அல்லது சூரியனையோ போய் பிடிக்கிறது என்று சாஸ்திரக் காரர்களைக் கேட்டால் அவர்கள் சொல்லும் பதில் பல விதமாக இருக்கிறது, ஒன்றுக்கும் உதவாதது- இதற்கு சரியான காரணங்கள் சொல்லத் தெரியாத பார்ப்பனர்கள் வார்த்தைகளைக்கேட்டு நாம் அடையும் இன்னல்கள் அளவற்றது.

சென்ற சந்திரகிரகணமானது 4-மணிக்கு ஆரம்பித்து 7-30 மணிக்கு அந்தமாயிற்று. இதற்காக காலை 10-மணியிலிருந்தே ஆகாரம் உண்ணக்கூடாதாம். கிரகணம் விட்டபிறகு ஸ்நானம் செய்துவிட்டுத்தான் ஆகாரம்புசிக்கவேண்டுமாம். இன்னும் சிலர்மறுநாள்தான் ஆகாரம் சாப்பிடுவார்கள். சிலருக்கு கொஞ்சம் காலந்தவறி சாப்பிட்டால் அநேக தேக அசௌக்கியங்கள் உண்டாகி விடுவதாகச் சொல்லுகிறார்கள். காலை 10-மணிக்கு சாப்பிட்டு ஒருநாள் முழுவதும் பட்டினி கிடப்பதென்றால் முடிந்தகாரியமா? அன்றாடம் கூலிவேலை செய்து ஜீவிப்போர்களின் கதி என்னாவது? இவர்கள் சரியான போது ஆகாரமின்றி எவ்வாறு உழைக்கக்கூடும்? என்ன மடத்தனமான காரியத்தை நாம் கைக்கொண்டு நம் தேகத்திற்கு துன்பத்தைக்கொடுக்கிறோம். இவைகள் மாத்திரமல்ல. கிரகணம் தொடும் போது, விடும்போதும் ஸ்நானம் செய்யவேண்டுமாம். காலையிலேயே குளித்திருந்தாலுங்கூட மறுபடியும் குளித்துத்தான் ஆகவேண்டுமாம். இப்பனிகாலத்தில் இரவில் ஸ்நானம் செய்வதென்றால் மிக்க தொந்தரவாக இருக்கும். அப்படி குளிப்பதனால் நமக்கு புண்ணியம் கிடைக்கிறதா? என்று பார்த்தால் அப்படி ஒன்றும் காணோம். ஆனால் நாம் பெறுவது என்னவென்றால் ஜலதோஷமும், ஜுரமும்தான். ஜலதோஷத்தினாலும், ஜுரத்தினாலும் வாதனையடைந்து அதன்மூலம் சில வழிக்கும் பணம் எவ்வளவு? காலையிலிருந்து பட்டினி கிடந்ததால் வயிற்றுவலி ஒருபக்கம் உபத்திரவம் பண்ணும். ஒருநாள் உபசாரம் இருந்தகளைப்பினால் கூலிக்காரர்கள் மறுநாள் வேலைசெய்யமுடியாது. அன்றைய ஜீவனத்துக்கு வழியில்லாது தவிக்கிறார்கள். இதுதான் கிரகணத்தால் உண்டான பலன்.

இத்துடன் விட்டபாடில்லை. கிரகணத்தன்று உத்திர நட்சத்திரமாம் அந்த நட்சத்திரத்தில் ஜனித்தவர்களுக்கு சிலசடங்குகள் இருக்கின்றன அது என்னவென்றால் வெள்ளியினாலோ அல்லது தங்கத்தினாலோ ஒருதகடு செய்யவேண்டுமாம், அந்தத்தகட்டை கிரகணம் தொடும்போது அன்றைய நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் நெற்றியில் கட்டிக்கொள்ளவேண்டுமாம். கிரகணம் விட்டபிறகு தகட்டை நெற்றியினின்றும் கழட்டிப்புரோகிதருக்கு பழம், தேங்காய் வெற்றிலை பாக்கு தட்சணையோடு சேர்த்து தானம் செய்யவேண்டுமாம். இவ்வாறு செய்யாவிட்டால் கிரகணப் பீடை பிடித்துக்கொள்ளுமாம். இதுநிற்க கிரகணத்தன்று பங்குனி உத்திரமாகையால் ஒருவிசேஷதினமாகும். அநேகர்விரதம்இருப்பதும் உண்டு. கிரகணவிரதமும் பங்குனி உத்திர விரதமும் சுப்ரமணியஸ்வாமி ஸ்தலங்களுக்கு கோடை வெய்யலில் பிரயாணம் செய்ததும் சேர்ந்து ஒத்துக்கொண்டது. இக்கஷ்டங்களை நம் மாந்தர்கள் எப்படித்தான் சகித்திருந்தார்களோ தெரியவில்லை. இதைப் பற்றி நினைக்குங்காலே ஒவ்வொருவருடைய மனமும் இளகுமென்பதில் சந்தேகம் யாதும் இல்லை. நாம்சாஸ்திரங்களிலுள்ள மற்றகொள்கைகளுக்கு இடங்கொடுத்தாலும் இதுமாதிரியான கேவல நம்பிக்கைகளுக்கு இடங்கொடுப்பது மடைமையென்றே நம்புகிறேன். கிரகணத்தன்று என்பாடும் மிகவும் நெருக்கடியாகத்தான் வந்துவிட்டது. இரவு சாப்பாடின்றி பட்டினிகிடக்க நேரிடும் போல் இருந்தது. பிறகு சற்றுயோசித்து என் நண்பர் ஒருவர் வீட்டிற்குப் போய் சாப்பிட்டு வந்தேன். எங்கள் வீட்டை நம்பியிருந்தேனாகில் நடுநிசியில்தான் ஆகாரம் உண்ணவேண்டியிருக்கும். என்னமோ தப்பித்துக்கொண்டேன். வாசகர்கள் தங்களாலியன்றவரை மிகவும் கேவலமான நம்பிக்கையில் ஈடுபடாது இருக்கும்படியாக வேண்டிக்கொள்ளுகிறேன்.

மலையாளம் சில்க்.

2½ வீதி 5-நீளம்பட்டு 1க்கு ரூ. 1-8-0
ஷிகம்பிக்கரை டஜன் 1க்கு ரூ. 15.
3-வீதி8-நீளவேஷ்டி 1க்குரூ. 3-8-0
S. K. R. வீவிங் பாக்டரி,
கோட்டார் திருவிதாங்கூர்.

சரஸ்வதி தேவிக்கு நரபலி

சுஜாலி என்ற கிராமத்தில் பழைய பழக்க வழக்கங்களில் மிகுந்த நம்பிக்கையுள்ள முசாமத் உமரை என்ற ஒரு பெண்ணும்,மற்றும் சில பெண்களுஞ் சேர்த்து பாடிக்கொண்டிருக்கும் போது திடீரென்று தொண்டைகெட்டுப்போய் பாடமுடியாமல் போய்விட்டதாம். அதை உத்தேசித்து பெண் தெய்வமாகிய சரஸ்வதிக்கு சுமார் 8-வயதுடைய குனியா என்ற சிறுமியைப் பலியிட்டுக் கொலைசெய் தகுற்றத்திற்காக முசாமத் உமரை என்பவள் பரேயிச் செஷன்ஸ் ஜட்ஜியால் தூக்குத் தண்டனை விதிக்கப் பட்டாள். வழக்கு விசாரணையின் போது முசாமத் உமரைதான் அன்றொரு நாள் பல பெண்களுடன் சேர்ந்து பாடிக்கொண்டிருக்கும் போது திடீரென்று எல்லா பெண்களுக்கும் தொண்டை கெட்டு பாடமுடியாமல் போய்விட்டதென்றும், பிறகு தான் பகவதி சரஸ்வதிக்கு ஒரு நரபலி கொடுப்பதாக வேண்டிக்கொண்டதாகவும், அதற்காக ஒரு நாள் குனியா என்ற 8-வயது சிறுமியை ஒரு மரத்தில் கட்டி வைத்து ஒரு மண்வெட்டியால் அவளைத்தலையில் அடித்துக் கொன்றதாகவும், அதன் பிறகு அவள் தொண்டை சரிப்பட்டு நன்றாக பாடமுடிந்தது என்றுஞ் சொன்னாள். (ச-ம்)

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

எங்குபார்த்தாலும் மஞ்சக்கா யாசம் தரித்த புத்த சந்நியாசிகளே காணப்படுகின்றனர். அவர்களிற் பலருக்கு புத்த மதத்தின் உண்மைகள் தெரியவில்லை. ஆங்கிலங் கற்ற சில நண்பர்கள் வெள்ளைக்காரர்கள் எழுதிய நூலுதவிகொண்டே சிறிது புத்தசமயத்தை உணர்ந்திருக்கின்றார்கள் உண்மையான புத்தமதம் ஆங்கு நிலவியிருந்தால் பெரும் நன்மை விளைந்திருக்கும். துரஷ்டவசமாய் இலங்கை புத்த மக்களைப்பற்றிய மூடநம்பிக்கை, பகுத்தறிவின்மை முதலியவைகளைப் போக்கி சுயமரியாதை யொளி வீச நம் சுயமரியாதைத் தொண்டர்களாய் இந்தியாவிலிருக்கும் அன்பர்கள் மறவாதிருப்பார்களாக. அங்கு நாம் தொண்டாற்றினால் நாம் எதிர்பார்ப்பதைவிட அதிகப் பலன் எளிதில் கிடைக்கும். புத்த மதக் குருவாகிய தோழர் தர்மஸ்கந்தபிக்ஷு போன்ற அன்பர்கள் நம்மை வரவேற்கின்றார்கள். எனது வேலைகள் முடிந்ததும்நான் சுகமே புறப்பட்டுஎனது ஊர் வந்துசேர்ந்தேன். யான் அங்கு தங்கியிருந்த காலத்தில் எனக்குப் பேருதவிபுரிந்த சுயமரியாதைத்தொண்டர்கள் அனைவருக்கும் மறுமுறையும் எனது நன்றியறிதலைத்தெரிவித்துக்கொள்கிறேன்.

வங்காளத்தில் ஜஸ்டிஸ் கட்சி.

நிர்வாக சங்க அமைப்பு.

வங்காள ஜஸ்டிஸ்கட்சி காரியதரிசி திரு. அபானிகேராய் 'ஜஸ்டிஸ்' பத்திரிகையில் கீழ்கண்டபடி எழுதுகிறார்.

வங்காள ஜஸ்டிஸ் கட்சிக்கு நிர்வாகக் கமிட்டி ஏற்படுத்த வேண்டுமென்ற விஷயமாக "நாய்க்" முதலிய பல பத்திரிகைகளில் விளம்பரப்படுத்தப்பட்டது. அதன்பின் மார்ச்சு மாதம் 20-ந்தேதி நியாக்ய சமிதியின் கூட்டம் ஒன்று நடைபெற்றது. 1932-ம் வருஷத்திற்கு ஒரு நிர்வாகக் கமிட்டி ஏற்படுத்த வேண்டுமென்று அதில் யோசனை செய்யப்பட்டது.

பாபுதாராநாதராய் சௌத்ரி கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். ஒரு மணி நேரமாக ஓயாமல் மழை பெய்துகொண்டேயிருந்தும், கூட்டத்திற்கு ஏராளமானவர்கள் வந்திருந்தனர். இதனால் இவ்வியக்கத்தில் ஜனங்களுக்குள்ள அக்கரை நன்கு தெரிகிறது. அக்கூட்டத்திற்கு வந்திருந்தவர்களில் ராவ்பகதூர் எச். யன். தாஸ் யம். ஏ. யம். டி. பாபுதார் நாத்ராய் சௌத்ரி, பாபுசதானந்தமித்ரா பி. ஏ. பாபு அபானி குமாரராய், பாபு அபினேஷ் சந்திரசிங், பாபு தாரகநாத்தாஸ், பாபுநாராயண சந்திரசிங், பாபு அஸ்வினி குமாரராய், பாபு சிசிர் குமார்கோஸ், பாபு ஆதித்தியமார்ராய், பாபு ராஜனிகொந்தோதத்தா பாபு அரபிந்தகோஷ், பாபு அகில் கிருஷ்ணபோஸ் முதலியவர்கள் இருந்தார்கள்.

பாபுஅபினி குமார்ராய் சமிதியின் நோக்கங்களையும், அதன் வேலைகளையும் பற்றி சுருக்கமாய் விளக்கினார். டாக்டர் எச். யன். தாஸ் ஜஸ்டிஸ் கட்சி ஏற்படவேண்டியதின் அவசியத்தைப்பற்றி உருக்கமான உபந்யாசம் ஒன்று செய்தார். அதற்கு சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் அதில் ஒற்றுமைப்பட்டு ஒத்துழைக்க வேண்டுமென்று அவர் வற்புறுத்திக் கூறினார்.

பிறகு தலைவர் நிகழ்ச்சிக் குறிப்புகளைப்பற்றி எடுத்துரைத்து அரிய பிரசங்கம் செய்தார். சபையினர் தர்சமயத்திற்கு எது அவசியம் என்பதைப்பற்றி கவனிக்கவேண்டுமென்றும், யாவரும் ஒற்றுமையாக இருந்து அநீதிகளைச் சேர்ந்து எதிர்க்க வேண்டுமென்றும், அதன்பொருட்டு சட்டவரம்பிற்குட்பட்ட கூடுமான நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், அதனால் ஜனங்களுக்கு நன்மை விளைவதன்றி சர்க்காரோடும் ஒத்துழைத்ததாகுமென்றும் தலைவர் எடுத்துச் சொன்னார். பின்பு கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டன:-

1. பிரஸ்தாப சமிதிக்கு வங்கபாஷையில் "நியாஷ்டி சமிதியென்றும் ஆங்கிலத்தில் வங்காளம் "ஜஸ்டிஸ் கட்சி" என்றும் பெயரிடப்படவேண்டும்.

2. கீழ்க்கண்ட உத்தியோகஸ்தர்களின் கீழ் 1932-ம் வருஷத்திற்கு நிர்வாகக் கமிட்டி ஒன்று ஏற்படவேண்டும்.

(தலைவர்) பாபுதாராநாத்ராய் சௌத்ரி.

(உதவித் தலைவர்) ராய்பகதூர் டாக்டர் எச். யன் தாஸ், யம். ஏ. யம். டி.

காரியதரிசி பாபு அபானி குமாரராய், கூட்டுக்காரியதரிசி மௌல் வி. யம். ஏ. ஹுசெயின் பி. ஏ. பி. எல்.

பொக்கிஷதார்: பாபுராம் சுரேந்திரர் யன். தேவ்.

நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர்கள்: பாபுகாளி, பாபுபி. பானர்ஜி, பாபுஜி தேந்திரர், பாபு கே. பனர்ஜி பாபு காளிபாத மித்தர், பாபு அமல சந் மித்தர், பாபு அனில் கெ பாசு, பாபு ஜபேந்திரநாத் மித்தர் யம். ஏ., திரு. காசி அலி ஆமத், திரு. எ. ரஷீத் பி. யல்.

4. அங்கத்தினர்களுக்குத் தலைக்கு மாதம் ஒன்றுக்கு 4 அணு வீதம் சந்தா ஏற்படுத்தவேண்டும், அத்தொகை சமிதியின் அபிவிருத்தியின் பொருட்டே செலவு செய்யப்படவேண்டும்.

5. புதிதாக அமைக்கப்பட்ட கட்சிக்கு பிரபலஸ்தர்களுடைய ஆதரவுகள் சம்பாதிக்கப்படவேண்டும்.

6. சமிதிக்கு சென்னை ஜஸ்டிஸ் கட்சியாரின் ஆதரவும் ஒத்துழைப்பும் இருக்கும்படி அவர்களுடன் கடிதப் போக்குவரத்துக்கள் இருந்துவரவேண்டும்.

7. பத்திரிகைகள் மூலமாயும், துண்டுப்பிரசுரங்கள் மூலமாயும், விளம்பரங்கள் மூலமாயும், பொது ஜனங்களுக்கு கட்சியின் நோக்கம் வெளிப்படுத்தப்படவேண்டும். இதற்கு பொது மக்கள் ஆதரவைப்பெறும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். பின்பு தலைவருக்கு வந்தனம் கூறப்பட்டு கூட்டம் கலைந்தது.

(சண்டமாருதம்.)

ஆடவன் அகந்தை.

மனைவி கால்களில் ஆணி அடித்தானும்.

பெல்காம் செஷன்ஸ் ஜட்ஜால் விசாரிக்கப்பட்டு தண்டிக்கப்பட்ட ஷை ஜில்லா பிம்பிள் நகரத்தைச் சேர்ந்த விடோபாகரஞ்சல்கர் என்ற கணவனைப் பற்றி செய்தி வெளியாயிருக்கிறது.

சுமார் 13 வயதுள்ளவளும் 7, 8 வருஷங்களுக்கு முன் விவாகமானவளுமான அவனது மனைவி மஷ்னி என்பாள் விவாகமான நாள் முதல் தன் தாய்வீட்டில் வசித்து வந்தாளாம். 1930 ஆ எதிரிமாமியார் வீட்டிற்குப் போய் தன் மனைவியை உடன் அனுப்பும் படி கேட்டானும். மாமியார் மறுத்துவிடவே எதிரி திரும்பி விட்டானும். ஆனால் சிறிது நாள் கழித்து எதிரி மீண்டும் சில ஆட்களோடு மாமியார் வீட்டிற்குப் போய் அப்பெண்ணை பலாத்காரப்படுத்தியதல்லாமல் அவளை ஒருஅறையில் அடைத்து வைத்து அப்பெண்ணின் இரு பாதங்களிலும் இருஆணிகளை அடித்து விட்டானும், இவ்வழக்கை விசாரித்த நீதிபதி எதிரிக்கு ஒரு வருட தண்டனை விதித்தாராம்.

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

அவதாரம் செய்வதில்லை. இந்தியாவைப்போல அவதாரங்கள் பெருத்த தேசம் உலகத்திலே வேறெங்கும் கிடையாது. இதற்குக் காரணம் கேட்டால், இந்தியா புண்ணிய தேசம், ஆகையால்தான் சாமிகள் இந்தியாவில் அவதாரம் செய்கின்றன என்று சாமிகளின் "பக்தர்கள்" சொல்லுகிறார்கள். ஆனால், சுயமரியாதை இயக்கம் என்ன சொல்லுகிறதென்றால், அவதாரப்புரட்டை நம்புவதற்கு இந்தியாவில் ஜனங்கள் இருக்கிறபடியால்தான் சாமிகள் இந்தியாவிலேயே அளவில்லாமல் அவதாரம் செய்துகொண்டிருக்கின்றன. மற்ற தேசமக்கள் பகுத்தறிவுடையவர்கள் ஆகையால், சாமிகள் அந்தத் தேசங்களில் அவதாரம் செய்யப்படுகின்றன என்று சொல்லுகிறார்கள்.

ஆனால், இந்தியாவிலும் இப்பொழுது பகுத்தறிவு சூரியன் உதயமாகி இருப்பதால் ஜனங்கள் கொஞ்சங் கொஞ்சமாக விழித்துக் கொள்ளத் தலைப்படுகிறார்கள். ஆகவே, சாமிகள் இனி அவதாரம் செய்யுமா? சாமிகளுக்கும் ஆபத்து வந்துவிட்டபோது அவதாரத்தைப்பற்றிச் சிந்திக்கவேண்டியதில்லை.

சுயநலக் கருத்துடன் தங்கள் செல்வாக்கிற்கும் வயிற்றுப்பிழைப்புக்குமாக அவதாரப் புரட்டுக்களைச் சொல்லி ஒரு கூட்டத்தார் மற்றவர்களை ஏமாற்றுவது அயோக்கியத்தனம், அவைகளை மற்றவர் நம்புவது முட்டாள்தனம்.

அவதாரப்புரட்டு அழிக
பகுத்தறிவு வளர்க.

ஆலய உரிமை பொது.

திரு வாரியரின் சமதர்ம நெறி.

கள்ளிக்கோட்டையைச் சேர்ந்த கொட்டக்கல் ஆரிய வைத்தியசாலையின் சொந்தக்காரரான திரு. வி. எஸ். வாரியர் என்பார் தன் வந்திரிக்கு அர்ப்பணம் செய்துள்ள தனது கோயிலில் ஜாதி வித்தியாசமில்லாது எல்லா இந்துக்களும், தீண்டாதார் உள்பட அனைவரும் தரிசிக்கலாமென அறிவித்துள்ளார்.

ஹிந்து—கிறிஸ்துவ விவாகம்.

அலகபாத் "பயனீர்" பத்திரிகாலயத்தைச் சேர்ந்த ஜகதீஸ் நடராஜனும், லக்ஷ்மணபுரி கலாசாலையில் பி. ஏ. வகுப்பில் வாசித்துவரும் மிஸ் மைரா-என்னும் மாதும் விவாகம் செய்துகொள்வதாகத் தீர்மானித்திருக்கிறார்கள். ஒருவர் கிறிஸ்துவ வகுப்பைச் சேர்ந்தவராயினும் எவ்வித முரண்பாடும் இல்லாமலே இருவரும் விவாகம செய்து கொள்ளலாமென்று இந்திய கிறிஸ்தவ விவாகச் சட்டம் 5-வது செக்ஷன் அனுமதியளிக்கிறது. இதற்குப் பெற்றோர் சம்மதித்தது போற்றத்தக்கதாகும்.

"சன்மார்க்கன்"

தமிழ்மாதப்பத்திரிகை.

பல அரிய கட்டுரைகளுடன் கைவல்யம்கட்டுரையும் தொடர்ச்சியாக வருகின்றது.

ஆண்டுசந்தா.
உள்நாடு ரூ. 1—0—0.
வெளிநாடு ரூ. 1—4—0.

ஆசிரியர்:—
சுவாமி சிவநேசம்,
"சன்மார்க்கன்" பழனி.

உங்கள்
கண்ணையும்
காதையும்
கவனித்துக் கொள்ளுங்கள்

பூவிழல்!!

கண்ணில் பூவிழுந்து பார்வையைத் தடுப்பதை ஆப்ரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

செவிடு!!

பாதி அல்லது முழுவதும் செவிடாயிருந்தால் கூடப் பரவாயில்லை. காதிரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கரையில்லை. சுத்தமாக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.

விபரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

'Sri' Works
Beadon St. Calcutta,

(8-ம் பக்கத்தொடர்ச்சி)

சமூக நிலைமையும், கிராமத்தில் வசிக்கும் பாளையம் என்ற தீண்டப்படாதனுடைய நிலைமையும் ஒத்திட்டுப்பார்த்தால், பொருள் படைத்துள்ள வித்தியாசமே இருவர் அடைந்துள்ள சமூக நிலைமைக்குக்காரணமாகும். பொருள் உண்டான போதே, சகல நாகரீகமும், கல்வியும், செல்வாக்கும் இவ்வுலகில் உண்டாவதே, இதற்குப் போதுமான சாட்சியாகும். "பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை" என்றார் ஓர் பெரியோர். ஆதலின், எல்லா சமூக வித்தியாசங்களுக்கும் பொருள் காரணமாய் நிற்கின்றது. இதனை அறிந்தோ, அறியாமலோ தாழ்த்தப்பட்டவர்களுக்கு தீண்டாமை ஒழிந்தால் போதுமென்றார், நமது காந்தியார்! இது அவருடைய முதலாளி மனப்பான்மையைத் (Bourgeois Mentality) தெள்ளென விளக்குகிறது. இதே மாதிரியாகவே, நமது ராஜாங்கமும், மதஸ்தலஸ்தாபனக் கமிட்டி ஒன்றை ஏற்படுத்துவதால், மதங்கள் சீரடையுமென எண்ணுவதும், உலக அரசாங்கங்கள் பலவும், இத்யாதி மனப்பான்மையைவளர்த்துக்கொண்டு, பாமர மக்களுக்கு "அதைச்செய்தேன் இதைச்செய்தேன்" என்று சொல்வதெல்லாம் வேஷத்தனமே யொழிய, முதலாளி திட்டம் மாறப்போவதில்லை.

வழங்கும் நீதியும் நெறியும், (Laws and Rules) பொருளுடையோருக்கு ஒன்று, ஏழைகளுக்கு மற்றொன்றே. நியாயமும் நீதியும் (Justice and Laws) எல்லோருக்கும் பொதுவென்பதும் வியர்த்த கோரிக்கையே (Vain hope) பணமுள்ளவன் கெட்டிக்கார லாயர்களைக்கொண்டு தன் வழக்கை ஜெயிப்பது ஸகஜம். ஏழைக்கு நியாயம் கிடைப்பது அரிது. ஜட்ஜ் பாரி என்பவர் தன்னுடைய நியாயசட்டமும் ஏழைகளுமென்ற புத்தகத்தில் (Law and Poor by Judge Parry) தற்கால நியாயத்தின் ஒரு தலை பட்சத்தை கொடுத்துக்காட்டியுள்ளார். லஞ்சம் கொடுத்து நீதியை விலைக்கு வாங்குவோர் அனந்தம்! சாமர்த்திய லாயரைக்கொண்டு வாதத்தை நிறைவேற்றிக்கொள்வார் அநந்தம்! எதிர்வாதம் சக்தி அற்றவரைத் தோல்வி செய்வோர் அநந்தம்! ஒரு வார்த்தையில் சொல்லவேண்டுமானால், பணக்காரன், எளியரைத் தோற்கடிப்பது மிகவும் லேசான காரியமென அறிக. செல்வம்படைத்தோர் எந்த நீதியையும், எந்த சட்டத்தையும் மயக்க முடியும். இது அனுதினமும் உலக கோர்ட்டுகளில் நடந்துவரும் காட்சி. அரசியலும், ஜாதியும், மதமும், பொருளாதாரத்தைத் தழுவிநிற்பது போல், நீதியும் நியாயமும் பொருளுடையோருக்கே அனுகூலமாய் இருந்து வருகின்றன. பொருளாதாரத்தை ஆதாரமாகக்கொண்டிரா அரசியலுமில்லை, மதமுமில்லை, ஜாதியுமில்லை, நீதியுமில்லை, நியாயமுமில்லை. பொருளாதார உரிகள் பொது மக்களுக்குக் கிடைக்கும் வரை, பொது மக்கள் கடந்த 5000, 10000 வருஷங்களாக இருந்து வந்த மாதிரியாகவே இருந்து வருவார்கள். பொருளாதார உரிமை சமமாவதற்கு என்ன செய்யவேண்டுமெனில் முதலாவது, அரசியல்களுக்கு அஸ்திவாரமாயுள்ள தனிஉடைமையை, பொது உடைமை ஆக்கி; அரசியல் சுதந்தரத்தையும், ஆதிக்கத்தையும் கிராமங்களிலுள்ளகுடியானவர்கள் முதல், மந்திரி வரை செலுத்தவேண்டும். இது தொழில் முறைப்படி தேருதலை நடத்தினலொழிய, சொத்து செல்வம் படைத்தோர் மாத்திரம் ஓட்டுரிமையைப் பெறுதல் பொது மக்களுக்கு யாதொரு பிரயோஜனத்தையும் தராது.

பொது ஜனங்கள் பசி, பட்டினி வேலை இல்லாமை, வீடில்லாமை கல்வி இல்லாமையிலிருந்து மீளவேண்டுமானாலும் சரி, ஜாதி மத வித்தியாசம் உலகை விட்டு அகலவேண்டுமானாலும் சரி, நற்கல்வி, கேள்விகள் பரவவேண்டுமானாலும் சரி, மெஞ்ஞானம் உலகில் நிறையவேண்டுமானாலும், சரி. சுயமரியாதைக் கட்சியோர், சமதர்ம அரசியலை ஸ்தாபனம் செய்யவேண்டும். மற்ற கட்சியோரை கண்டித்தல் மாத்திரம் போதா. தீர்மானமுள்ள வேலையை (Positive Work) செய்யவேண்டும். (முடிவு.)

LEPROSY, LEUCODERMA, PATCHES SYPHILITIC ERUPTIONS, ECZEMA, etc.

No Matter Hereditary or self-acquired. No risk of injection. Cured absolutely. For particulars please write with detailed descriptions of the disease in English.

Post Box No. 11413,
Calcutta.

நத்தம் முஸ்லீம் நேயர் சங்கம், அபிராமம்.

இச்சங்கத்தினுதரவில் 3—4—32 தேதி ஜனுப் து. கா. முஹமதுயாசீன் அவர்களின் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் கூடியது, தலைவர்களால் கிராஅத் ஓதப்பட்டானதும் ஜனுப் எஸ். சையது இஸ்மாயில் அவர்கள் "நாம் செய்யவேண்டுவதென்ன?" என்னும் விஷயத்தைப்பற்றி சொற்பொழிவொன்று நிகழ்த்தினர் பின்னர் தலைவர் தமது நீண்ட பின்னுரையில் உபன்யாசகர் விளக்கிய விஷயங்களை விபரித்துப்பேசினர். அதன் பின் காரியதரிசியால் வந்தனோபசாரம் கூறப்பட்டானதும் கூட்டம் இனிது கலைவுற்றது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

Goshaye office pillss.

கோஷாயி ஆபீஸ் மாத்திரை

உண்மைசடைப் பிடி. நிர்ணயமே ஜெயம்.

டாக்டர் T. K. வெங்கிடாஜலம் அவர்களால் தயாரித்து அனுபவித்து கைகண்டது.

அமுர்த மருந்த சடலத்தை காத்து, பகுத்தறிவை அரிந்து அரிவாகிய அருள் ஜோதியை தெரிசித்து ஆனந்தம் அனுபவிக்க சஞ்சலத்தை அகற்றி, சிவராஜ யோகம் சாதித்து வருவோர்களுக்கும் முடிவு பெற்ற காரியங்களில் மனதை செலுத்தி, சதாசஞ்சலம் அனுபவித்து வரும் இல்லற வாசிகளுக்கும், (ஆனந்த அருள நீருக்கும் அழுகை கண்ணீருக்கும் உள்ள வித்தியாசம் போல்.) மூலாக்கினி தகித்து வருவதினால் வாத, பித்த, அய்யமென்னும் சிலேத்துமமும் (நீர், நெருப்பு, காற்று,) காலக்கிரம் ஆகார தவக்கத்தினால், முரணுகி, பித்தமதிகரித்த வெட்டையும் வாய்வும் உரமாகியது முதல் மலபந்தம், மலச்சிக்கல், மலம் தீய்தல், அன்னதுவேசம், அசகி, இடுப்புவலி, மார் நோய் கில் வாய்வு சூலை தாது நஷ்டம் முதலிய வியாதிகள் ஜெனித்து வருவது யாவருக்கும் அனுபவசித்தி.

மேல்படி உபாதையுள்ளோர்கள் இரவு போஜனத்துக்குப் பின் கோஷாயி ஆபீஸ் மாத்திரை ஒன்றை, ஒரு வெத்திலையில் வைத்து மென்று, ஜலம், சாப்பிட்டால் அதிகாலையில் மலம் தாராளமாய் கழிக்கும் கூவரம் தைலஸ்னன முதல் வழக்கம் போல் யாவும் நடத்திக் கொள்ளலாம் மலபந்த முள்ளோர்கள் துடர்ச்சியாயும் வாரமிரு, மும்முறையாக உபயோகித்து வந்தால், வெட்ட வாய்வு உபாதைகளை, நிவர்த்தித்து, திரேகத்தை திடகாத்திரமுண்டாக்கக் கூடியது. குழந்தைகளுக்கு மலச்சிக்கலின் மேல் காணும் சகல ஜுரங்களுக்கும் நேரம் 1-க்கு ஒரு மாத்திரை வீதம் 3 நாள் காலை, காலையில் துளசி சுரசம் பிள்ளைப்பால் இதுகளிலொன்றில் உரைத்து கொடுக்க ஜுரத்துக் கேற்ற பத்தியம் கார்க்க வெத்திலையில் வைத்து சாப்பிட்டு வந்தால் எவ்வித பத்தியமுமில்லை, சிசுக்கள் முதல் உபயோகித்து குணம் பெறக்கூடிய கோஷாயி ஆபீஸ் மாத்திரை சீசா ஒன்று, ஒவ்வொரு இல்லத்திலும் சர்க்கோட் பெட்டியிலும் அவசியம் இருக்க வேண்டியது. கோஷாயி ஆபீஸ் மாத்திரை 51 கொண்ட சீசா ஒன்றுக்கு ரூ. 1—10—0—101 மாத்திரை கொண்ட சீசா ஒன்றுக்கு ரூ. 3—2—0 -வி. பி- பாக்கிங் சார்ஜ் வேறு மலாய் வாசிகள் ஆர்டருடன் ரூ. 1—12—0 சேர்தது அனுப்பி வைக்கவும் சந்தா செம்பர் தெருவிப்போர்களுக்கு மருந்துடன் கால்டஜன்கோஷாயி ஜீவ தாது மாத்திரைகள் கொண்ட டப்பி ஒன்று (10—2—0 விலையுள்ளது) மருந்துடன் இனமாய் சேர்த்து அனுப்பி வைப்போம்.

சோல் ஏஜெண்டு, திருச்சி ஜில்லா பெரம்பலூர் (தாலுகா) ஷாப், மளிகை அண்டு யூனனி வைத்தியமும் நடத்தி வரும், சே. கி. மு. அங்கமுத்துப்பிள்ளை அவர்களிடம் கோஷாயி வைத்திய சாலையின் மற்ற விவரங்களும் தெரிந்து கொள்ளலாம்.

உதவி டாக்டர் T. K. V. Chalam.

டாக்டர் B. A. எதிராஜ்,
(காலரா பைரி) கோஷாயி வைத்தியசாலை,
தென்னூர் திருச்சி.

விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

1.	இயற்கைமதம் ...	0—8—0
2.	சிதம்பர ரகசியம் ...	0—8—0
3.	சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை	0—4—0
4.	பகுத்தறிவேவிடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை (சித்திரப்படங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் உள்ளது) ...	0—6—0
5.	மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை	0—8—0
6.	ஆராய்ச்சி அணிகலம் ...	0—12—0
7.	சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ...	2—0—0
8.	மோட்டாக்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்) ...	2—0—0
	ஈ. வெ. ராமசாமியின் போட்டோபடம் ...	0—8—0
	சுயராஜ்யம் யாருக்கு ...	0—1—0
	சாமிகளின் அடிமைகள் ...	0—12—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிறயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 5 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம்	ரூ.	4—0—0
ரிவோல்ட்டு ஒருவருஷமாலை பைண்ட் செய்தது கிரயம்	ரூ.	4—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு.

பண்டிதர். உயர்திரு. சாமி சிதம்பரனார் அவர்களியற்றிய

மாதர் சுதந்திரம் அல்லது

பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணா 8. (எட்டு)

கிடைக்குமிடம்:—"குடி அரசு" புத்தகாலயம் ஈரோடு,
இம்பீரியல் பிரஸ், மாயவரம்.

"தமிழன்"

மலாய் நாட்டு சுயமரியாதை தமிழ் தினசரி.

உள்நாடு மாத சந்தா $ 1, 00.
வெளிநாடு ,, இந்தியா $ 1, 50,

ஆசிரியர்:—சுவாமி அர்புதானந்தா.

விலாசம்:—மானேஜர் "தமிழன்"
10, ஜெல்ப்ரோட், ஈப்போ.

"சண்டமாருதம்"

சுயமரியாதைத்தமிழ் தினப்பதிப்பு.

அனேக தந்தி செய்திகள்
அச்சமற்ற கண்டனங்கள்
ஆணித்தரமான அபிப்பிராயங்கள்
ருசிகரமான குறிப்புகள்
தேனின் இனிய "திரட்டுப்பால்"
நகைச்சுவை மிக்க நாவல்கள்
மெய்கூச்செறிக்கும் "மின்வெட்டு"
அறிவைப்பெருக்கும் "அஷ்டதிக்கு"
முதலியன "சண்டமாருத"த்தில் வெளியாகின்றன.

சந்தா விபரம்.

உள்நாடு மாத சந்தா	ரூ.	1—4—0
தனிப்பிரதி ...	ரூ.	0—0—9
வெளிநாடு வருட சந்தா	ரூ.	18—0—0
ஆறுமாதம் ...	ரூ.	10—0—0

மானேஜர்
"சண்டமாருதம்"
திருச்சினாப்பள்ளி.

Read the "SUPERSTITION OF KHADI"

A Discussion
By
S. Ramanathan
Pattabhi Sitharamyya
& N. S. Varadachari
in English.

Published by Kudi Arasu Publishing House, Erode.

Price per copy two annas. Send 0-3-0 annas postage stamps for a single copy.

Apply to:—
Manager "Kudi Arasu" Erode.

குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப்பட்டது. இக்கட்டுரைகளைப் படிப்பதால் அனேக சாஸ்திர புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து நிகரற்ற பண்டித ராகலாம். இதன் விலை அணா. 0—8—0

இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்பஇராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள ஊழல்களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப் புரட்டுகளை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0
இரண்டாம் பாகம் அயோத்தியா காண்டம் அணா. 0—8—0

ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக்காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச் சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம். இதை ஒரு முறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின் வண்டவாளம் முழுதும் தெரியும் பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

மநுநீதி மருமம்.

இது மநு தரும சாஸ்திரத்தில் உள்ள அநீதிகளையும், பார்ப்பனர், பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்துவதற்கு ஏற்படுத்தியுள்ள சூழ்ச்சிகளையும் விளக்குவது. இதன் விலை அணா. 0—2—0

இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

இது இராமலிங்க சுவாமியால் பாடிய அருட்பாவில், ஆறும் திருமுறையில் உள்ள பாடல்களிலிருந்து தொகுக்கப் பட்டது. இதில் உள்ள பாடல்களால், வேதம், புராணம், மதம் முதலியவைகளின் சூள்ச்சிகளையும், அவைகள் பொய் என்பதையும் உணரலாம். இதன் விலை அணா. 0—2—0

சுயமரியாதைத் தாலாட்டு.

இதில் தீண்டாமைக் கொடுமை, சாதி சமயக் கொடுமை, ஏழை பணக்காரக் கொடுமை முதலியவற்றைக் கண்டித்துக் கூறப்பட்டிருக்கிறது. இனிய பாடல் எளிதில் பொருள் விளங்கும். இதன் விலை அணா. 0—2—0

சோதிடப் புரட்டு.

இதில், சோதிடம் என்பது பொய் என்பதையும், பார்ப்பனர்களும், புரோகிதர்களும் ஜனசமூகத்தை ஏமாற்றுவது தான்சோதிடமென்பதையும் இனிமையான சுலபமான-பாடல்களால் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா. 0—2—0

ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜன சமூகம், சீர்திருத்தம் பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக் காணலாம். மக்கள் அடிமைப்பட்டுப் பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம், ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும். இதன் விலை அணா. 0—2—0.

சுயமரியாதைப்பாடல்.

இதில் சுயமரியாதைக் கொள்கைகளை விளக்கி, இனிமையான புதிய வர்ணமெட்டுகளில் பாடிய பாடல்கள் அடங்கியுள்ளன. இதன் விலை அணா 0—2—0.

தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறுவேடம் பூண்டு பொதுஜனங்களுக்குப் புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது. இதன் விலை அணா 0—3—0

பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப் போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம். இதன் விலை அணா 0—4—0

மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னிமேயோ" எழுதியதிலுள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும் — நமது நாட்டிலுள்ள வேறு பல ஆபாசங்களையும் எடுத்துக் காட்டிச் சீர்திருத்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது. இதன் விலை அணா 0—3—0

அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரத்திரப் புரட்டுக்களையும் தமிழ்நூல் ஆதாரங்களோடு விளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டது. இதன் விலை அணா 0—2—0

கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் கயவர்களென்றும், இதிகாசப் புராணங்களின் ஆதாரங்களைக்கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது. இதன் விலை அணா 0—2—0

கதர்-மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)

இதில், திரு. எஸ். ராமநாதன் அவர்கள் கதரைப்பற்றிச் செய்த உபந்யாசமும், அதற்குத் திருவாளர்கள், பட்டாபி சித்தாராமையாவும், என். எஸ். வரதாச்சாரியும் எழுதிய மறுப்புரைகளும், அவைகளுக்கு எஸ். ராமநாதன் எழுதிய பதில்களும் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றன. இதைப் படித்தால் கதர்ப் புரட்டை உணரலாம். இதன் விலை அணா 0—2—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.